மீள்பார்வை
මීල්පාර්වෙ
Meelparvai Fortnightly
www.meelparvai.net
සමාජ වෙනසකට නගන හඬ
சமூக மாற்றத்திற்கான குரல்
Registered as a newspaper in Sri Lanka
GPO-QD/63/NEWS/2016 - ISSN 2012-5038
இதழ் - 353 • 07 ஒக்டோபர் 2016 வெள்ளிக்கிழமை • முஹர்ரம் 1438 • விலை 40.00

## புலிகளின் மிருகத்தனமான தாக்குதலுக்கு 24 வருடங்கள்:












# நிகாப் வாஜிப்

## உலமா சபையின் தீர்ப்பால் சமூகத்தில் குழப்பம்

முஸ்லிம் பெண்களின் ஆடை சம்பந்தமாக அண்மைக் காலமாகப் பேசப்பட்டு வந்த வரையறைகளுக்கு அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை நிகாப் வாஜிப் எனத் தீர்ப்பளித்ததன் மூலம் முற்றுப் புள்ளி வைக்க நினைத்தாலும் அது சமூக மட்டத்தில் பல்வேறு சர்ச்சைகளைக் கிளப்பி வருகின்றது.

இலங்கை முஸ்லிம்கள் மார்க்க விடயங்களில் ஜம்மியதுல் உலமாவின் வழிகாட்டுதல்களையே இதுவரை நடைமுறைப்படுத்தி வருகின்றனர். நிகாப் வாஜிப் என்ற இந்த தீர்ப்பின் ஊடாக ஜம்மியதுல் உலமாவின் தீர்ப்புக்கு மாறாக நடப்பதற்கு முஸ்லிம் பெண்கள் தற்போது துணிந்து வருகின்றனர். இதனால் முஸ்லிம் சமூகத்தின் கட்டுக்கோப்பு சிதை

(பக்.14)



தேசிய ரீதியாக சுமார் 350 முஸ்லிம் பிரதிநிதிகள் கடந்த புதன்கிழமை (05) முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களை சந்தித்தனர். பத்தரமுல்லையில் இடம்பெற்ற இச்சந்திப்பின்போது 'முஸ்லிம் முற்போக்கு முன்னணி' எனும் அமைப்பு முன்னாள் ஜனாதிபதியின் தலைமையில் ஸ்தாபிக்கப்பட்டது. எதிர்வரும் காலங்களில் முஸ்லிம்களின் உரிமைகளுக்குக் குரல் கொடுப்பதற்காக இவ்வமைப்பு ஸ்தாபிக்கப்பட்டதாக இதன்போது தெரிவிக்கப்பட்டது.

## கிழக்கு மாகாணத்தில் ஆளணி, நிலம் பற்றாக்குறை



கிழக்கு மாகாணத்தில் பல்வேறு துறைகளுக்கும் தேவையான ஆளணியில் பெரும் பற்றாக்குறை நிலவுவதாக தெரிய வருகிறது. 2013 ஆம் ஆண்டில் 1134 ஆகக் காணப்பட்ட ஆசிரியர் வெற்றிடம் தற்போது 5021 ஆக அதிகரித்துள்ளது. ஆகக் கூடுதலாக கணிதப் பாடத்துக்காக 411 வெற்றிடங்களும் ஆங்கிலப் பாடத்துக்கு 365 வெற்றிடங்களும் ஆரம்பப் பிரிவுக்காக 279 வெற்றிடங்களும் நிலவுவதாக கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இம்முறை தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கு மாணவர்களைச் சேர்ப்பதற்காக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலும் (பக்.14)

## மன்னார் மாவட்ட எல்லை நிர்ணயத்தில் தாமதம்



எல்லை மீள்நிர்ணயக் கமிட்டியினர் திருத்தங்களை உள்ளடக்கிய தமது அறிக்கையை நவம்பர் மாதத்தில் முன்வைப்பதைப் பொறுத்து 2017 பெப்ரவரி நடுப் பகுதியில் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடத்தப்படவிருப்பதாக உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்தார்.

இருந்தபோதிலும் ஒக்டோபர் மாத நடுப்பகுதியிலேயே தமது அறிக்கை அமைச்சர் அவர்களிடம் கையளிக்கப்பட்டு விடும் என எல்லை நிர்ணயக் கமிட்டியின் தலைவர் அசோக பீரிஸ் தெரிவித்தார்.

நுவரெலியா, மாத்தளை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய (பக்.14)




## வட்டாரப் பிரிப்பினால் திருகோணமலை மாவட்டத்தில் 20 முஸ்லிம் பிரதிநிதிகள் இழப்பு



திருகோணமலை மாவட்ட உள்ளூராட்சி மன்ற வட்டாரங்களின் எல்லைகளை மீள் நிர்ணயம் செய்யும் போது மாவட்ட முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி தொடர்பாக நியாயம் கோரி கிண்ணியா ஷூறா சபை தொடர்ச்சியான முன்னெடுப்புக்களை மேற்கொண்டு வருகின்றது. (பக்.14)

## சவூதியிலுள்ள இலங்கையர்கள் ஜனாதிபதியிடம் முறையிடலாம்



சவூதி அரேபியாவில் வசிக்கும் இலங்கையர்கள் பயன்பெறத் தக்க வகையில் புதிய இணைய தளமொன்றை ஜித்தாவிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகர் இஸ்லாமியப் புது வருடத்தன்று ஆரம்பித்து வைத்தார். scgjeddah.embassy.gov.lk என்ற இந்த இணைய தளத்தின் ஊடாக ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட எந்த அரச அதிகாரிகளையும் சவூதியில் வசிக்கும் இலங்கையர்கள் தொடர்பு கொள்ள முடியும்.

(பக்.14)

## வறட்சியினால் 200,000 பேர் பாதிப்பு



நிலவி வரும் தீவிர காலநிலை காரணமாக நாடு முழுவதும் இது வரை 51,561 குடும்பங்களைச் சேர்ந்த 208,000 பேர் வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் 69,678 பேரும், வட மாகாணத்தில் 8,600 பேரும், வட மேல் மாகாணத்தில் 8,422 பேரும், வட மத்திய மாகாணத்தில் 110,350 பேரும், சப்ரகமுவ மாகாணத்தில் 10,000 க்கு மேற்பட்டோரும் வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளனர். (பக்.14)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கில் 1108 பாடசாலைகளில் 5021 ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் உள்ளன

## - கிழக்கு முதல்வர் ஹாபிஸ் நஸீர்



கிழக்கு மாகாணத்தில் 1108 பாடசாலைகளில் 5021 ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் உள்ளதாக கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் தெரிவித்தார். கல்வி அபிவிருத்திக்காக வருடாவருடம் ஒதுக்கப்படும் நிதிகளை ஆக்கபூர்வமான முறையில் பயன்படுத்த வேண்டும் என்ற நோக்கில் மட்டக்களப்பு மாவட்ட சகல கோட்டப் பாடசாலைகளுக்கும் நேரடி விஜயம் மேற்கொண்ட முதலமைச்சர் அங்கு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அவர் உரை நிகழ்த்தும் போது..

கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் 5021 ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன. ஆனால் அதனை வெளிப்படுத்தாது மறைக்கப்பட்டுள்ளதனை நான் அறிந்து அதிகாரிகளுக்கு அது சம்மந்தமாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு பணித்துள்ளேன். ஆனால் இன்று கிழக்கு மாகாணத்தில் இருந்து இம்முறை வெளியாகியுள்ள கல்விக் கல்லூரி ஆசிரியர்களை கிழக்கு மாகாணத்துக்கே நியமிக்க வேண்டும் என்றும் கூறியுள்ளேன்.

கிழக்கில். பாரிய ஆளணித் தட்டுப்பாடு காணப்படுகிறது. கடந்த காலங்களில் ஆட்சியில் இருந்தவர்கள் விட்ட தவறினால் இன்று அவைகள் எல்லாவற்றையும் சேர்த்து ஒருங்கிணைத்துச் செல்ல வேண்டிய தேவை எமக்கு ஏற்பட்டுள்ளது. 2013 ஆம் ஆண்டு 1134 வெற்றிடங்கள் காணப்பட்டன. அதுபோல் இன்று 5021 ஆசிரியர்களுக்கான வெற்றிடம் கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் ஏற்பட்டுள்ளன.

கல்விப்பணிப்பாளரின் தகவலின் படி இன்று ஆரம்பப் பிரிவுக்காக 279 ஆசிரியர்களும், கணிதப் பிரிவுக்காக 411 ஆசிரியர்களும் ஆங்கிலத்துக்காக 365 ஆசிரியர்களும் விஞ்ஞானத்துக்காக 36 ஆசிரியர்களும் இதர பாடங்களுக்குமாக இவ்வெற்றிடங்கள் இருக்கின்றன என்று தெரிவித்தார்.

அத்துடன் பாடசாலைகளுக்கு என்றும் இல்லாதவாறு இவ்வருடம் பாரிய நிதிகள் வழங்கப்பட்டுள்ளன. அந்த நிதிகளின் மூலம் நீடித்து நிலைக்கக் கூடிய திட்டங்களை வினைத்திறன் மற்றும் விளை திறனுடன் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற நோக்கில் மாகாணக் கல்விக்குழுவினருடன் பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் பாடசாலைகளின் அபிவிருத்திக் குழுவினரையும் அழைத்து கலந்துரையாடும் நிகழ்வு இரண்டாம் நாளாகவும் இடம் பெற்றது.

குறித்த இக்கலந்துரையாடல்கள் காத்தான்குடி அல்-ஹிரா மகா வித்தியாலயம், ஏறாவூர் மாக்கான் மாக்கார் வித்தியாலயம், ஓட்டமாவடி பாத்திமா பாலிகா வித்தியாலயம், மற்றும் முதல மைச்சின் ஏறாவூர் காரியாலயம் என்பவற்றில் இடம் பெற்றன.

இச்சந்திப்பில் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சிப்லி பாறூக், மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் எம்.ரி.நிஷாம், வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சேகு அலி, கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலை அதிபர்கள், பாடசாலை அபிவிருத்திக் குழுவினர் ஆகியோர் இச்சந்திப்புகளில் கலந்து கொண்டு தங்களின் நிர்வாகத்தின் கீழுள்ள பாடசாலைகளின் தேவை களையும், குறைகளையும் எடுத்துக் கூறியதுடன், உடனடியாகப் பூர்த்தி செய்யக் கூடிய தேவைகளை உடன் நிறைவேற்றிக் கொடுப்பதற்கும் முதல மைச்சர் அதிகாரிகளைப் பணித்தமை குறிப்பிடத்தக்கது.

# பதுரிய மத்திய கல்லூரி முன்னாள் அதிபர் நயீமுடீன் ஆசிரியருக்கு தேசமான்ய விருது





(நஸீஹா ஹஸன்)

கல்வித்துறை வளர்ச்சிக்கு 35 வருட காலம் பாரிய சேவையாற்றியமைக்காக மாவனல்லை பதுரியா மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபரும், மெஸ்டா அச்சக நிறுவனத்தின் தலைவருமான அல்ஹாஜ். எம்.ஜே.எம்.நயீமுடீன் ஆசிரியர் ''மனித உரிமைக்கான தேசமான்ய விருது'' வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

'மனித உரிமைகள் மக்கள் பாதுகாப்பு அமைப்பினால்' கடந்த சனிக்கிழமை (1) கொழும்பில் அமைந்துள்ள விளையாட்டுத்துறை அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடத்தப்பட்ட இந்த விருது வழங்கும் நிகழ்விலேயே இவருக்கும் இந்த கௌரவ விருது, எதிர்க்கட்சியான தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் கே. துரைரெட்னசிங்கத் தினால் வழங்கி வைக்கப்பட்டது.

சுமார் 35 வருடங்களுக்கு மேலாக கல்வித்துறையில் பாரிய சேவையாற்றிய நயீமுதீன் ஆசிரியர், 20 வருடங்கள் அதிபர் சேவையிலும் கடமையாற்றியிருந்தார். இறுதியாக மாவனல்லை பதுரியா மத்திய கல்லூரியின் அதிபராக சேவையாற்றியிருந்த இவர், அப்பாடசாலை தேசிய மட்டத்தில் பல சாதனைகளை நிகழ்த்துவதற்கும், சப்ரகமுவ மாகாணத்தில் முன்னணி பாடசாலையாக தரம் உயர்த்துவற்கும் அளப்பரிய சேவையாற்றியிருந்தார். 2013 ஆம் ஆண்டு ஆசிரியர் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னரும் கல்வித்துறை சார்ந்த பல வேலைத்திட்டங்களை மாவனல்லை கல்வி வலயத்தில் இவர் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு கல்வித்துறையில் பாரிய சேவையாற்றியமைக்காகவே நயீமுடீன் ஆசிரியருக்கு ''மனித உரிமைக்கான தேசமான்ய விருது'' வழங்கப் பட்டிருந்தது.

மனித உரிமைகள் பாதுகாப்பு அமைப்பின் தலைவர் சரீக் மொஹமட் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சரும், ஸ்ரீலங்கா ஹிரா பௌண்டேஷன் தலைவருமான எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். அதுதவிர, விசேட அதிதிகளாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே. துரைரெட்னசிங்கம், மாகாண சபை உறுப்பினர்களான சட்டத்தரணி ஜே. மொஹமட் லாஹிர், ஆர்.எம்.அன்வர் உள்ளிட்ட பலரும் கலந்து சிறப்பித்தனர்.



ஏறாவூரில் சிறுவர் பராமரிப்பு இல்லத்தை புதிதாக நிர்மாணிப்பதற்கு அண்மையில் கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமதினால் அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது.

15 இலட்ச ரூபாய் செலவில் குறித்த சிறுவர் பராமரிப்பு இல்லம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

மேலும், இதன்போது சிறுவர் பராமரிப்பு இல்லத்தில் சிறுவர்களின் தேவைகளுக்கான கட்டில்கள், கதிரைகள், அலுமாரிகள் போன்ற 4 இலட்ச ரூபாய் பெறுமதியான அலுவலக உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வுகளில் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஷிப்லி பாறூக் உட்பட பல அதிகாரிகளும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.




# உலகின் சிறந்த 1000 பல்கலைக்கழகங்களுக்குள், கொழும்பு பல்கலைக்கழகம்




உலகின் சிறந்த 1000 பல்கலைக்கழகங்களுக்குள் மீண்டும் கொழும்பு பல்கலைக்கழகம் இணைந்துள்ளது.

05.10.2016 வெளியிடப்பட்ட Global Universities index பட்டியலுக்கமைய கொழும்பு பல்கலைக்கழகம் இவ்வாறு 1000 பல்கலைக்கழகங்களுக்குள் இடம் பிடித்துள்ளது.

இம்முறை கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு உலகின் 801ஆம் இடம் கிடைத்துள்ளது. இந்த நாட்டின் வேறு எந்த ஒரு பல்கலைக்கழகமும் இந்த 1000 பல்கலைக்கழக பட்டியலுக்குள் இடம்பிடிக்கவில்லை. தற்போது உலகின் மிக சிறந்த பல்கலைக்கழகமாக பிரித்தானியாவின் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகமும், அமெரிக்காவின் கலிபோர்னியா பல்கலைக்கழகம் இரண்டாம் இடத்தையும், அமெரிக்காவின் Stanford பல்கலைக்கழம் மூன்றாம் இடத்தையும், பிரித்தானியாவின் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் 4 ஆம் இடத்தையும் பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாராளுமன்ற உறுப்பினர்கள் 92 பேருக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டுக்கள்



இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்கள் 92 பேருக்கு எதிராக இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பான தகவலை இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழு பணிப்பாளர் நாயகம் தில்ருக்ஷி விக்ரமசிங்க வெளியிட்டுள்ளார்.

பொது மக்களின் பங்களிப்பின்றி இலஞ்சம் மற்றும் ஊழலை தன்னால் கட்டுப்படுத்துவது கடினம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசியலற்ற பொது சேவையின் மூலம் ஊழலை கட்டுப்படுத்த முடியும் என சட்டதாரணி ஜே.சி.வெலிஅமுன இதன் போது தெரிவித்துள்ளார்.

# இலங்கைக்கு ஜீ.எஸ்.பி. பிளஸ்

அடுத்த ஆண்டில் இலங்கைக்கு ஜீ.எஸ்.பி. பிளஸ் சலுகைத் திட்டம் கிடைக்கும் என இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 2017ம் ஆண்டு மார்ச் மாதமளவில் இலங்கைக்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜீ.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகை கிடைக்கும் என சுஜீவ சேனசிங்க இன்று நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

வரிச் சலுகை பெற்றுக் கொள்வது குறித்த விண்ணப்பப்படிவம் ஏற்கனவே ஐரோப்பிய ஒன்றியத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிப் பயங்கரவாதிகளின் மிருகத்தனமான தாக்குதலுக்கு 24 வருடங்கள்:

## துயர்களுக்கு மத்தியில் பள்ளித்திடல் கிராமத்தின் நினைவுகள்

• மிப்றாஷ் முஸ்தபா




பொலன்னறுவை மாவட்டத்தின் எல்லைப் புறமாக அமைந்துள்ள மிகவும் பின்தங்கிய ஒரு முஸ்லிம் கிராமமே பள்ளித்திடல். மெதிரிகிரிய தேர்தல் தொகுதியில் அமைந்திருக்கும் இக்கிராமத்தில் தற்போது 300 குடும்பங்கள் வசித்து வருகின்றன.

1992 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதி நள்ளிரவில் சுமார் 400 குடும்பங்களுக்கு மேல் வாழ்ந்த பள்ளித்திடல் கிராமம் வாகரைப் பிரதேசத்தினூடாக வந்த 200க்கும் மேற்பட்ட புலிப் பயங்கரவாதிகளால் சுற்றி வளைக்கப்பட்டு அதிகாலை 4 மணி முதல் 7 மணி வரை ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், முதியோர்கள் என்ற எந்தப் பாகுபாடுமின்றி மிகக் கொடூரமான முறையில் கொல்லப்பட்ட அப்பாவி முஸ்லிம்களின் இரத்த சரித்திரம் இந்நாட்டு வரலாற்றில் கரும் புள்ளிகளால் பதியப்பட வேண்டிய ஒன்று.

புலிப் பயங்கரவாதிகளின் இந்த மிலேச்சத் தனமான தாக்குதலில் 243 பேர் ஷஹீதாக்கப்பட்டதோடு, நூற்றுக் கணக்கானோர் படுகாயமடைந்தனர். படுகாயமடைந்த பலர் சில நாட்களில் மரணமடைந்தனர். இவ்வாறு கிட்டத்தட்ட 285 பேர் மொத்தமாக இத்தாக்குதலில் ஷஹீதாக்கப்பட்டனர்.

தாங்கள் எதற்காகக் கொல்லப்படுகிறோம் என்பதை அறியாமலேதான் அப்பாவி முஸ்லிம்கள் அன்று கொல்லப்பட்டனர். இன்று வரைக்கும் இந்தப் படுகொலைக்கான காரணத்தை அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. விடுதலைப் புலிகளின் மனிதாபிமானமற்ற செயலினால் இம்மக்களின் சொத்துக்கள் அனைத்துமே சூறையாடப்பட்டன. அப்பாவிக் குழந்தைகள் அனாதைகளாக்கப்பட்டன. பெண்கள் விதவைகளாக்கப்பட்டனர். இளைஞர்கள் அங்கவீனர்களாக்கப்பட்டனர்.

எதிர்வரும் 15ம் திகதியோடு தாக்குதல் இடம்பெற்று 24 வருடங்களாகின்றன. இத்தருணத்தில் பள்ளித்திடல் கிராம மக்கள் இன்னமும் பல்வேறு கஷ்டங்களோடுதான் தமது வாழ்வை கடத்திக் கொண்டிருக்கின்றனர். இதுவரை எந்த முஸ்லிம் அரசியல்வாதிகளும் அவர்களது குறைகளைக் கேட்டறியவில்லை. தம்முடன் இணைந்துகொள்ளுமாறு எந்தவொரு தமிழ்த் தரப்பும் இந்தப் படுகொலைக்காக தமது அனுதாபத்தையோ கண்டனத்தையோ தெரிவிக்கவில்லை.

புலிகளின் இத்தாக்குதல் காரணமாக முழுமையாக அழிந்துபோன இக்கிராமத்தில் மனிதர்கள் வாழ்வதற்கான சாதக நிலைமைகள் அற்றுப் போயின. இதன் காரணமாக இக்கிராம மக்கள் அருகிலுள்ள தம்பால, முஸ்லிம் கொலனி, சுங்காவில் போன்ற பகுதிகளில் முகாம்கள் அமைக்கப்பட்டு தங்க வைக்கப்பட்டனர். சுமார் 10 வருட அகதி வாழ்க்கைக்குப் பின் 2001 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட சமாதான உடன்படிக்கையை அடுத்து மீண்டும் பள்ளித்திடல் கிராமத்தில் மீள்குடியமர்த்தப்பட்டனர்.

இவ்வாறு மீள் குடியமர்த்தப்பட்ட இம்மக்கள் இன்றுவரை பல்வேறு கஷ்டங்களோடுதான் வாழ்ந்து வருகின்றனர். விவசாயம், மீன்பிடி, விறகு வெட்டுதல் போன்ற தொழில்களில் ஈடுபட்டு வரும் இக்கிராம மக்கள் குடி நீர்ப் பிரச்சினை, சுகாதாரப் பிரச்சினை, காட்டு யானைகளின் அட்டகாசம் என்பவற்றால் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

ஒக்டோபர் 15 ஆம் திகதி பள்ளித்திடல் படுகொலை இடம்பெற்று 24 வருடங்களாகும் தறுவாயில் இம்மக்கள் எம்மோடு தமது நினைவுகளையும், கஷ்டங்களையும் இவ்வாறு பகிர்ந்து கொள்கின்றனர்.

நன்றி: M.H.M. வஸீர்

### இதுவரை எம்மை யாரும் வந்து பார்க்கவுமில்லை. எமது குறைகளை கேட்கவுமில்லை



A.L. அப்துர் ரஸ்ஸாக் (66 வயது)

1992இல் புலிகள் தாக்கிய போது எனக்கு 42 வயது இருக்கும். எமது கிராமம் மிகவும் எல்லைப் புறமாக இருக்கிறது. இவ்வளவு காலமும் மிகவும் கஷ்டத்தோடுதான் வாழ்ந்து வருகின்றோம்.

இதுவரை எம்மை யாரும் வந்து பார்க்கவுமில்லை. எமது குறைகளை கேட்கவுமில்லை. எமது தொழில் விவசாயம். கோடை காலத்தில் வரட்சியாலும் மாரி காலத்தில் வெள்ளத்தாலும் எமது தொழில் பாதிக்கப்படுகின்றது. பயங்கரவாதிகளின் தாக்குதலால் மிக மோசமாக எமது கிராமம் பாதிக்கப்பட்டது. எனது குடும்பத்தைச் சேர்ந்த 40 பேர் இதனால் கொல்லப்பட்டனர்.

### புலிப் பயங்கரவாதிகளால் எமது கிராமம் முற்றாக அழிக்கப்பட்டது



M.S. அப்துல்லாஹ் (51 வயது)
(தலைவர் - பள்ளித்திடல் மஸ்ஜிதுல் ழாபிரீன் ஜூம்ஆ பள்ளிவாயல்)

1992ம் ஆண்டு ஒக்டோபர் 15ம் திகதி இடம்பெற்ற புலிகளின் தாக்குதலால் மோசமாக பாதிக்கப்பட்ட கிராமம்தான் எமது பள்ளித்திடல் கிராமம். எனக்கு அப்போது வயது 27. தாக்குதல் நடத்தப்பட்ட நாள் நான் ஊரில் இருக்கவில்லை. எனது தம்பியை பார்ப்பதற்காக எனது மூத்த மகனைக் கூட்டிக் கொண்டு கொழும்பு சென்றிருந்தேன்.

செய்தி கேள்விப்பட்டதும் உடனடியாக அங்கிருந்து வேன் ஒன்றில் ஊர் திரும்பினேன். புலிகள் எமது கிராமத்தின் மீது மேற்கொண்ட தாக்குதலால் 243 பேர் கொல்லப்பட்டனர். இந்த ஜனாஸாக்கள் அக்கம் பக்கத்திலுள்ள மக்களின் உதவியோடு எமது பள்ளிவாயல் மையவாடியில் அடக்கம் செய்யப்பட்டன. குறித்த தினத்தில் எமது அயல் கிராமத்தில் வசிக்கின்ற சிங்கள மக்களின் உதவியை மறக்க முடியாது.

எனது மனைவி இந்தத் தாக்குதலில் மிக மோசமான காயங்களுக்கு உள்ளானார். கிட்டத்தட்ட 10 வருடங்கள் அகதிகளாக வாழ்ந்திருக்கின்றோம். 2002ஆம் ஆண்டுதான் மீண்டும் இங்கு வந்து குடியமர்ந்தோம். அப்போது எமது கிராமம் முற்றாக சேதமடைந்திருந்தது.

ஆரம்பத்தில் இருந்தே எமது வாழ்க்கையை தொடங்கினோம். அந்த நேரத்தில் எமது பிரதேசத்தில் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த மஜீத் ஹாஜியாரும் அவரது மருமகன் அன்சார் ஹாஜியாரும் நிறைய உதவிகளை எமக்கு செய்தார்கள். அதனை நாம் ஒருபோதும் மறக்க மாட்டோம்.

### பாதிப்புக்குள்ளான பெற்றோரின் கவலைகள் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளில் பிரதிபலிக்கின்றன



M.I.M. கபீர்
(அதிபர் - பொ/அந்நூர் முஸ்லிம் கனிஷ்ட வித்தியாலயம், பள்ளித்திடல்)

இந்தப் பாடசாலை புலிகள் தாக்குதல் நடாத்திய வேளை சின்னக் கொலனி எனும் இடத்திலேயே இயங்கி வந்தது. 1992 ஒக்டோபர் தாக்குதலால் இந்தப் பாடசாலை முற்றாகப் பாதிக்கப்பட்டு, அதன் பிறகு தற்போது அமைந்திருக்கும் இந்த இடத்தில் 2004 செப்டம்பர் 23ம் திகதி முதல் இயங்கி வருகின்றது.

தற்போது இந்தப் பாடசாலையில் தரம் 1 முதல் 11 வரை 200 மாணவர்கள் கல்வி கற்று வருவதோடு 11 ஆசிரியர்களும் காணப்படுகின்றனர். இந்தப் பாடசாலையில் இன்னமும் கணித, விஞ்ஞானப் பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லாமல் இருப்பது மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு பெரும் பாதிப்பாக அமைந்துள்ளது.

இந்தப் பாடசாலை அதி கஷ்டப் பிரதேச பாடசாலையாகும். மாணவர்கள் பொருளாதார ரீதியாக மிகவுமே பாதிக்கப்பட்டவர்கள் என்றபடியால் மேலதிக புத்தகங்கள், கற்றல் உபகரணங்களை வாங்குவதில் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

பெண் பிள்ளைகளின் இள வயதுத் திருமணம் மற்றும் ஆண் பிள்ளைகள் தொழில் ரீதியான முயற்சிகளில் ஆர்வம் காட்டல் என்பன இப்பிரதேச மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு பாரிய அச்சுறுத்தலாகும். புலிகளின் தாக்குதல் காரணமாக பாதிக்கப்பட்ட இப்பாடசாலை மாணவர்களின் பெற்றோர்கள் அதிலிருந்து மீளாமையால் தமது பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளில் ஆர்வம் செலுத்துவதும் குறைவாகக் காணப்படுகின்றது.

### நான் தப்புவேன் என்று நினைத்துக் கூடப்பார்க்கவில்லை



V.L. முதலியார் (64 வயது)
(அகதி முகாம் தலைவர்)

1992 ஆம் ஆண்டு 10 ஆம் மாதம் 15 ஆம் திகதி புலிகளால் எமது கிராம மக்கள் ஈவிரக்கமின்றி சுடப்பட்டும் வெட்டப்பட்டும் கொலை செய்யப்பட்டனர். அந்த நேரம் என்னிடம் துப்பாக்கி ஒன்று இருந்தது. புலிகளை சுடுவோம் என துப்பாக்கியை எடுத்த போது புலிகளின் வெடில் சத்தத்தைக் கேட்டவுடன் சுடக்கூடிய எண்ணமே இல்லாமல் போய்விட்டது. நான் தப்புவேன் என்று நினைத்துக் கூடப் பார்க்கவில்லை. அல்லாஹ் என் மீது கொண்ட கருணையால்தான் தப்பியிருக்கின்றேன்.

அந்நேரம் MP ஆக இருந்த மஜீத் ஹாஜியார் எங்களை கூட்டிக் கொண்டு பாடசாலை ஒன்றில் பாதுகாப்பாக சேர்த்தார். அதன்பின் தம்பால முகாமில் வாழ்ந்தோம். எனது மகனின் முகத்திலும் குண்டு அடிபட்டது. புலிகள் ஏன் எம்மை தாக்கினார்கள் என்பது இதுவரை எமக்குத் தெரியாது. அல்லாஹ் மாத்திரமே அறிந்தவன்.

### எனது கண் முன்னால் எனது பிள்ளையின் நெற்றியில் குண்டு பாய்ந்தது



அலி முஹம்மது முஹம்மத் காஸிம் (63 வயது)

1992 ஒக்டோபர் 15ஆம் திகதி இடம்பெற்ற சம்பவத்தின் பாதிப்பில் இருந்து என்னால் இன்னும் மீள முடியவில்லை. தாக்குதல் இடம்பெற்ற போது எனக்கு 39 வயது இருக்கும். நள்ளிரவு 12 மணிக்கே புலிகள் எமது கிராமத்தை சுற்றி வளைத்து விட்டனர். சரியாக அதிகாலை 4 மணியளவில் எமது கிராமத்தை நோக்கி குண்டுகளை வீசத் தொடங்கினர். எம்மீது ஈவிரக்கமின்றி துப்பாக்கிகளால் சுட்டனர். கிட்டத்தட்ட 250 புலிகள் இருப்பார்கள். நாம் எந்தப் பக்கத்தாலும் தப்பிக்க முடியாதவாறு முழுக் கிராமத்தையும் சுற்றி வளைத்துத் தாக்கினர்.

எமது கிராமத்தின் பாதுகாப்புக்காக நின்றிருந்த 22 பொலிஸ்மார்களும் 9 இராணுவத்தினரும் இதில் கொல்லப்பட்டனர். நாம் அனைவரும் வயல்களில் ஒழித்துக் கொண்டிருந்தோம். விடிந்தவுடன் எந்த வெடில் சத்தமும் இல்லை. புலிகள் போய் விட்டனர் என நினைத்து நாம் ஜனாஸாக்களை அடக்கவும் காயப்பட்டவர்களை வைத்தியசாலையில் சேர்க்கவும் தயாரானோம். அந்த நேரத்தில் ஒழித்துக் கொண்டிருந்த புலிகள் மீண்டும் எம்மீது தாக்குதல் நடத்தினர். இதன்போதே அதிகமான மக்கள் கொல்லப்பட்டனர்.

எனது ஒரு பெண் பிள்ளையும் (8 வயது) கொல்லப்பட்டார். எனது கண் முன்னால் எனது பிள்ளையின் நெற்றியில் குண்டு பாய்ந்தது. எனது நெஞ்சுப் பகுதியில் 2 சன்னங்கள் காணப்படுகின்றன. இதனால் இதய நோயால் பாதிக்கப்பட்டுள்ளேன். என்னால் அதிக தூரம் நடக்க முடியாது. பெரிய வேலைகள் எதுவும் செய்யவும் முடியாது.

### குழந்தைகளை அம்மிக் கல்லில் அடித்துக் கொல்லுமாறு சத்தமிட்டுக் கொண்டிருந்தனர்



V.M. அஸ்லியத் உம்மா (46 வயது)

புலிகளின் தாக்குதலில் கடுமையாகப் பாதிக்கப்பட்டேன். பெண்களை வெட்டித் தள்ளுங்கள் என கடுமையான குரலில் அவர்கள் சத்தமிட்டதை என்னால் கேட்க முடிந்தது. எனது 5 மாதக் குழந்தையை கல்லில் மோதி கொலை செய்வதற்காகக் கேட்டனர். தோட்டாக்களை செலவளிக்காதீர்கள். குழந்தைகள் அனைத்தையும் அம்மிக் கல்லில் அடித்துக் கொல்லுங்கள் என்று சத்த மிட்டுக்கொண்டிருந்தனர். நான் எனது குழந்தையை சீலையால் மூடி மறைத்து விட்டேன். அதன்பின் 4 பேர் என்னைத் துரத்தி வந்தனர். குண்டு பட்டதில் எனது உடல் முழுக்க இரத்தம் காணப்பட்டது. நான் பிள்ளையைத் தூக்கிக் கொண்டு ஓடும் போது இடையில் மயங்கி விழுந்து விட்டேன். நான் மௌத்தாகி விட்டதாக நினைத்து என்னை அடக்கம் செய்ய உறவினர்கள் முற்பட்டனர். பிறகு எனது நாக்கில் ஈரம் இருப்பதைக் கண்டு உடனடியாக பொலன்னறுவை வைத்தியசாலைக்கு கொண்டு சென்று இரத்தம் பாய்ச்சினர். இதன்பின் கொஞ்சம் கொஞ்சமாக எனக்கு நினைவு வந்தது. எனது பிள்ளையையும் வைத்தியசாலையில் 5 நாட்களின் பின் தேடிப் பெற்றுக் கொண்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

EDITORIAL

49, [illegible] Mahinda Dharma Mawatha (Perth Road), Colombo-09.
Tel: 0112 691258 077 222 7569
E-mail: meelparvai@gmail.com, Web: www.meelparvai.net

## வெட்கப்பட வேண்டும்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து பிரிந்து சென்று புதிய கட்சி அமைப்பதாக கூப்பாடு போட்டவர்கள் தற்போது அந்தக் கோஷத்திலிருந்து பின்வாங்கத் தலைப்பட்டிருக்கிறார்கள். நாட்டைச் சூறையாடி ஊழல் மோசடிகளினால் நாட்டைக் கடன் சுமையில் தள்ளி நாட்டையே குட்டிச் சுவராக்கி விட்டு, மீண்டும் தம்மிடம் நாட்டை ஒப்படைக்கும்படி போராட்டம் நடத்துகின்ற ராஜபக்ஷ குடும்பத்தவர்களை நம்பிக் களமிறங்குவதில் இருந்து சிங்கள சமூகம் படிப்படியாக தூரமாகி வருகிறது.

சிங்களவர்களை மட்டுமே வைத்து தம்மால் ஆட்சியமைக்க முடியும் என்பதை நிறுவப் போய் மஹிந்த அணியினர் அடைந்த தோல்வியை வரலாறு பதிந்து வைத்துள்ளது. இதற்கு முன்னரும் நாட்டிலே உருவான சிங்ஹலே மகா சபா, சிங்ஹலயே பூமி பத்ர கட்சி போன்ற பல கட்சிகளும் இன்று மக்களால் மறக்கடிக்கப்பட்டுள்ளன. மஹிந்த அணிக்குச் சார்பாக கடந்த பாராளுமன்றத் தேர்தலில் களமிறங்கிய தீவிர இனவாதக் கட்சியான பொது ஜன பெரமுன மக்களால் இருந்த இடம் தெரியாமல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வரலாறுகள் சிங்கள இனவாதிகளின் வாக்குகளை மட்டும் நம்பி தம்மால் மீண்டும் ராஜபாட்டையை அனுபவிப்பதற்கான சந்தர்ப்பத்தைப் பெற முடியாது என்ற பாடத்தை மஹிந்த ராஜபக்ஷ குடும்பத்தினருக்கு உணர்த்தியுள்ளன. இதனால் தான் முஸ்லிம் முற்போக்கு முன்னணி என்ற பெயரில் முஸ்லிம்களின் வாக்குகளை தம்வசப்படுத்துவதற்கான முயற்சிகள் மஹிந்த அணியினரால் முடுக்கி விடப்பட்டுள்ளன.

இலங்கை முஸ்லிம்கள் மஹிந்த ஆட்சியின் கறைபடிந்த காலங்களை ஒருபோதும் மறக்க மாட்டார்கள். 1915 கலவரத்துக்குப் பின்னர் இலங்கை முஸ்லிம்கள் பாதுகாப்பின்றி அச்சத்தில் உறைந்து போன அனுபவத்தினை ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு இவருடைய காலத்திலேதான் வரலாற்றில் மீண்டும் அனுபவித்தார்கள். முஸ்லிம்களுக்கெதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட இனவிரோதச் செயற்பாடுகளை அடக்குவதற்கான எந்த முயற்சிகளையும் எடுக்காமல் இனவாதச் சக்திகளுக்கு துணை போகக் கூடியதாக அவருடைய ஆட்சி அமைந்திருந்தது. இந்த இனவாதச் செயற்பாடுகள் தற்போது கட்டுப்பாட்டுக்குள் வந்தாலும் இதனால் விதைக்கப்பட்ட இனவாத நச்சு விதைகள் சிங்கள சமூகத்தின் மத்தியில் இன்னும் முளைவிட்டுக் கொண்டுதானிருக்கின்றன.

இந்த அராஜகத்தை பொறுக்க முடியாமல் தான் வரலாற்றில் முதற்தடவையாக முஸ்லிம்கள் அனைவரும் ஒன்று திரண்டு வாக்களித்து மஹிந்தரின் ஆட்சியை மாற்றினார்கள். இந்தத் தோல்விக்குப் பின்னர் மல்வானை முஸ்லிம்கள் மஹிந்தரை அழைத்து முதலாவது கூட்டத்தை நடத்தினர். பின்னர் பேருவல முஸ்லிம்கள் மஹிந்தரை அழைத்து இப்தார் நிகழ்ச்சியை நடத்தினர். இந்தத் தொடரில் அவர் பெற்ற உற்சாகமே முஸ்லிம் முற்போக்கு முன்னணியை அமைப்பதற்கு அவருக்கு தைரியமளித்திருக்கிறது.

இந்த முன்னணியை அமைப்பதற்கும் முஸ்லிம்களை அழைத்து மாநாடு நடத்துவதற்கும் உழைத்த கூட்டங்கள் எல்லாம் முஸ்லிம்கள் நசுக்கப்படுகின்ற காலங்களில் மஹிந்தருடன் தான் இருந்தார்கள். இத்தனை பாதிப்புக்களுக்கும் மத்தியில் அவர்கள் முஸ்லிம்களுக்காக எதுவுமே செய்யவில்லை. மஹிந்தரின் குடும்பத்தைப் போல தமது சொந்த வாழ்க்கை வசதிகளை அதிகரித்துக் கொள்வதே மஹிந்தருடன் ஒண்டியிருப்பதற்கான அவர்களது நோக்கமாக இருந்தது. சமூகத்துக்காகப் பேசினால் தமக்குக் கிடைக்கின்ற எச்சில்கள் அற்றுப் போய் விடுமோவென அவர்கள் பயந்தார்கள்.

தற்பொழுது மீண்டும் மஹிந்த தரப்பினருடன் முஸ்லிம்களை இணைக்கச் செய்கின்ற இவர்களின் பணியின் பின்னாலும் நிச்சயமாக சமூக நலன் இருக்கப் போவதில்லை. அவ்வப்போது தமக்கு விழுகின்ற எலும்புத் துண்டுகளுக்காக வாலாட்டுகிறவர்களின் செஞ்சோற்றுக் கடனாகவே இந்த ஏற்பாடுகளை முஸ்லிம் சமூகம் பார்க்க வேண்டும். முஸ்லிம் சமூகத்துக்குள்ளாலேயே இருந்து முஸ்லிம் சமூகத்தை பலிக்கடாவாக்கி வயிறு வளர்க்கின்ற இத்தகைய குள்ள நரிகளையிட்டு முஸ்லிம் சமூகம் அவதானமாக இருக்க வேண்டும்.

பல தடவைகள் நம்பி ஏமாந்த அனுபவம் இந்த நேரத்தில் முஸ்லிம் சமூகத்துக்கு பாடம் கற்றுத் தந்திருக்கிறது. தோல்வியடைந்த பின்னரான காலத்திலும் கூட தனது தவறுகளை ஏற்றுக் கொள்ளவோ, திருத்திக் கொள்ளவோ செய்யாமல் வெட்கமின்றி மீண்டும் முஸ்லிம் சமூகத்தை தம்மோடு இணைந்து கொள்ளுமாறு கோருவதனை நம்பி ஏமாறுவதற்கு முஸ்லிம் சமூகம் ஒன்றும் வெட்கம் கெட்ட சமூகம் இல்லை.

# போலி நம்பிக்கைகளின் தீவு

• திஸரணீ குணசேகர

1970 ஆம் தசாப்தத்தின் முதல் பாதியில் தீ மிதித்தல் தொடர்பில் மேலெழுந்த சர்ச்சைகள் இன்று மக்கள் மனதை விட்டும் நீங்கியுள்ளது. ஒரு குழந்தையை இடுப்பில் சுமந்து கொண்டு தீ மிதிக்கச் சென்ற பெண் தீப்பிழம்பில் விழுந்து குழந்தை மரணித்த சம்பவத்தினை தொடர்ந்து ஆரம்பமான நிகழ்வுகள் ஒரு முக்கியமான கட்டத்தினை எட்டாமல் இருந்திருப்பின் மத அனுஷ்டானங்களில் ஈடுபடாமல் தீ மிதிக்குமாறு அப்போதைய கலாச்சார விவகார பிரதியமைச்சர் சோமவீர சந்திரசிரி கட்டளையிட்டிருப்பார்.

1971 இல் நவம் போயா தினத்தில் அத்திடிய பிரேமா கல் மோலவத்தையில் வசித்த லயனல் பிரணாந்து என்பவர் கதிர்காமம் தேவாலயத்தில் பெருந்திரளானோருக்கு மத்தியில் எவ்வித மத அனுஷ்டானங்களிலும் ஈடுபடாமல் இறைச்சி சாப்பிட்டு சாராயம் குடித்து வெற்றிகரமான முறையில் தீ மித்தித்தார்.

இச்சம்பவத்தினை தொடர்ந்து நாடு முழுவதிலும் தீ மிதிப்பது தொடர்பில் உத்வேகமொன்று ஏற்பட்டதாகவும் மக்கள் பல்வேறு பிரதேசங்களில் தீ மிதித்தலை பரீட்சித்துப் பார்த்ததாகவும் தர்மபால சேனாரத்ன என்பவர் தனது காரணகாரிய விதியும் கொவுரின் சிந்தனையும் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

1971 பெப்ரவரி 22ம் திகதி அத்த பத்திரிகையில் ஒரு செய்தி பின்வருமாறு இடம் பெற்றிருந்தது.

''அண்மையில் மொரகொல்லை என்னும் ஊரில் நடைபெற்ற தீ மிதிப்பு வைபவத்தில் மஹவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பீ.கே.எஸ். விஜேரத்ன மற்றும் சாஜண்ட் ஏகநாயக்க ஆகியோர் எவ்வித ஆபத்துக்களுமின்றி தீ மிதித்தார்கள். மொரகொல்ல பாடசாலையின் அதிபர் கலாநிதி டபிலியூ.எம். ஹேரத் பண்டா ஏற்பாடு செய்திருந்த இத்தீ மிதிப்புப் போட்டியில் இன்னும் பெருந்திரளான கிராமத்தவர்கள் எவ்வித மறைசக்திகளின் உதவிகளுமின்றி தீ மிதித்தார்கள்.''

பொரலஸ்கமுவையில் இடம்பெற்ற தீ மிதிப்புப் போட்டியில் டொமீ என்னும் நாயும் வெற்றிகரமான முறையில் தீ மிதித்ததாக மற்றுமொரு பத்திரிகைச் செய்தி தெரிவிக்கின்றது.

இற்றைக்கு 45 வருடங்களுக்கு முன்னர் இலங்கை மக்களிடம் காரணகாரியவாதம் அதிகளவில் குடிகொண்டிருந்தது என்பதை மேற்படி சம்பவங்கள் எமக்கு உணர்த்துகின்றன. மறைவான சக்திகள் அல்லது மதம் சார்ந்த பாதுகாப்புகளின்றி தீ மிதிக்க முடியும் என்பதாக ஒருவர் செய்து காண்பிக்கின்ற பொழுது நாடு முழுவதிலுமுள்ள சிங்கள பௌத்தர்களுள் பெரும்பாலானவர்கள் அதை பரீட்சித்துப் பார்த்து உறுதிப்படுத்தினார்கள்.

அன்றைய காலத்தினை விடவும் இன்று இலங்கை தொழில்நுட்ப ரீதியில் கூடுதலாக வளர்ச்சி கண்டுள்ளது. ஆனாலும், அறிவு ரீதியில் இந்நாடு அன்றை விடவும் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது. சாஸ்திரக்காரர்களினதும் குறிசொல்பவர்களினதும் கருத்துக்களை நம்பி இரண்டு வருடங்களுக்கு முன்பாகவே ஜனாதிபதித் தேர்தலொன்றை நடாத்திய முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு நேர்ந்த கதி மூட நம்பிக்கையாளர்களது போலித்தனத்தை தோலுரித்துக் காட்டும் சிறந்த உதாரணமொன்றாகும்.

மை வெளிச்சம் பார்த்தல், சாஸ்திரம் பார்த்தல், சுப நேரம் கணித்தல், ஜோசியம் பார்த்தல் போன்ற விடயங்கள் தீக நிகாயாவில் 'சாமக்ஞ பல' சூத்திரத்தில் மிருக இனக் கலை (Animal Arts) என்பதாகக் குறிப்பிடப் பட்டுள்ளது.

புத்த பெருமானின் தூய மதம் இலங்கையில் மாத்திரமே இருப்பதாக பௌத்தர்கள் நம்புகிறார்கள். ஆனாலும் சாமக்ஞ பல சூத்திரம் என்ற பெயரில் வெறுப்புடன் ஒதுக்குகின்ற நம்பிக்கை வழிபாடுகளாகக் குறிப்பிடப்பட்டு, அவற்றின் உறைவிடமாக இலங்கை மாறியிருப்பது கவலைக்குரிய விடயமாகும்.

21 ஆம் நூற்றாண்டின் இரண்டாம் தசாப்தத்தில் இந்நாட்டு மக்கள் செய்து வருகின்ற ஒரு சில செயற்பாடுகளை பார்க்கும் பொழுது இலங்கை ஒரு மதத் தீவா அல்லது குருட்டு நம்பிக்கைகளின் இராச்சியமா என்கின்ற கேள்வியே எழுகின்றது.

சாஸ்திரம், ராசி பலன், கிரக நட்சத்திரம், பூஜை வழிபாடுகள் போன்ற கிரிகைகள் தொடர்பில் கண்மூடித்தனமான முறையில் நம்பிக்கை கொள்வதினால் ஏற்படுகின்ற [illegible] தொடர்பில் இற்றைக்கு [illegible] வருடங்களுக்கு முன்னர் தொட்டு நாம் கேள்விப்பட்டு வருகின்றோம். இது தொடர்பிலான புதிய சம்பவம் பிலியந்தலையில் பதிவாகியுள்ளது.

தோல் நோயொன்றை குணப்படுத்திக் கொள்வதற்கு நடாத்தப்பட்ட பூஜையொன்றில் மந்திரவாதியொருவர் வழங்கிய திரவத்தை குடித்ததனால் சித்திரக் கலைஞர் ஒருவர் மரணித்த செய்தி செப்படம்பர் 14 ஆம் திகதி லங்காதீப பத்திரிகையில் பிரசுரமாகியிருந்தது.

இச்செய்தியின் படி, சந்தேகத்திற்குரிய மந்திரவாதி பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார். விரைவாக பொலிஸ் பரிசோதனைகளை முடித்து, மந்திரவாதிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்கின்ற பொழுது அவ்விசாரணைகளின் மூலம் சாதாரண அறிவின் எல்லையையும் தாண்டிய குருட்டு விசுவாசங்களின் பிரதிபலிப்புக்களை புரிந்துகொள்ள முடிகிறது.

மறை சக்திகளின் மீது வைக்கின்ற குருட்டு நம்பிக்கைகள் ராஜபக்ஷ ஆட்சியில் தீர்மானம் மிக்கதொரு சக்தியாக மாறியிருந்தது. இதன் பெறுபேறாக வரலாற்றில் முதற் தடவையாக குற்ற விசாரணைகள் திணைக்களம் (CID) ஜோதிடர் ஒருவரை கைதுசெய்திருந்தது. இவர் எதிர்க்கட்சிக்கு விசுவாசமான ஒருவராக இருந்ததுடன், 2009 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் கிரக ராசியில் ஏற்பட்டுள்ளதொரு மாற்றம் ராஜபக்ஷ ஆட்சிக்கு தீங்கு பயக்கும் என்பதாக எதிர்வு கூறலொன்றை வெளிப்படுத்தியிருந்தார். இதன் காரணமாகவே அவர் கைதுசெய்யப்பட்டார்.



பின்னர் அவர் ராஜபக்ஷவுக்கு சார்பான ஒருவராக சிறையில் இருந்து வெளியேறினார். இவ்வரசியல் மாற்றம் எந்தளவுக்கு உக்கிரமடைந்ததென்றால், 2015 ஜனாதிபதி தேர்தலில் ராஜபக்ஷ வெற்றி பெறுவார் என்றும், அவர் பெற்றி பெறாவிட்டால் தன்னை தானே துப்பாக்கியினால் சுட்டுக் கொள்வதாகவும் அவர் தொலைக்காட்சி நேரடி ஒளிபரப்பு நிகழ்சியொன்றில் கலந்து கொண்டு குறிப்பிட்டிருந்தார். ராஜபக்ஷ வெற்றி பெறவுமில்லை. பண்டார தன்னைத் தானே சுட்டுக்கொள்ளவுமில்லை.

ஜோசியர்கள் அரசியல் ஆய்வாளர்களின் பணியைச் செய்த யுகம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதானது, 2015 ஜனாதிபதி தேர்தலில் ஏற்பட்டதொரு சாதகமான மாற்றமொன்று எனலாம். ஆனாலும் இப்பயன் மிக்க மாற்றம் இன்னும் எவ்வளவு காலம் நீடிக்கும் என்கின்ற பிரச்சினை எழுகிறது. இம்மாதம் இடம்பெற்ற மற்றுமொரு சம்பவம் இதற்கு சான்று பகர்கின்றது.

கடந்த காலப்பகுதியில் மிகவும் சர்ச்சைக்குரிய சம்பவமொன்றில் தொடர்புபட்டிருந்த நபரொருவர் இன்று ஜோசியராக செயற்படுகின்றார். தற்போதைய ஜனாதிபதி தொடர்பில் தெரிவித்த மோசமான கருத்தொன்று பற்றி விசாரிப்பதற்கு தன்னை குற்றப்புலனாய்வுத் திணைக்களம் அழைத்ததாக அவர் டெய்லி மிரர் பத்திரிகைக்கு தெரிவித்திருந்தார்.

ராஜபக்ஷ ஆட்சிக்காலப் பகுதியில் உருவான மிகவும் கொடூரமான, வன்முறை மிக்க குற்றச் செயல்கள் இன்றும் அவ்வாறே தொடர்ந்த வண்ணமுள்ளன. இவ்வாறான குற்றச் செயல்களைத் தடுப்பதற்கு தங்களது முழு அவதானத்தையும் செலுத்த வேண்டிய குற்றப் பரிசோதனைகள் திணைக்களம் ஜோசியக்காரர்களின் பின்னால் துரத்துவது எதற்கு? இத்தகைய மடத்தனமான செயல்களுக்கு பொறுப்புச் சொல்ல வேண்டியது யார்?

2016 ஆம் ஆண்டு, 2009 ஆம் ஆண்டை விடவும் முற்றிலும் வித்தியாசமானது என்கின்ற காரணத்தினால் ஆரம்பத்தில் குறிப்பிட்ட சாஸ்திரக்காரருக்கு வழங்கப்பட்ட தீர்ப்பு இவருக்கு கொடுக்கப்படவில்லை.

2015 ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் ஏற்பட்ட 'ஜனநாயக மாற்றங்களின் விளைவாகவே அவருக்கு புலனாய்வுத் துறையினரின் உத்தரவை எதிர்த்துப் பேச முடிந்தது. அது மாத்திரமல்ல, தன்னை தொடர்ந்தேர்சசியாக தொந்தரவு செய்தால் தான் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்வதாக குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரியொருவரிடம் குறித்த ஜோசியக்காரர் தெரிவித்துள்ளதாகவும் டெய்லி மிரர் பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

இந்நாட்டின் பெரும்பான்மையின மக்கள் தற்போதைய ஆட்சியாளர்களுக்கு அதிகாரத்தை கொடுத்தது ராஜபக்ஷவினர் செய்த தவறுகளையும் மடத்தனங்களையும் மீளவும் செய்வதற்கல்ல.

மறைவான சக்திகளின் மீது நம்பிக்கை கொள்வது ஆதி காலந்தொட்டு நடைமுறையில் இருந்து வருகின்ற பழக்க வழக்கமாக உள்ளது. கடவுள், போன்ற சில மறைவான சக்திகளின் மீது நம்பிக்கை கொள்ள வைப்பதற்கு மனிதனை ஒரு விஷேடமான மரபணு (Gene) தூண்டுவதாக சில விஞ்ஞானிகள் அனுமானித்துள்ளனர்.

Vesicular Monamine Transporter 2 ( VMAT2 ) என்பதாக அறிமுகப்படுத்தப்படுகின்ற இம் மரபணு தொடர்பில் முதன் முதலில் அமெரிக்க மரபணு ஆராய்ச்சியாளர் டின் ஹெமர் கருத்து வெளியிட்டிருந்தார். The god gene How Faith is hardwired into own genes என்னும் நூலில் இக்கற்பிதம் தொடர்பில் விரிவாக தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. தான் விரும்பும் மதச் சிந்தனையை அல்லது கடவுளையோ வேறு சக்திகளையோ பின்பற்றுவது மனிதப் பழக்கமாக இருப்பது மாத்திரமல்ல, அது மனித உரிமையும் கூட.

எனினும் இவ்வாறான நம்பிக்கைகளை தனக்கும் ஏனையவர்களுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் முன்னெடுத்துச் செல்வது 21 ஆம் நூற்றாண்டில் வசிக்கின்ற மக்களின் பொறுப்பாக உள்ளது. வணங்கி வழிபடுதலை அடிப்படையாக கொண்டமைந்துள்ள பௌத்த மதத்தை ஏற்றுக்கொள்வதாகக் கூறுகின்ற மக்களுக்கு இது கடினமான விடயமாக அமையாது.

ஆட்சியாளர்களின் நம்பிக்கைகள் மற்றும் பழக்கங்களை நாட்டின் மக்களும் பின்பற்றுவதனை வரலாறு நெடுகிலும் கண்டுகொள்ள முடியுமான நிகழ்வாக உள்ளது. இன்றும் நாம் சிங்கள பௌத்த கலாசாரம் என்பதாக நம்பிக்கை கொண்டு தழுவிக்கொள்கின்ற பெரும்பாலான கருத்துக்களையும் பழக்க வழக்கங்களையும் நாம் காலனித்துவ ஆட்சியாளர்களிடமிருந்தே கற்றோம்.

இந்நாடு பிரித்தானியாவின் காலனித்துவத்திற்கு உட்பட்டிருந்த காலப்பகுதியில் நீண்ட காலம் இங்கிலாந்தில் தாக்கத்தை ஏற்படுத்தி வந்த விக்டோரியா பழக்க வழக்கங்களும் கருத்துக்களும் இன்றும் எமது சமுதாயத்தில் உயிரோட்டம் மிக்கதாக நிலவி வருவது இதற்கு சிறந்த உதாரணமாகும்.

மறை சக்திகள் தொடர்பில் தங்களது குருட்டு பக்தியை முழு நாட்டிற்கும் காட்சிபடுத்தி, அதை நம்பிக்கை ரீதியாகவும் செயல் ரீதியாகவும் காண்பித்த ராஜபக்ஷவினரின் காலப்பகுதியில் மூட நம்பிக்கைகள் இந்நாட்டில் முன்பொரு பொழுதும் இல்லாத வகையில் அதிகரித்திருந்தன. ராஜபக்ஷவினரை விடவும் மாறுபட்ட புத்த பெருமானின் போதனைகளுடன் ஓரளவேனும் நெருக்கத்துக்குரிய காரணகாரிய விதியைப் பற்றிய முன்மாதிரியொன்றை இந்நாட்டு மக்களுக்கு வழங்குவதற்கு தற்போதைய ஆட்சியாளர்கள் முயற்சிப்பார்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நல்லாட்சி அரசாங்கம் ஒரு வருடத்தைப் பூர்த்தி செய்து நகர்ந்து கொண்டிருக்கும் இத்தருணத்தில், அது எதிர்கொள்ளும் சவால்கள் எல்லையற்று நீள்கின்றன. வெளிப்படைத் தன்மை, பொருளாதார சுபீட்சம், ஜனநாயகம், மனித உரிமைகள், அரசியல் ஸ்திரம், நீதித் துறையின் சுயாதீனம் போன்ற நல்லாட்சியின் பிரத்தியட்சமான சுட்டிகள் பல. இவற்றுள் நாட்டில் அனைத்து மக்களும் அடிப்படை வசதி களோடு வாழ்வதற்கான சூழலை உருவாக்குவது நல்லாட்சியின் முதல் நிலை இலக்காக இருக்க வேண்டும்.

வறுமையோடு போராடாத ஓர் அரசாங்கம் மக்களுக்கு வாஸ்தவமான வாழ்க்கைத் தரத்தை உறுதி செய்யும் என்று எதிர்பார்க்க முடியாது. தெற்காசியாவில் இந்தியா, பாகிஸ்தான் உள்ளிட்டு பெரும்பாலான நாடுகளில் நிலவும் இல்லாதோருக்கும் இருப்போருக்கும் இடையிலான இடைவெளி அதிகரித்து வருகின்றது. இலங்கை கூட இதற்கு விதிவிலக்கல்ல.

2010 இல் இலங்கையின் தனியாள் வருமானம் குறித்து மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வில் கோடீஸ்வரர்களின் எண்ணிக்கை பெருகும் நாடுகளின் பட்டியலில் இலங்கையும் சேர்க்கப்பட்டிருந்தது. ராஜபக்ஷவின் ஆட்சி உச்சத்திலிருந்த காலகட்டம் அது. வெளிநாடுகளில் முடக்கப்பட்ட இலங்கை அரசியல்வாதிகளின் கறுப்புப் பணம் தொடர்பாகவும் திடுக்கிடச் செய்யும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பனாமா பத்திரிகைகளில் இலங்கையர்களின் பெயர்களும் இடம்பெற்றுள்ளன. குறிப்பாக, கடந்த கால ஆட்சியில் அமைச்சர்களாகப் பணியாற்றிய பலர் வெளிநாடுகளில் ஆடம் பரமான சொகுசு வீடுகளையும் தோட்டங் களையும் கொள்வனவு செய்துள்ளனர். சுவிஸ் மற்றும் நியூயோர்க் வங்கிகளில் பெருமளவு பணத்தை வைப்பிலிட்டுள்ளனர். இப்படிப் பார்த்தால் இலங்கையில் செல்வந்தர்- வறியோர் இடைவெளி மென்மேலும் அதிகரித்து வருவதைப் புரிந்துகொள்ளலாம்.

ஒரு நாட்டின் அபிவிருத்தி பல்வேறு காரணிகளைப் பிரதிபலிக்க வேண்டியுள்ளது. வறுமையற்ற தேசம் என்பது மிகப் பெரிய இலக்காகும். இலங்கையில் வறுமை ஒழிப்புத் தொடர்பான திட்டங்கள் அவ்வப்போது முன்னெடுக்கப்பட்டு வந்தாலும், இலங்கை வறுமையை இன்னும் வெல்லவில்லை. பொருளாதார வளர்ச்சி குறித்த மேலைய நாடுகளின் சுட்டிகளை அப்படியே நெட்டுருச் செய்வதனால் நாம் முன்னேறி விட்டோம் என்ற மாயையை உருவாக்குகின்றோம்.

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாத் கப்ரால் இலங்கையர்களின் தலாவீத வருமானத்தை 4500 டொலர்களாக அதிகரிப்பதே மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் நோக்கம் என்று பத்திரிகை பேட்டியொன்றில் தெரிவித்திருந்தார். 4500 அமெரிக்க டொலர்களை ரூபாவில் கணக்குப் பார்த்தால் 2 கோடி இலங்கையர்களில் எத்தனை பேருக்கு அது கிடைக்கும் என்பது கேள்விக்குரியது.

கால் பங்கு மக்கள் கூட இன்னும் 2500 டொலர்களை மாதாந்த வருமானமாக பெறாத ஒரு சூழலில், 4500 டொலர்களைப் பற்றி கப்ராலினால் எப்படிப் பேச முடிந்தது. நியூயோர்க்கை தளமாகக் கொண்ட உலக வங்கியின் தரவுகளில் காட்டப்படும் காகித வளர்ச்சியை வேண்டுமானால் கப்ரால் நம்பிக்கை கொள்ளலாம். ஆனால், கள யதார்த்தம் அதற்குப் புறம்பானது.

நாட்டின் அனைத்து மக்களும் போதுமான வருமானத்தை பெறும் வகையில் பொருளாதார வளர்ச்சியும் அபிவிருத்தியும் அமைய வேண்டும். எந்தவொரு அரசாங்கத்தினதும் முழு முதல் நோக்கம் அடி மட்டம் வரை அனைத்து மக்களும் பசியுடன் வாழக் கூடாது என்பதாக இருக்க வேண்டும்.

உலகின் பல நாடுகளில் வறுமையை ஒழிக்க வேண்டும் என்ற கோஷம் எழுப்பப்பட்டாலும், எல்லா இடங்களிலும் அது வெற்றியைத் தரவில்லை. சில நாடுகளில் மக்கள் பசியினால் அன்றாடம் இறக்கின்ற பரிதாபம் நேர்ந்துள்ளது. மக்கள் தொகைப் பெருக்கமே வறுமைக்குக் காரணம் என்பது முதலாளிய சக்திகளின் விஞ்ஞானபூர்வமற்ற வாதமாகும். வளங்களைப் பகிர்வதிலுள்ள ஏற்றத்தாழ்வே வறுமைக்கும் பட்டினிக்குமான மூல காரணமாகும்.

இலங்கையைப் பொறுத்தவரை, வறுமை தொடர்ந்தும் ஒரு பாரிய சமூகப் பிரச்சினையாகவே வளர்ந்து வருகின்றது. மாறி மாறி வந்த எந்த அரசாங்கத்தினாலும் வறுமையை முற்றாக ஒழிக்க முடியவில்லை. அரசியல் சூதாட்டக்காரர்களின் ஊழல், மோசடிகள் தொடரும் நிலையில், அன்றாடம் மூன்று நேர உணவுக்காகவும் போராடும் மக்கள் இலங்கையில் இருக்கவே செய்கின்றனர்.

இலங்கையை ஆட்டிப் படைக்கும் பிரச்சினைகளில் வறுமை பாரியது. இது குறித்து அரசியல்வாதிகள் பேசுவதில்லை. மெகா பொலிஸ் திட்டங்கள், நிதி நகரங்கள் குறித்து பிரஸ்தாபிக்கும் உயர் மட்டத் தலைமைகள், இலங்கையிலிருந்து வறுமையை விரட்டுதல்



# வறுமை:

# நல்லாட்சி அரசாங்கத்திற்கு முன்னாலுள்ள பாரிய சவால்

குறித்துப் பேச வேண்டும். அதுதான் நல்லாட்சியின் தொடக்கப் புள்ளி.

2009 இல் இலங்கையில் வறுமை 8.9 வீதமாகக் காணப்பட்டது. தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபர திணைக்களத்தின் தகவல்களின்படி, 2012 இலும் 2013 இலும் இலங்கையின் வறுமை 6.7 வீதமாக இருந்தது. வறுமை குறைந்த மாவட்டமாக கொழும்பு இருப்பதோடு, வறுமை ஆகக் கூடிய மாவட்டமாக முல்லைத்தீவு இனங்காணப்பட்டுள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் வறுமையானது 1.4 வீதமாகப் பதிவாகியுள்ளது. ஆனால், வடமாகாணத்திலுள்ள முல்லைத்தீவு மாவட்டத்தில் வறுமை 28.8 வீதமாகப் பதிவாகியுள்ளது. 2009 இல் போர் உக்கிரமடைந்திருந்த காலகட்டத்தில் முல்லைத்தீவு, கிளிநொச்சி போன்ற மாவட்டங்களில் கடும் வறுமை நிலவியது. வறுமை கூடிய இரண்டாம் மாவட்டமாக ஊவா மாகாணத்திலுள்ள மொனராகலை அடையாளம் காணப்பட்டுள்ளது. அம்மாவட்டத்தில் நிலவும் வறுமை 20.8 வீதம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இரண்டு பிரதான கட்சிகளை உள்ளடக்கிய தேசிய அரசாங்கம் எதிர்வரும் ஆண்டை (2017) வறுமை ஒழிக்கும் ஆண்டாக பிரகடனப்படுத்தவுள்ளது. 2017 இல் இதற்கென பல்வேறு பொருளாதார வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சு கூறுகின்றது. முன்னைய அரசாங்கத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ஒன்று தனியாக இயங்கியது. ஆனால், அதன் நடவடிக்கைகள் கடந்த கால இலங்கையில் வறுமையை ஒழிப்பதற்கு எந்தளவு பங்களித்துள்ளது என்பது கேள்விக்குரியதாகும்.

அமைச்சரவை பேச்சாளரும் சுகாதார அமைச்சருமான ராஜித சேனாரத்ன, வறுமை ஒழிப்புத் திட்டம் குறித்து கருத்து வெளியிடுகையில், ''நாட்டில் வறுமையை ஒழிக்க வேண்டும் என்பதில் ஜனாதிபதி ஆர்வமாக இருக்கின்றார். இந்த விடயத்தில் எமது அரசாங்கம் பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுக்கவுள்ளது. குறிப்பாக இரண்டு விடயங்கள் குறித்து இங்கு கவனம் செலுத்த வேண்டும்.

கடந்த 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் தேர்தல் விஞ்ஞாபனத்தை முன்வைத்து பிரச்சாரம் செய்த மைத்திரிபால, நாட்டில் வறுமை ஒழிக்கப்படுவதோடு வறுமையற்ற ஒரு நாடு உருவாக்கப்படும் என வாக்குறுதியளித்திருந்தார்.

இதேபோன்று ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி இலக்குத் திட்டங்களினூடாக வறுமையை அகற்றுவதை நோக்கிப் பயணித்தால் வறுமையை ஒழிக்கலாம். எமது நாட்டை அபிவிருத்தி செய்யும்போது பொருளாதார வளர்ச்சியை மாத்திரம் கவனத்தில் கொள்ள முடியாது. வறுமையை ஒழிக்க வேண்டும், வருமான ஏற்றத்தாழ்வை நீக்க வேண்டும். அநீதிக்கு உட்பட்டுள்ள மக்களை பொருளாதாரப் பலமுள்ளவர்களாக மாற்ற வேண்டும்.

எமது நாட்டில் மாவட்ட ரீதியாக நோக்கும்போது முல்லைத் தீவு மாவட்டத்தில் 28.8 வீத வறுமை காணப்படுகின்றது. கடந்த காலங்களில் ஜனசவிய, சமுர்த்தி, திவிநெகும போன்ற திட்டங்கள் வறுமையை ஒழிக்கப் பயன்படுத்தப்பட்டன. ஆயினும், எதிர்பார்த்தளவு வறுமை பிரச்சினை தீர்க்கப்படவில்லை. இன்னும் நாட்டில் வறுமை நீடிக்கின்றது. இவற்றைக் கருத்திற் கொண்டு 2017 இல் பாரிய வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு நல்லாட்சி அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. அதன்படி, அரசியல்வாதிகள், சிவில் சமூகத்தினர் உள்ளிட்ட அனைவரினதும் ஆலோசனைகளைப் பெற்று வறுமையை ஒழிக்கும் வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம்'' எனக் குறிப்பிட்டார்.

| மாவட்டம் | 2009-2010 | 2012-2013 |
|---|---|---|
| கொழும்பு | 3.6 | 1.4 |
| கம்பஹா | 3.9 | 2.1 |
| களுத்துறை | 6.0 | 3.1 |
| கண்டி | 10.3 | 6.2 |
| மாத்தளை | 11.5 | 7.8 |
| நுவரெலியா | 7.6 | 6.6 |
| காலி | 10.3 | 9.9 |
| மாத்தறை | 11.2 | 7.1 |
| ஹம்பாந்தோட்டை | 6.9 | 4.9 |
| யாழ்ப்பாணம் | 16.1 | 8.3 |
| மன்னார் | -- | 20.1 |
| வவுனியா | 2.3 | 3.4 |
| முல்லைத்தீவு | -- | 28.8 |
| கிளிநொச்சி | -- | 12.7 |
| மட்டக்களப்பு | 20.3 | 19.4 |
| அம்பாறை | 13.8 | 5.4 |
| திருகோணமலை | 13.7 | 9.0 |
| குருனாகல் | 11.7 | 6.5 |
| புத்தளம் | 10.5 | 5.1 |
| அநுராதபுரம் | 5.7 | 7.6 |
| பொலன்னறுவை | 5.8 | 6.7 |
| பதுளை | 13.3 | 12.3 |
| மொனராகலை | 14.5 | 20.8 |
| இரத்தினபுரி | 10.5 | 10.4 |
| கோகாலை | 10.8 | 6.7 |

மூலம்: தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

வறுமையின் பிரதான சுட்டிகளாக பல்வேறு விடயங்களை முன்வைக்கலாம். பொருளாதாரப் பிரச்சினை, குறைந்த வருமானம், வீடின்மை, சுகாதாரத்தைப் பேணுவதிலுள்ள இடர்பாடுகள், போஷாக்கின்மை, தரமான கல்வியைப் பெறுவதிலுள்ள சிக்கல் என வறுமையை அடையாளப்படுத்தும் காரணிகள் பல.

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அரசியல் ஊழல் பாரிய சவாலாகும். அதிலும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிலுள்ள அரசாங்கங்களும் அரசியல்வாதிகளும் நாட்டின் வருமானங்களையும் பொதுச் சொத்துக்களையும் தனிப்பட்ட நோக்கங்களுக்காக கையகப்படுத்தினால் அந்நாடு குட்டிச்சுவராகுவதை தடுத்து நிறுத்த முடியாது.

முன்னைய ஆட்சியில் மக்களை எய்த்துப் பிழைக்கும் மாய மந்திரங்களும் வெறும் முழக்கங்களுமே எஞ்சியிருந்தன. இலங்கையை ஆசியாவின் அதிசயமாக மாற்றுவோம் என்று முழங்கியவர்கள் நாட்டை ஆழ ஊடுருவி அழித்து வந்தனர். பொருளாதாரச் சுரண்டல் அந்த அழிவின் ஆரம்பமாக இருந்தது. முழக்கங்களால் ஒரு நாடு முன்னேற முடியாது என்பதற்கு ராஜபக்ஷவின் பத்தாண்டுகால ஆட்சி முன்னுதாரணமாகும்.

இன்றைய தேசிய அரசாங்கம் நல்லாட்சி என்ற சொல்லை அதன் உண்மைப் பொருளில் அர்த்தப்படுத்த வேண்டுமானால் அதன் முழுக் கவனமும் வறுமை ஒழிப்பில் குவிய வேண்டும். ஊழல் மோசடியற்ற ஆட்சியை நிறுவுவதும் வெளிப்படைத் தன்மையைப் பேணுவதும் வறுமை ஒழிப்பில் முக்கியமானதாகும்.

பிரதேச மட்டங்களில் கீழ்த்தட்டு மக்களின் வாழ்க்கை பற்றிய உண்மையான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அடிமட்டத்திலிருந்தே வறுமை ஒழிப்பு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். வறுமையை ஒழிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடும் அதிகார வர்க்கம் மக்களிடையே விநியோகிக்க வேண்டிய நிதியை சுருட்டி அள்ளும் மோசடிகள் தடுக்கப்படுவதற்கான பொறிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

பங்களாதேஷின் யூனுஸ் செய்தது போல் நுண் கடன் திட்டங்கள் அமுல்படுத்தப்பட வேண்டும். ஊனமுற்றோர், மாற்றுத் திறன் கொண்டோர் குறித்து விஷேட வேலைத் திட்டங்கள் அவசியம். கடந்த தொகை மதிப்பீட்டின் போது இலங்கையர்களின் வீட்டு வசதிகள், தொடர்பாடல் வசதிகள், கழிப்பறைகள், வாகனங்கள் குறித்தும் மதிப்பிடப்பட்டன. இந்தத் தொகை மதிப்பீடு வறுமை ஒழிப்புக்கான வேலைத் திட்டங்கள் வகுக்கும்போது பயன்படுத்தப்பட வேண்டும்.

தென்னாபிரிக்காவின் நெல்சன் மண்டேலா அல்லது இந்தியாவின் காந்தி, அம்பேத்கர் போன்ற நெஞ்சுரத்துடன் கூடிய தலைவர்கள் இதய சுத்தியுடன் மக்கள் நலனில் நம்பிக்கை கொண்டு செயல்பட்டால் இலங்கையிலிருந்தும் வறுமையை ஒழிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடுவது நலம்



# எமது பயணம் தொடர்கிறது

இன்று முழு உலகமும் உலகமயமாக்கலுக்கு உட்பட்டுள்ளது. இந்நூற்றாண்டில் உலகமயமாதலிலிருந்து விடுபடுவது கடினம். உலகம் ஒருவருக்கொருவர் நெருக்கமாய் உள்ளது. இலங்கையின் பெரும்பாலான வர்த்தக நிறுவனங்கள் இந்தியச் சந்தைக்குள் புகுந்து ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. உலகமயமாக்கலினால் ஏற்பட்ட தாக்கம் இன்று இலங்கை பொருளாதாரத்தை உலக அளவில் தூக்கிவிட்டுள்ளது. எனவே நாம் கிணற்று தவளைகளை போல் சிந்திக்க முடியாது. எமது பிள்ளைகள் உலகை விஞ்ஞான ரீதியில் பலப்படுத்துவதற்கு பல்வேறு துறைகளுக்கூடாக உதவி புரிகிறார்கள்.

உலகம் இன்று திறந்த மயமாக்கப்பட்டுள்ளது. உலமய மாக்கலின் விளைவினாலேயே செல்வச் செழிப்புகள் இல்லா மல் காணப்பட்ட சிங்கப்பூர், இன்று பாரிய அபிவிருத்திய டைந்துள்ளது. நாம் அதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாம் இன்னும் கிணற்றுத் தவளைகள் போல் இருந்தால், எமக்கு இன்னும் வறுமையைப் பகிர்ந்து கொள்ளவே நேரிடும். பாரம்பரிய அரசியல் கோசங்களைச் சொல்லிக்கொண்டிருந் தால், எமக்கு ஓரிடத்திலேயே இருக்க வேண்டியிருக்கும். புதிய உலகை கண் திறந்து பார்க்க வேண்டும். எமக்கு கிடைத்துள்ள வாய்ப்புக்களை புத்திசாதுரியமான முறையில் பயன்படுத்தி பிரயோசனம் அடைய முயற்சிக்க வேண்டும்.

1977 இல் திறந்த பொருளாதாரம் அறிமுகப்படுத்தப் பட்டது. ஆனாலும் இன்று அதனால் வெற்றிகரமான பலனொன்றை நாம் அடைந்து கொள்ளவில்லை. எமக்கு தனித்து நின்று முன்னேற முடியாது. ஏனைய நாடுகளிட மிருந்து பொருளாதார நுட்பங்களை கற்றுக்கொள்ள வேண்டும். ஏனைய நாடுகளுடனான உறவுகள் வலுப்பட வேண்டும். கனணி, கையடக்கத் தொலைபேசிகள், மற்றுமுண்டான இலத்திரனியல் சாதனங்கள் அனைத்தும் இன்று உலகை ஒரு கைக்குள் கொண்டு வந்துள்ளன.

இரண்டாம் உலக மகா யுத்தத்துக்குப் பின்னர் கொரியா, யப்பான் போன்ற நாடுகள் சிறு அளவில் ஆரம்பித்த பொரு ளாதாரங்கள் இன்று முழு உலகையும் ஆட்டிப் படைத்துக் கொண்டுள்ளன. காலனித்துவ ஆட்சிக் காலப்பகுதியில் இந்தியாவின் மும்பாயில் அமைக்கப்பட்டிருந்த ஹோட்ட லொன்றில் இந்த ஹோட்டல் நாய்களுக்கும் இந்தியர்களுக் கும் தடைசெய்யப்பட்டுள்ளது என்பதாக வாசகமொன்று பொறிக்கப்பட்டிருந்தது.

டாடா நிறுவனம் தாஜ் ஹோட்டலை சிறியதாக ஆரம்பித் தது. நாய்களுக்கும் இந்தியர்களுக்கும் தடுக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்ட ஹோட்டல் வங்குரோத்து நிலையை அடைந்தது. தாஜ் ஹோட்டலின் செல்வாக்கு உலகம் பூராகவும் பரவியது. எமக்கு உலகை வெல்லக்கூடிய பல வழிகள் உள்ளன. நாம் ஒரு வட்டத்திற்குள் சுறுங்கியிருக்காமல் விரிந்த கண்ணோட் டத்தில் உலகை பார்க்க வேண்டும்.

இன்று உலகில் சிறந்த வர்த்தகச் சந்தை பீஜிங்கில் உள்ளது. உலகமயமாக்கலுக்குள் இன்று ஆசிய வலய நாடுகள் அமெரிக்காவுக்கும் ஐரோப்பாவுக்கும் சவால் விடுத்துக்கொண்டுள்ளன. ஆசிய வலயத்தில் சீனா, இந்தியா போன்ற நாடுகள் பொருளாதார ரீதியில் முன்னேறி வருகின்றன. மாறிச் செல்லும் உலகில் நாம் எமது பயணத்தை சரியான முறையில் திட்டமிட்டுக்கொள்ள வேண்டும். எமது அடையாளத்தைப் பாதுகாத்துக் கொண்டு உலகோடு எமக்குக் கொடுக்கல் வாங்கல் செய்ய முடியும். அதுவே எம்முன்னாலுள்ள சவாலாகும்.

உலகமயமாக்கலுக்குள் பலம்பொருந்திய ஊடகங்களை பலம் பொருந்திய வர்களுடைய மொழி ஆக்கிரப்புச் செய்துள்ளது. இணையதளத்துக்குள் இன்று பலம் பொருந் தியவர்களுடைய சுற்று நிருபங்களுக்கு சவால் விடுக்கப் பட்டுள்ளது. நிலையானதொரு சுற்று நிருபத்தின் பிரகாரம் செயற்பட முடியாத நிலை அவற்றுக்குள்ளது. படித்த இளைஞர்கள் இணையதளத்திற்குள் தமது கருத்துக்களை பதிவேற்றுகிறார்கள். எகிப்தில் ஏற்பட்ட மல்லிகைப் புரட்சி யை நாம் அதன் பிரதிபலனொன்றாகவே நோக்க வேண்டும்.

இலங்கையில் ஜனவரி 8 இல் நிகழ்ந்த மாற்றத்திற்கு பக்கபலமாக இருந்ததும் இணையதளத்தில் முன்னெடுக் கப்பட்ட இளைஞர்களின் போராட்டமாகும். யுத்தம் இடம் பெற்று வந்த காலப்பகுதியிலும் அறிபூர்வமான சமுதாயத் தினர் இலத்திரனியல் உபகரணங்களை சிறப்பான முறையில் கையாண்டமையினாலேயே யுத்த களத்தின் உண்மைத் தன்மைகளை அறிய முடிந்தது.


ரஷ்ய யுத்தம், பிரான்ஸ் யுத்தம் போன்றவற்றை விடவும் இன்று அறிவுரீதியான போராட்டம் பாரிய அளவில் முன்னேறியுள்ளது. அண்மையில் பிரதமர், பலம் பொருந்திய நாடுளை பலப்படுத்துகின்ற எமது மக்களின் பங்களிப்புக் களை எமது நாடும் பெறுகின்ற போது எமக்கு பலமிக்க தேசமாக மாறும் கனவை உண்மைப்படுத்திக் கொள்ளலாம் என்று கூறியிருந்தார். இதைச் செய்ய வேண்டுமென்றால் முதலில் நாம் எமது சமூகத்திற்குள் உள்ள பிரச்சினைகளை பூச்சியத்திற்குக் கொண்டு வர வேண்டும்.

எமது பயணம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தியாவுடனும் சீனாவுடனுமான பொருளாதார உறவுகள் பலம்பெற்றுக் கொண்டுள்ளது. எமது உள்ளத்தை சரிசெய்து கொண்டு இந்தப் பயணத்திற்கு நாம் ஒத்துழைக்க வேண்டும்.

# புத்த மதத்தில் இல்லாதது எது குர்ஆனில் இருக்கின்றது?

கலாநிதி பல்லேகந்த ரத்னசார மஹா தேரர்

(Deputy high Priest of Amarapura Wajirawansa Chapter) அவர்களின் கருத்துக்களிலிருந்து



இஸ்லாமியர்கள் எதையும் ஏற்றுக் கொள்ளத் தயாரில்லை. ஏனென்றால், இறைவனுக்கு மரி யாதை செய்ய வேண்டும். குர்ஆன் மாத்திரமே உண்மையானது என முஸ்லிம் இளைஞர் களுக்கு கற்றுக் கொடுக்கப்படுகிறது.

இந்த இடம்தான் பிழையானது. உங்கள் இறைவனை விடவும் குர்ஆனை விடவும் மேலானவர்களாக இருக்க நீங்கள் இட மளிப்ப தில்லை. உங்கள் சிந்தனையிலுள்ள இந்தக் கருத்தியலை மாற்றுவது கடினம். நன்கு ஞாப கம் வைத்துக் கொள்ளுங்கள். இக்கருத்து நீடிக் கும் வரை முஸ்லிம்களுக்கு முன்னேற முடியாது.

புத்த மதத்தில் நாங்கள் இப்படி நம்புவதில் லையே. புத்தர் வாழ்ந்தார். அதன்படி ஏனைய வர்கள் வாழ்ந்தார்கள். எங்களுக்கு என்று புத்தி இருக்கிறது. சகிப்புத்தன்மை இருக்கின்றது. எனவே, பிள்ளைகளே! முதலாவது, உலகில் இன்னும் நிறைய விடயங்கள் இருக்கின்றன என்பதை விளங்க வேண்டும். குர்ஆன் சொல் வதை ஏற்றுக் கொள்ளுங்கள். அது உங்கள் மத நிலைப்பாடு. ஆனால், நாம் வரலாற்றின் நிலைப் பாட்டையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

எல்லா மதங்களும் வெறுமையாக இருந்த வையல்ல. அவற்றிலும் அறிவு இருந்தன. குர் ஆன் வரும்போது யூத மூல நூல்கள் இருந்தன. அதாவது தோரா, தல்மூத் இருந்தன. கிறிஸ் தவர்களின் பைபிள், பௌத்தர்களின் திரிபிடக, ஹிந்துக்களின் பகவத் கீதை இருந்தது. இவை வரலாறு சொல்பவை.

கடவுள் படைத்தார் என்பது வேறு. ஆனால், உலகில் மிருக இனம் தோன்றி 372 மில்லியன் வருடங்களாகின்றன. எனவே, அன்றிலிருந்தே பிரவாகித்து வரும் அறிவு இருக்கின்றது. குர் ஆனில் இருந்து சில ஸூராக்களை எடுத்துப் பார்த்தோமேயானால் அவற்றில் உள்ள அனைத் தும் வேறு ஏதாவது ஒரு நூலில் குறிப்பிடப் பட்டுத்தான் இருக்கும். அவை குர்ஆனில் உள்ளவை மாத்திரமல்ல. நான் இமாமிடம் கேட்டேன். புத்த மதத்தில் இல்லாத எது குர் ஆனில் இருக்கின்றது என சொல்ல முடியுமா? ஏதாவது புதிய விடயங்கள் குர்ஆனில் இருக் கின்றனவா?

நீங்கள் சொல்லும் குடும்பப் பிணைப்பு, நீதி, ஷரீஆ சட்டம், மிருக அறுப்பு முறை, பூஜை புணஸ்கார முறை, இறைவன், இறைவனின் பரிசுத்த ஆன்மா என எல்லாமே வரலாற்றில் இருக்கின்றன. பரிசுத்தமான அல்லாஹ்தான் எல்லாவற்றையும் சொல்லியிருப்பதாக பள்ளி யில் கற்பிக்கிறார்கள். நீங்கள் எங்களுடன் தர்க் கம் செய்கிறீர்கள். அது உங்களுடைய குர்ஆ னுக்குப் பொருத்தமாக இருக்கலாம். படித்தவர் களால் ஏற்க கடினமானது. அதனால்தான் இஸ் லாமியர்களுக்கு எந்தவொன்றையும் சுதந்திர மாக சிந்திக்க இடமளிக்காது செய்கிறார்கள்.

ஸாகிர் நாயிக்கை எடுத்துக் கொண்டால், எவ்வளவு பொய் சொல்கிறார் தெரியுமா? இஸ்லாத்தின் பெயரால் இந்தளவு பொய் சொல்லும் ஒரு மனிதர் எங்கேயுமில்லை. அந்த புத்தகத்தில் உள்ளது. இந்த புத்தகத்தில் உள்ளது. புத்த மதத்தில் இப்படியுண்டு அப் படி யுண்டு எனச் சொல்கிறார். பிறகு பரீட்சித் துப் பார்த்தால் அவ்வளவும் பொய்.

அவருக்கெதிராக அவர் கூறும் எல்லா மேற் கோள்களையும் உள்ளடக்கி நாம் நல்லதொரு cassette அடித்திருக்கின்றோம். அவர் சொல் வது மடையர்களுக்கு சரியாக இருக்கும். எமது தலைவர் எவ்வளவு சிறப்பாக மேற் கோள்காட்டிப் பேசுகிறார் என மடையர்கள் நம்புவார்கள். படித்தவர்களுக்கு சகிக்காது. இந்தியாவில் உள்ள லட்சக் கணக்கானவர் களும் படித்தவர்கள் அல்லவே!

எனவே, பிள்ளைகளே! நன்றாக படியுங் கள்! வாசியுங்கள்! உலகம் என்பது விசால மானது. எல்லோரும் முஸ்லிம்களல்ல. எல் லோரும் கிறிஸ்தவர்களல்ல. எல்லோரும் பௌத்தர்களும் அல்ல. எனவே, எமக்கென்று சுயசிந்தனை இருக்க வேண்டும்.

இலங்கையில் சகவாழ்வு என்று சொல்கி றோம். முஸ்லிம்களுக்கு, கிறிஸ்தவர் களுக்கு, பௌத்தர்களுக்கு என்று தனிப் பாடசாலைகள் இருக்கின்றன. ஒரு பரிசு வழங்கும் நிகழ்வு இடம்பெறுகிறது என வைத்துக் கொள்ளுங் கள். இலங்கையில் இருக்கும் ஒரு சம்பிர தாயம், பரிசு வழங்கு பவருக்கு பரிசு பெறு பவர் மரியாதை செலுத்திப் பெறுவது.

ஆனால், முஸ்லிம் ஒருவருக்கு அதை செய்ய முடியாதே? கிறிஸ்தவர்களுக்கும் கடி னம். முழங்காலிட முடியாது. இப்போது என்ன நடக்கும்? சகவாழ்வு வருமா? இல் லையே! அதனால்தான் பிள்ளைகளே! எமது நாடுகளில் இருக்கும் போது அதற்கு ஏற்றாற் போல் இருக்க வேண்டும்.

மலேசியாவில், இந்துனேசியாவில் 10 அல்லது 15 வீதமான பௌத்தர்கள் இருக்கி றார்கள். அவர்கள் வெசாக் தினத்தை விடு முறை தினமாக அறிவித் திருக்கிறார்கள். ஆனால் இது முஸ்லிம் அரசு. அந்த நாட்டிற்கு ஏற்றாற் போல் சக வாழ்வு.

தலைலாமா இருக்கின்றார். அவர் முஸ்லிம் நாடுகளுக்குச் சென்று ஷீஆ சுன்னிகளுக்கு பள்ளிவாயல்களில் உரைகள் ஆற்றியிருக்கி றார். இதுதான் சகவாழ்வு. புலிகளின் தாக்கு தல்களால் முஸ்லிம்கள் புத்தளத்திற்கு வந் தார்கள். 18 முகாம்கள் இருந்தன. யார் அங்கு போய் வேலை செய்தார்கள். நான் தலைவ ராக இருந்து அங்கு சென்று உணவு சமைத்து உதவி செய்தேன். 1983 இல் தமிழ் கலவரம் ஏற்பட்டது. புறக்கோட்டையில் உணவு சேக ரித்து கொட்டஹேன பொலிஸ்காரியாலயத் தில் உள்ளவர்களுக்க வழங்கி அவர்களை பாது காத்தோம். இதுதான் எங்களது சக வாழ்வு.

முஸ்லிம்களில் யார் சென்றார்கள். குறைந்த பட்சம் முஸ்லிம்களது பிரச்சினைகளுக்காக முஸ்லிம்கள் சென்றார்களா? இல்லை. எமது நாட்டில் யுத்தம் இருந்தது. இராணுவத்தில் இணைய முஸ்லிம்களில் எத்தனை பேர் சென் றார்கள். சொல்கின்ற யாரும் செல்லவில்லையே. இது சிங்களவர்களின் மனங்களை கசப்பாக்கி யுள்ளது. நாம் காப்பாற்றிய நாட்டை இவர்கள் வந்து உரிமை கோருகிறார்கள் என்று சிங்கள வர்கள் நினைக்கிறார்கள்.

யுத்த காலத்தில் முஸ்லிம்கள் சிலர் இரா ணுவ சேவையில் இருந்தார்கள். ஆனால், பொதுவாகப் பார்த்தால் முஸ்லிம்கள் இணைய வில்லை. தமிழர்கள் இணையவுமில்லை. பெரும்பாலும் சேர்த்துக் கொள்ளப்படவுமில் லை. பொலிஸ் சேவையில் இணையவுமில்லை.

அப்படியென்றால் யோசித்துப் பாருங்கள். எங்களுக்கு வியாபாரம் செய்து எங்களது இடத் தைப் பயன்படுத்துகிறார்கள் என்ற கருத்தே சாதாரண மக்களுக்கிடையே பரப்பப்படுகிறது. இது எமது நாடு என்று முஸ்லிம்கள் காட்ட வேண்டும். 'எமது நாடு, எங்களுடையது என்று காட்ட வேண்டும்.

அடுத்த விடயம், மாளிகாவத்தையில் முஸ் லிம்களை தாக்கியபோது நாம் சென்று கதைத் தோம். பிறகு மாவனல்லையில் தாக்கியபோது அங்குள்ள மௌலவிமார் எனக்கு அழைப்பு விடுத்தார்கள். மதிய உணவுக்குப் பிறகு கூட் டம். உங்களைத் தாக்கியது நல்ல விடயம் என்று சொன் னேன். எல்லோருக்கும் ஆச்சரியம். உங்களை தாக்கியிருக்கா விட்டால் இந்தக் கூட்டம் இருந்திருக்காதே. இப்போது நாங்கள் நல்லவர்கள். அடி வாங்கியதனால்தானே உங்க ளுக்கு சகவாழ்வு ஞாபகம் வந்தது.


# அஷ்ரபும் வடக்கு-கிழக்கு இணைப்பும்

• எம்.எஸ்.எம். ஐயூப்

'எழுக தமிழ்' பேரணியின் மூலமாக வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், நாட்டில் சர்ச்சையைக் கிளப்பியிருக்கும் நிலை யில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், வடக்கு மற் றும் கிழக்கு மாகாணங்களை இணைப்பது தொடர் பாக மற்றொரு சர்ச்சையை உருவாக்கி யிருக் கின்றார்.

''வடக்கு, கிழக்கு இணைப்புக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் காலம் சென்ற எம்.எச்.எம். அஷ்ரப் சம்மதத்தைத் தெரி வித்து இருந்தார்'' என்ற சுமந்திரனின் கூற்றே இந்தச் சர்ச்சையை உருவாக்கியுள்ளது. புலிகள் இயக்கத்தின் முன்னாள் ஊடகப் பேச்சாளரான தயா மாஸ்டருக்கு எதிராக வவுனியா நீதிமன் றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில், தயா மாஸ்டர் சார்பில் ஆஜராகிவிட்டு வெளியேறும் போது ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக் கையிலேயே சுமந்திரன் இக்கருத்தை வெளி யிட்டிருந்தார்.

இதற்குப் பதிலளித்து புனர்வாழ்வு மற்றும் மீள் குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எம்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்வினால் கருத்தொன்று வெளிப்படு த்தப்பட்டிருந்தது. தாம் ஆரம்ப காலம்தொட்டே அஷ்ரபுடன் நெருங்கிப் பழகியவர் என்றும், அந்த வகையில் அஷ்ரப் ஒருபோதும் வடக்கு-கிழக்கு மாகாணங்கள் இணைவதை அங்கீகரித்திருக்க வில்லை என்பதை தாம் அறிவதாகவும் ஹிஸ் புல்லாஹ் கூறியிருந்தார்.





பின்னர் தாம் கூறியதை ஹிஸ்புல்லாஹ் தவ றாகப் புரிந்து கொண்டுள்ளார் என்றும், அஷ்ரப் நிபந்தனையுடனான ஆதரவையே வடக்கு-கிழக்கு இணைப்புக்கு தெரித்தார் என்றே தாம் கூறியதாகவும் முஸ்லிம்களின் விருப்பத்துட னேயே அம்மாகாணங்கள் இணைக்கப்பட வேண்டும் என்றும் சுமந்திரன் கூறியதாக கடந்த ஞாயிற்றுக்கிழமை பத்திரிகைகளில் செய்தி யொன்று வெளியாகியிருந்தது.

அஷ்ரப் வடக்கு-கிழக்கு மாகாணங்களை இணைப்பதை ஆதரித்தார் என்பதற்கு ஆவண ரீதியான ஆதாரங்கள் இருப்பதாகவும் வவுனியா வில் கருத்துத் தெரிவிக்கும்போது சுமந்திரன் கூறியிருந்தார். எனவே, அவர் கூறுவது சரியாக இருக்கும் எனப் பலர் நினைக்கலாம்.

அதேவேளை, ஹிஸ்புல்லாஹ்வும் அஷ்ர பின் காலத்தில் முஸ்லிம் காங்கிரஸுக்குள் சில பிரச்சி னைகளை எதிர்நோக்கிய போதிலும் அஷ் ரபின் மறைவு வரை முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினராகவே இருந்தார். எனவே, அவர் கூறுவது சரியென வேறு பலர் நினைக்கலாம்.

சுருக்கமாகக் கூறுவதாயின், வடக்கு-கிழக்கு இணைப்பை ஆதரிப்பவர்கள், சுமந்திரன் கூறு வதே சரியாக இருக்க வேண்டும் என விரும் புவர். எனவே, அது சரி என வாதிடவும் முன் வரலாம். அதேபோல், இணைப்பை விரும்பாத வர்கள், ஹிஸ்புல்லாஹ் கூறுவது சரியெனக் கூறலாம். ஆனால், உண்மை அவற்றுக்கு இடை ப்பட்டதாகவே இருக்கிறது என்பதை, அஷ்ர புடனும் அக்காலத்து முஸ்லிம் காங்கிர ஸுடனும் நெருங்கிப் பழகியவர்களுக்குத் தெரியும். (பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகல இன மக்களையும் சமமான முறையில் கவனிப்பது அவசியம்

- **மலையக மக்கள் முன்னணியை சந்திர சேகரன் அவர்கள் ஆரம்பித்தார்கள். அவர் சந்திரிகா அம்மையாருடன் பணியாற்றி னார். நீங்கள் இன்று நடப்பு அரசாங்கத் துடன் இணைந்துள்ளீர்கள். உங்களு டைய எதிர்பார்ப்புக்கள் நிறைவேறியதா? பெறுபேறுகள் கிடைத்ததா?**

மலையக தோட்டத்து மக்களின் வீடு, பொரு ளாதாரம் மற்றும் கல்வி போன்ற பிரச்சினை களுக்கு தீர்வைத் தேடியே நாம் அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கினோம். நடப்பு அரசாங்கம் ஒவ் வொரு விவகாரமாக பிரச்சினைகளை அணுகி வருகின்றது. இல்லை என்று சொல்ல முடியாது. தோட்டத்து வாழ் மக்களுக்கு காணிகளை வழங்கி வீடுகளை கட்ட ஆரம்பித்திருக்கிறார் கள். அது பெரியதொரு நிவாரணம். கல்வி யை முன்னேற்றுவதிலும் மாகாண சபைக்கூடாக பல நடவடிக்கை களை மேற்கொண்டு வருகி றது. பொருளாதாரப் பிரச் சினை பாரியதொரு சிக்க லாக உள்ளது.

அரசாங்கம் அதற்கு சிறந்த தீர்வொன் றைத் தருமென்று நாம் எதிர்பார்த் துள் ளோம். ஒரு மனி தன் ஏதா வது ஒன்றைச்



**வே. இராதா கிருஷ்ணன்**
கல்வி இராஜாங்க அமைச்சர்

செய்து வாழவேண்டுமென்றால் பலமான தொரு பொருளாதாரம் இருக்க வேண்டும். மலையகத் தோட்டப் பகுதிகளிலுள்ள மக்களின் பொருளாதாரத்தில் முன்னேற்றங்கள் இல்லை.

- **மலையக தோட்டப் பகுதி மக்களுடைய பொருளாதாரத்தை முன்னேற்ற வேண்டுமானால் எவ்வகையிலான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்?**

நாம் நுவரெலியா மாவட்டத்தைப் பற்றி பேசும்பொழுது 3 விடயங்களில் அவதானம் செலுத்த முடிகிறது. ஒன்று சுற்றுலாத்துறை. எமது மாவட்டத்தில் சுற்றுலாத் துறையை விருத்தி செய்தால் எமது மக்களுக்கு பெரியள விலான பொருளாதாரப் பலன்களை பெற்றுக் கொள்ள முடியுமாகிறது.

அடுத்த விடயம் விவசாயத் துறை. விவசாயத் துறையில் கூடுதலான குறைபாடுகள் இருக்கின் றன. பசளை வகைகளின் விலை மிகவும் அதி கம். 'க்ளைபோசெட்' என்கின்றதொரு பசளை உள்ளது. இப்பசளையைப் பயன்படுத்துவது தற்பொழுது தடைசெய்யப்பட்டுள்ளது. அத னால் பயிரினங்களுக்கு கிருமி நாசினிகளை தெளிப்பதற்கு கூடுதலான செலவொன்றை சுமக்க வேண்டியுள்ளது.

கூலித்தொழிலாளி ஒருவரிடமிருந்து சேவை யைப் பெற்றுக்கொள்ள நாளொன்றுக்கு 1500 ரூபாவினை கொடுக்க வேண்டும். அவ்வாறான தொரு செலவைச் செய்து இலாபம் பெற முடி யாததொரு நிலை உருவாகியுள்ளது. சில சந் தர்ப்பங்களில் காலநிலை பிரச்சினையும் உள் ளது. கடந்த காலப்பகுதியில் 2 மாதங்களாக மழை பொழியவில்லை. இது விவசாயத்திற்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்தியது. விவசாயி களுக்கு ஏதாவதொரு நிவாரணம் அவசியம். குறைந்த பட்சம் மின்சாரக் கட்டணங்களை யாவது குறைத்துத் தந்தால் சிறப்பாக இருக்கும்.

மலையக தோட்ட மக்கள் கூடுதலான பொருளாதாரக் கஷ்டங்களில் வாழ்கிறார்கள். தோட்டத் தொழிலாளர்களது சம்பளத் தொகை கூட்டப்படுவதாகக் கூறியும் அது 2 வருடங்க ளாக செய்யப்படவில்லை. தோட்டக் க்கம்பனி களிலும் பாரிய குறைபாடுகள் உள்ளன. இவ் வாறான விடயங்களை கருத்திற் கொண்டு அபிவிருத்தி நடவடிக்கைகளை செய்கின்ற பொழுது மக்களின் பொருளாதார நிலைமைகள் முன்னேற்றம் காணும்.

- **மலையக மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்கும் நோக்கிலல்லவா உங்களது கட்சியை சார்ந்தவர்கள் அரசாங்கங்க ளோடு இணைந்து பதவிகளைப் பெறு கிறார்கள். அவ்வாறு இருக்கையில் தற்பொழுது ஏன் உங்களால் அப்பிரச்சி னைகள் சிலவற்றையும் தீர்த்துக்கொள்ள முடியாமல் போயுள்ளது?**

இவ்வரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஒரு வரு டமே பூர்த்தியாகியுள்ளது. பிரச்சினைகள் உள்ள

**நேர்காணல்: ஹெட்டி ரம்ஸி**

தென்பதை நாம் இனங்கண்டு விளங்கி வைத் துள்ளோம். இப்பொழுதும் கூட நாம் ஒரு சில பிரச்சினைகளை அரசாங்கத்திடம் முன்வைத் துள்ளோம். அரசாங்கத்திடமிருந்து படிப்படியாக இப்பிரச்சினைகளுக்கான தீர்வுகளை எதிர்பார்த் துள்ளோம். இவ்விடயங்களை சிறிது சிறிதாக எடுத்துப் பேசி வருகின்றோம். ஒரே தடவையில் எல்லாப் பிரச்சினைகள் பற்றியும் கதைக்க முடியாது. அவற்றுக்கு தீர்வு காணவும் முடியாது. கடந்த அரசாங்கம் இழைத்த ஒரு சில பிழை யான செயல்களின் காரணமாக இவ்வரசாங்கம் மிகப் பாரிய சிக்கல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றது.

- **உங்களுடைய மக்களுக்கு முகங் கொடுப் பதற்கு நேர்ந்துள்ள கடந்த அரசாங்கத்தின் தவறான செயல்கள் என்ன?**

கடந்த அரசாங்கம் நினைத்தவாறு வெளி நாடுகளிலிருந்து கடன்களைப் பெற்றது. தற் பொழுது நாம் அக்கடன் தொகைகளை அடைக் கத் தயாராகின்ற பொழுது நாட்டு மக்களை பொருளாதார ரீதியில் முன்னேற்றுவதற்கு நிதி இல்லாமல் போகின்றது. கடந்த அரசாங்கம் செய்த மோசடிச் செயல்கள் தொடர்பிலான பிரச்சினைகளும் உள்ளன. இவ்வரசாங்கம் அவ ற்றை இல்லாமல் செய்துகொண்டு படிப்படி யாக முன்நகர்கின்றது. மோசடிகளில் ஈடுபட்ட சகலரையும் ஒரேயடியாக நீதிமன்றில் ஆஜர் படுத்தி வழக்குத் தொடுக்கவும் முடியாது. அதனால் இவ்வரசாங்கத்திற்கு நாம் சிறிய தொரு அவகாசத்தைக் கொடுக்க வேண்டும்.

- **உங்களுடைய மாவட்டத்திலுள்ள விவ சாய மக்கள் எதிர்கொள்ளும் பல பிரச்சினை களை நீங்கள் குறிப்பிட்டீர்கள். இவ்விவ சாய மக்களுடைய பிரச்சினைகளுக்காக வேண்டி நீங்கள் எவ்வாறான நடவடிக் கைகளை மேற்கொண்டுள்ளீர்கள்?**

எனக்கென்றால் எதுவும் செய்ய முடியாது. பசளை விலை அதிகம், முளை விதைகளின் விலை அதிகம், எண்ணெய் விலை அதிகம். இவை விவசாயிகளுக்கு பாரிய பிரச்சினை.

- **இவ்வரசாங்கம் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குவதாக கூறியதல்லவா? அது தொடர்பில் நீங்கள் ஏன் தலையிடுவதில்லை.?**

காணி அறுதிப் பத்திரம் உள்ளவர்களுக்கு மாத்திரமே பசளை நிவாரணம் கிடைக்கின்றது. எமது மக்களில் கூடுதலானோருக்கு பசளை நிவாரணங்கள் இல்லை. குத்தகைக்கு காணி வாங்கியவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். ஆனாலும் அவர்களுக்கு எவ்வித நிவாரணங் களும் கிடைப்பதில்லை.

- **தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நீங்கள் காணும் தீர்வுகள் என்ன? இப்பிரச்சினை எவ்வகையில் தீர்க்கப்பட வேண்டும்?**

தேசிய பிரச்சினையை தீர்க்கக் கூடிய இயலு மைகள் இவ்வரசாங்கத்திடம் மாத்திரமே உள் ளது. சிறந்ததொரு ஜனாதிபதி எமக்குக் கிடைத் துள்ளார். பிரதமரும் அப்படித்தான். பிரதான இரு கட்சிகளும் ஒன்றிணைந்து பணியாற்று கிறது. இரண்டு கட்சிகளும் ஒன்றாக இருக்கும் பொழுது தேசிய பிரச்சினை மாத்திரமல்ல, பல பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடிகிறது.

முன்னைய வரலாற்றை நோக்கினால், ஐ.தே.க. ஏதாவதொன்றைக் கூறினால், சுதந்திரக் கட்சி அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும். சுதந்திரக் கட்சி ஏதாவது கூறினால் ஐ.தே.க. எதிர்ப்புத் தெரிவிக்கும். இன்று அவ்வாறு எதிர்ப்பு தெரி விப்பதற்கான காரணங்கள் ஏதும் இல்லை. இரண்டு அரசாங்கங்கள் ஒன்றிணைந்துள்ளன.

- **நீங்கள் கூறியது போன்று இரண்டு அரசாங்கங்கள் ஒன்றிணைந்துள்ளன. ஆனால் பிரச்சினைகள் இன்னும் தீர்ந்தபாடில்லையே?**

ஜனாதிபதிக்கு சர்வதேச மட்டத்தில் நல்ல தொரு வரவேற்புள்ளது. வெளிநாடுகளும் எமக்கு உதவி செய்கின்றன. இதனாலும் நாம் பிரயோசனம் பெற வேண்டும். தேசிய பிரச்சி னையை தீர்க்க வேண்டுமானால் சிங்கள மக்க ளுடைய ஒத்துழைப்புகளும் அவசியம்.

- **சிங்கள மக்களிடமிருந்து எவ்வாறான ஒத்துழைப்புகள் அவசியப்படுகின்றன?**

எமது நாட்டில் 70 வீதமான சிங்கள மக்களே பெரும்பான்மையினம். சிங்கள மக்கள் விரும் பாமல் தமிழ் மக்களுக்கு நிவாரணமொன் றையோ தீர்வொன்றையோ வழங்க முடியாது. சிங்கள மக்களின் ஒத்துழைப்புடனும் புரிந்து ணர்வுடனும் கூடிய தீர்வொன்றுக்குச் செல்வதே அவசியம்.

- **சிங்கள மக்களோடு புரிந்துணர்வொன் றுக்கு வருவது கடினமென்று நீங்கள் கருதுகிறீர்களா?**

மக்களை குழப்புவது அரசியல்வாதிகள். சகல இன மக்களையும் சமமான முறையில் கவ னிப்பது அவசியம். சிங்கள மக்களை அதிக மாகவும் ஏனைய இன மக்களையும் குறைவாக வும் கவனிப்பது பொருத்தமில்லை. எல்லா மக் களையும் சமமான முறையில் பார்க்க வேண்டும்.

- **மலையகத்திற்கென தனியானதொரு அலகை கோருகின்றீர்களா? அவ்வாறு நிகழ்ந்தால் அது நல்லிணக்கத்திற்கு இலகுவாக அமையுமா?**

இல்லை. அவ்வாறு தனியானதொரு அலகை நாம் கோருவதில்லை. இங்கு நாம் நிர்வாக ரீதி யிலான பிரச்சினைகளையே காண்கிறோம். நுவ ரெலியாவில் உள்ள ஒரு பிரதேச செயலாளர் பிரிவில் சுமார் 2 லட்சம் மக்கள் உள்ளார்கள். 25,000 மக்கள் உள்ள பிரதேச செயலகமும் இங்கு உள்ளது. 25,000 மக்களை உள்ளடக்கிய பிரதேச செயலகமொன்றை நிர்வகிக்க முடிந்த தென்றால் 2 லட்சம் மக்களை உள்ளடக்கிய பிரதேச செயலகத்தை 2 அல்லது 3 பிரதேச செயலகங்களாக உடைத்து நிர்வாகம் செய்ய முடியாதது ஏன்? 2 லட்சம் மக்கள் இருக்கும் பொழுது நிர்வாகம் செய்வது மிகவும் கடின மாகும்.

- **நீங்களும் உங்களுடைய கட்சியை சார்ந்த வர்களும் இந்தியாவுடன் மிகவும் நெருக்கமாக உள்ளீர்கள் அல்லவா?**

மலையக தமிழ் மக்கள் இந்திய வம்சாவளி யினர். இம்மக்களுக்கும் இந்திய தூதுவரால யத்திற்குமிடையில் உறவுகள் உள்ளன. மலை யக தோட்டப்பகுதி மக்களை பார்வையிடு வதற்கும் அவர்களுக்கு உதவி செய்வதற்கும் இந்திய தூதுவராலயத்தை சேர்ந்த அதிகாரிகள் வருவார்கள். பிரச்சினைகள் இருக்கின்றதென் றால் அவர்கள் கதைப்பார்கள். தேவைப்பட் டால் இந்தியாவுக்கும் அழைத்துச் செல்வார்கள். இது போன்ற உறவுகள் உள்ளன.

- **இந்தியா தற்பொழுது தோட்டத் தொழிலா ளர்களுக்கு எவ்வாறான உதவிகளை செய்து வருகின்றது?**

தோட்டத் தொழிலாளர்களின் குழந்தை களுக்கு வருடந்தோறும் புலமைப் பரிசில் களை வழங்குகிறது. திக் ஓயாவில் 200 கட்டில் களை கொண்ட விசாலமானதொரு மருத்துவ மனையை கட்டியுள்ளது. மலையகத்தை சார்ந்த பல்வேறு பாடசாலைகளின் கல்வி அபிவிருத் திக்காக வேண்டி பல மில்லியன் நிதித்தொகை களை அளித்துள்ளது. இன்னும் 30 பாடசாலை களுக்கு அவ்வகையில் நிதியுதவி செய்ய வாக்குறுதியளித்துள்ளது. விஞ்ஞான பீடங்களி லுள்ள தொழில்நுட்ப பிரிவுகளை விருத்தி செய்வதற்கும் இந்தியா எதிர்பார்த்துள்ளது.

(பக்.14)




பொதுவாக திட்டம் தீட்டுதல் என்பது நம்மிடையே யாரையாவது கவிழ்த்து விடுவதற்கானதாகத்தான் இருக்கிறது. தனிமனிதனில் இருந்து சமூக நிறுவனங்கள் வரை அனைத்துத் தரப்பினரும் திட்டம் தீட்டும் விடயத்தில் ஒருமித்த கருத்திலேயே இருக்கின்றனர். நமது ஆளுகை மையங்களான பள்ளிவாசல்களும் இதற்கு விதிவிலக்கல்ல.

தம்மை எதிர்த்துப் பேசுபவரை, தமது செயற்பாடுகளை விமர்சிப்பவர்களை எப்படி ஓரங்கட்டுவது என பள்ளிவாசல் நிர்வாகிகள் திட்டம் தீட்டுகிறார்கள். தாங்கள் வரிந்து வைத்துக் கொண்டிருக்கின்ற கொள்கைகளுக்கு மாற்றமாக இஸ்லாமிய சிந்தனைகளை முறையாக முன்வைப்பவர்களை எப்படி மட்டம் தட்டுவது என்று பள்ளிவாசல்கள் திட்டம் தீட்டுகின்றன. பொதுவில் யாரையாவது தீட்டுவதுதான் நம்மிடையே திட்டங்களின் நோக்கமாகவிருக்கிறது.

இவ்வாறான திட்டங்களைத் தாண்டி எந்த விடயத்தையும் எந்த நிறுவனத்தையும் எந்தச் சமூக அசைவுகளையும் திட்டமிட்டு நகர்த்தி வெற்றியடைகின்ற திட்டமிடல் கலாச்சாரம் உலகெங்கும் பரவலாகப் பின்பற்றப்பட்டு வருகிறது. இலங்கை முஸ்லிம் சமூகத்தில் இது பரவலாக இல்லாத போதும், ஒவ் வொரு புதிய வருடம் பிறக்கும் போதும் புதிதாகத் திட்டமிடு கின்ற பண்பாடு முஸ்லிம் சமூகத்தின் சில நிறுவனங்கள், ஜமாஅத்துகளுக்குள்ளால் நடைபெற்று வருகின்றன.

ஆனால் நமது ஆளுகை மையங்கள்தான் அடுத்தவரைத் தீட்டுகின்ற திட்டங்களோடு தம்மைக் குறுக்கிக் கொண்டுள் ளன. புதுவருடத்துக்கென எந்தத் திட்டமும் இவர்களிடம் இல்லை. முஹர்ரம் தலைப்பிறையுடன் ஹிஜ்ரி புதுவருடம் பிறந்து விட்டால் அதற்காக யாஸீனை ஓதி அனைத்தையும் தமாம் பண்ணிவிடுகின்றன இந்த ஆளுகை மையங்கள். இன்னும் சிலர் புதுவருடம் என்ற ஒன்று இல்லை, இதனை ஞாபகப்படுத்துபவன் நரகவாதி (பித்அத் வழிகேடு நரகவாதி) என்று 'நியாயத்' தீர்ப்பு வழங்குகின்றனர்.

மொத்தத்தில் ஹிஜ்ரத்தை மையமாகக் கொண்ட இஸ்லாமியப் புதுவருடம், திட்டமிட்டுச் செயற்படுவதற்கான ரஸூலுல்லாஹ்வின் சிறந்த முன்மாதிரி என்பதை தெரிந்தோ தெரியாமலோ இவர்கள் புறக்கணித்து விடுகின்றனர். ஜனவரி புதுவருடமல்ல எனக் கூறி திட்டமிடலுக்கான ஆரம்பத்தை ஜனவரியில் செய்வதுமில்லை. முஹர்ரத்தை ஒரு புதிய வருடத்தின் புதிய திட்டமிடலுக்கான காலமாக நோக்குவதுமில்லை. இதனால்தான் சமூகத்திலே எதுவும் புதிதாய்ப் பிறப்பெடுப்பதில்லை. பழையன கழிவதுமில்லை.

ஹிஜ்ரத்துக்குப் பின்னர் 1438 ஆவது வருடமாகப் புதுவருடம் பிறந்திருக்கிறது. இந்த 1438 வருடங்களில் குறைந்தது 1000 வருடங்களாகவாவது இலங்கையில் பள்ளிவாசல்கள் இயங்கி வருகின்றன. இந்த 1000 வருடங்களில் இதுவரை எத்தனை பள்ளிவாசல்கள், ஹிஜ்ரத்தின் வழிகாட்டலைப் பயன்படுத்தி தமது பள்ளிவாசலின் செயற்பாடுகளுக்கான திட்டங்களை வகுத்திருக்கின்றன? ரஸூலுல்லாஹ்வுடைய வாழ்க்கை வழிமுறையான திட்டமிடலை பெரும்பாலும் எல்லாப் பள்ளிவாசல்களுமே புறக்கணித்தே வந்திருக்கின்றன.

ஒரு நிர்வாக ஒழுங்கு முறையைப் புறக்கணித்து விட்டு, ரஸூலுல்லாஹ்வுடைய வாழ்க்கை வழிமுறையொன்றைப் புறக்கணித்து விட்டு, சமூகத்தின் ஆளுகை மையங்கள் எப்படி வெற்றியை நோக்கிப் பயணிக்க முடியும்? வெற்றி பெற்றிருக்கிறதா தோல்வியடைந்து வருகிறதா என்பதனை அளவிடுவதற்கு அதனிடம் இருக்கின்ற திட்டமிடல் குறிகாட்டிகள் என்ன? தான் தோல்வியடைந்து கொண்டிருப்பதை விளங்காமலேயே ஒரு சமூகத்தை இந்த ஆளுகை மையங்கள் பின்னோக்கி நகர்த்துவது என்பது எவ்வளவு பயங்கரமான விபரீதம்!

திட்டமிடல் அறிவு உள்ளவர்கள் எமக்குள் இல்லாமை தான் இதற்குக் காரணமா? உண்மையில் திட்டமிடலில் துறைபோகக் கற்றவர்களும் அனுபவசாலிகளும் நம்மிடையே நிறையவே இருக்கிறார்கள். ஆனால் இவர்கள் பயன்படுத்தப்படாமல் பள்ளிவாசல்களால் திட்டம் தீட்டப்பட்டு ஓரங்கட்டப்பட்டிருக்கிறார்கள். திட்டமிடத் தவறுகின்ற சமூகம் தவறுவதற்கு திட்டமிடுகின்றது என்பது உலகப் பொதுமொழி. முஸ்லிம் சமூகமும் திட்டமிடத் தவறுகின்ற பொழுது அது வெற்றிபெறத் தவறிய சமூகமாகவே மாறும். முஸ்லிம் சமூகம் வெற்றிபெறத் தவறும்போது அதனால் நன்மையடைபவர்கள் முஸ்லிம்கள் அல்லர். நாங்கள் திட்டமிடாத சமூகமாக இருக்கும் காலமெல்லாம் இஸ்லாத்தின் எதிரிகளே வெற்றி பெறப் போகிறார்கள்.

திட்டமிடல் பற்றி எந்த அறிவும் இல்லாதவர்கள் பள்ளி வாசல்களை ஆக்கிரமித்து வைத்திருப்பது வெற்றி பெறத் தவறுவதற்கு நாங்கள் செய்த பாக்கியம்தான். இவர்களை இதே இடத்தில், இதே அறிவுத் தரத்தில் தொடர்ந்தும் வைத்திருப்பதற்கு யாரோ தீட்டிய திட்டத்திற்கு தாங்கள் கருவிகளாக செயற்படுகிறோம் என்பதனை உணராத இந்த ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்து பள்ளிவாசல்களைக் காப்பாற்றுவதற்கு இப்போது சமூகம் திட்டமிட வேண்டியி ருக்கும் போல் தெரிகிறது.

புதிய வருடத்தில் புதியதாய் திட்டமிடல் செய்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## 42வது தேசிய விளையாட்டு விழா:

## தொடர்ந்து 18வது முறையாக சம்பியனானது மேல்மாகாணம்



யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்று வந்த 42ஆவது தேசிய விளையாட்டுப் போட்டிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை (02.10.2016) நிறைவுக்கு வந்தது. முதல் தடவையாக யாழ்மண்ணில் இடம்பெற்ற தேசிய விளையாட்டுப் போட்டிகளில் நாட்டின் 9 மாகாணங்களைச் சேர்ந்த 1700 வீர, வீராங்கனைகள் பங்குபற்றினர்.

தேசிய விளையாட்டு விழாவின் இறுதி நிகழ்வுகளில் பிரதம அதிதியாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்துகொண்டார். இம்முறை இடம்பெற்ற தேசிய விளையாட்டு விழாவில் 113 தங்கப்பதக்கங்கள் உள்ளடங்கலாக 254 பதக்கங்களை சுவீகரித்த மேல் மாகாணம் தொடர்ச்சியாக 18வது தடவையாக முதலிடத்தை தனதாக்கிக் கொண்டது.

இம்முறை யாழில் இடம்பெற்ற 42வது தேசிய விளையாட்டு விழாவில் தென் மாகாணத்தைச் சேர்ந்த கே.எஸ்.எல்.விக்கிரமசிங்க ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப்போட்டியில் 10.6 செக்கன்களில் போட்டித்தூரத்தைக் கடந்து அதிவேக வீரராக முத்திரை பதித்தார். பெண்கள் பிரிவில் ஊவா மாகாணத்தின் எஸ்.எல்.விதானதுரகே 100 மீற்றர் தூரத்தை 19.9 செக்கன்களில் கடந்து அதிவேக வீராங்கனையாக பதிவானார்.

அதேபோன்று சிறந்த விளையாட்டு வீரராக கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த எம்.ஐ.எம். மிஸ்வான் தெரிவுசெய்யப்பட்டார். அவர் ஆண்களுக்கான நீளம் பாய்தல் போட்டியில் 7.2மீற்றர் தூரம் பாய்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. சிறந்த விளையாட்டு வீராங்கனையாக பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப்போட்டியில் இம்முறையில் தேசிய சாதனையை நிலைநாட்டிய நிமாலி லியனாராச்சி தெரிவுசெய்யப்பட்டார்.

## இந்தியாவுடனான டெஸ்டில் விளையாடுவேன்

### அன்டர்சன் நம்பிக்கை



எதிர்வரும் நவம்பர் மாதம் இடம்பெறவுள்ள டெஸ்தொடருக்கான இங்கிலாந்து அணியில் நிச்சயம் இடம்பிடிப்பேன் என தோற்பட்டை உபாதையால் அவதிப்பட்டு வரும் இங்கிலாந்தின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் அன்டர்சன் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

34 வயதான அன்டர்சன் கடந்த ஜுன் மாதம் இடம்பெற்ற இலங்கைக்கெதிரான தொடரின் போது இடது தோற்பட்டை உபாதைக்குள்ளானமை குறிப்பிடத்தக்கது. இதன்காரணமாக பங்களாதேஷுக்கெதிரான டெஸ்ட்தொடரில் இருந்து அவர் நீக்கப்பட்டார். இங்கிலாந்து கிரிக்கெட்டின் முகாமையாளர் அன்ரூ ஸ்ட்ரோஸ் நவம்பர் 9இல் ராஜ்கோட்டில் ஆரம்பமாகவுள்ள டெஸ்போட்டியில் அன்டர்சன் விளையாடுவது இன்னும் உறுதிசெய்யப்படவில்லை என அண்மையில் கூறியுள்ள நிலையில், அன்டர்சன் தற்போது தனது காயம் குணமடைந்து வருவதாகவும் இந்தியாவுடனான டெஸ்ட் தொடரில் நிச்சயம் பங்கேற்பேன் எனவும் குறிப்பிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அன்டர்சன் டெஸ்ட்போட்டிகளில் 463 விக்கட்டுகளை கைபற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கபடி உலகக்கிண்ணம் :

## பாகிஸ்தான் இந்தியா வராது



இந்தியாவில் தொடங்கவுள்ள உலகக்கிண்ண கபடிப் போட்டியில் பாகிஸ்தான் அணி கலந்து கொள்ள தடை விதிக்கப்பட்டுள்ளது.

12 நாடுகள் பங்கேற்கும் கபடி உலகக்கிண்ணப் போட்டிகள் இந்த வாரத்தில் இந்தியாவில் தொடங்குகிறது.

இந்நிலையில் இந்தியா, பாகிஸ்தான் நாடுகளுக்கு இடையேயான உறவுகளில் பதற்றம் நீடிப்பதால் பாகிஸ்தான் அணி இந்த தொடரில் கலந்து கொள்ள தடை விதிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து சர்வதேச கபடி கூட்டமைப்பு பின் தலைவர் தியோராஜ் சதுர்வேதி கூறுகையில், இரு நாடுகளுக்கு இடையே பதற்றம் தொடரும் நிலையில் பாகிஸ்தானுடன் விளையாடுவதற்கு இது சரியான நேரமில்லை என்றார்.

பாகிஸ்தான் கபடி கூட்டமைப்பு செயலர் ரானா முகமது சர்வார் கூறுகையில், பாகிஸ்தான் இல்லாமல் கபடி உலகக்கிண்ண போட்டிகள் பிரேசில் இல்லாத கால்பந்து உலகக்கிண்ணம் போன்றது. இந்த விவகாரத்தை விவாதிக்க கூட்டம் ஒன்றைக் கூட்டியுள்ளோம் என்றார்.

## ஷரபோவாவின் தடைக்காலம் குறைப்பு



ஊக்கமருந்து பாவித்த குற்றச்சாட்டின் பேரில் இரண்டு வருட தடையை எதிர்கொண்டிருந்த முன்னணி டெனிஸ் வீராங்கனையான ரஷ்யாவின் மரியா ஷரபோவாவின் தடை சர்வதேச விளையாட்டு நீதிமன்றத்தால் (CAS) 15 மாதங்களாக குறைக்கப்பட்டுள்ளது. இதனால் எதிர்வரும் 2017 ஏப்ரல் 26இல் மீண்டும் சர்வதேச டெனிஸ் போட்டிகளுக்கு திரும்புவதற்கான வாய்ப்பு அவருக்கு ஏற்பட்டுள்ளது. இதுதொடர்பாக ஷரபோவா, "நான் டெனிஸை மிகவுமே நேசிக்கின்றேன். நான் விட்ட தவறுகளிலிருந்து நிறைய விடயங்களை கற்றிருக்கிறேன். மீண்டும் விளையாடுவதற்காக ஆவலோடு நாட்களை எண்ணிக்கொண்டிருக்கிறேன்" எனக் குறிப்பிட்டார்.










"ரமழான் தேடல் 2016" பரிசளிப்பு விழா கடந்த 25.09.2016 அன்று திஹாரிய ICPH இல் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஜமாஅத்துஸ் ஸலாமா அமைப்பின் தலைவர் உஸ்தாத் ஆசாத் அப்துல் முஈத் (நளீமி) அவர்களும் அவ் அமைப்பின் செயலாளர் எம்.ஜே.ரயீஸுல் இஸ்லாம் (நளீமி) அவர்களும் கலந்து கொண்டார்கள்.

We cordially invite you to the
Opening
of
The Reader
Today a Reader, Tomorrow a Leader
BOOKSHOP
(Books & Snacks)
Saturday, 08 October 2016
09.00 am to 08.00 pm
15, Smith Street, Meeraniya Street,
Colombo-12.
Tel: +94 77 346 7487 | E-mail: thereaderbooks@gmail.com










சிறுவர் தினத்தையொட்டி பியகம பிரதேச சபை, முன்பள்ளிப் பாடசாலை சம்மேளனம் பியகம பிரதேச சபைக்கு உட்பட்ட முன்பள்ளிப் பாடசாலைகளுக்கான கண்காட்சி ஒன்றை 02-10-2016 ஞாயிற்றுக்கிழமை தெல்கொட பிரதேச சபை மைதானத்தில் நடாத்தியது. அதில் 50 சிங்கள, முஸ்லிம் முன்பள்ளிப் பாடசாலைகள் கலந்து சிறப்பித்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேசப் பார்வை

## இஸ்ரேலிடம் அணுவாயுதங்கள் உள்ளன

முன்னாள் ஜனாதிபதி சிமோன் பெரஸ்



இஸ்ரேலின் முன்னாள் ஜனாதிபதி சிமோன் பெரஸ் மரணிப்பதற்கு சற்று முன்பாக ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில், இஸ்ரேலிடம் அணுகுண்டுகள் உள்ளன. அவற்றைத் தயாரிப்பதில் மும்முரமாக இருந்தவன் நான் என்று ஏற்றுக்கொண்டுள்ளார். இஸ்ரேலிடம் அணுவாயுதங்கள் உள்ளனவா என்ற சந்தேகம் பெரஸின் கூற்றின் மூலம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளதாக அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜிம்மி காட்டர், இஸ்ரேலிடம் 8 அணுகுண்டுகள் உள்ளன என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. சிமோன் பெரஸின் 63 ஆண்டு கால அரசியல் வரலாற்றில் இஸ்ரேலைப் பலப்படுத்துவதற்கான அனைத்து முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டன எனவும் அந்நேர்காணலில் பெரஸ் தெரிவித்துள்ளார்.

## சூடான் மீதான பொருளாதாரத் தடையை அமெரிக்கா நீக்கியுள்ளது

சூடான் மீது அமெரிக்க அரசாங்கம் 1999 ஆம் ஆண்டிலிருந்து விதித்திருந்த பொருளாதாரத் தடையை நீக்கியுள்ளதாக அறிவித்துள்ளது. கடந்த 17 ஆண்டுகளாக அமுலில் இருந்த இத்தடை நீக்கப்பட்டுள்ளமை சூடானின் பொருளாதார நெருக்கடியைத் தணிப்பதில் பெருமளவு உதவும் என்று அந்நாட்டின் நிதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

தார்பூர் பிராந்தியத்தில் இடம்பெற்ற இனக் கலவரங்களுக்கும் பிராந்தியத்தின் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கும் சூடான் அரசாங்கம் ஆதரவளித்து வருகின்றது என்ற குற்றச்சாட்டின் பெயரிலேயே அமெரிக்கா சூடான் மீது பொருளாதாரத் தடை விதித்தது.

1989 இல் இராணுவப் புரட்சியின் மூலம் கேர்ணல் உமர் பஷீர் அதிகாரத்தைக் கைப்பற்றியது முதல் அமெரிக்கா-சூடான் உறவுகளில் பாரிய பின்னடைவுகள் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கட்டுப்பாட்டு எல்லைக் கோட்டைத் தாண்டும் இந்தியா



கடந்த இரண்டு மாதங்களாக ஜம்மு காஷ்மீர் விவகாரத்தை இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகியன கையாண்டு வரும் விதம் பிராந்தியத்தில் பெரும் பதட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. கடந்த ஆறு ஆண்டுகளில் செப்டம்பர் மாதத்தில் நடைபெற்ற தாக்குதல்களே மிகவும் பாரியவை எனக் கருதப்படுகின்றது.

இந்திய கட்டுப்பாட்டிலுள்ள காஷ்மீரில் இதுவரை 90 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இந்தியத் தரப்பில் 19 இராணுவ வீரர்கள் உரி நகரில் இந்திய பாதுகாப்பு தலைமையகத்தில் கொல்லப்பட்டுள்ளதாக இந்தியா அறிவித்துள்ளது. தொடர்ந்தும் இரு நாடுகளும் எல்லைக் கோட்டை தாண்டும் அளவுக்கு பரஸ்பரம் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களில் ஈடுபட்டு வருகின்றன. மீண்டும் துணைக் கண்டத்தில் யுத்த பீதி கிளம்பியுள்ளது.

1947 முதல் இதுவரை 3 பெரும் யுத்தங்களை இந்தியா பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளும் சந்தித்துள்ளன. தற்போது காஷ்மீர் விவகாரம் மீண்டும் உலக அரங்கிற்கு வந்துள்ளது. இளைஞர்களை இலக்கு வைத்து இந்திய இராணுவம் வன்முறைகளில் ஈடுபட்டு வருவதாக பாகிஸ்தான் குற்றம் சாட்டுகின்றது. இதே வேளை, உரி நகரில் இடம்பெற்ற தாக்குதலுக்கு பாகிஸ்தானே பொறுப்புக் கூற வேண்டும் என இந்தியா குற்றம் சாட்டுகின்றது. இரு நாடுகளுக்கும் இடையிலான சொற்போர், தொடர்ந்தும் வன்முறைச் சம்பவங்களுக்கு இட்டுச் சென்றுள்ளது.

2,17,000 சதுர கி.மீ. பரப்பைக் கொண்ட காஷ்மீரில் 14 மில்லியன் மக்கள் வாழ்கின்றனர். உலகிலேயே ஆகக் கூடுதலாக இராணுவமயப்படுத்தப்பட்ட பிராந்தியமாக காஷ்மீர் விளங்குகின்றது. அங்கு 11 காஷ்மீரியர்களுக்கு 1 இந்திய இராணுவம் என்ற வகையில் இந்திய இராணுவம் குவிக்கப்பட்டுள்ளது.

## ஈரான்-சவூதி சொற் போர்



பிராந்தியத்தில் ஈரான் இஸ்ரேலை விட ஆபத்தான நாடு என சவூதி மன்னர் சல்மான் சமீபத்தில் தெரிவித்த கருத்துக்கு ஈரானின் ஆன்மீகத் தலைவர் என மதிக்கப்படும் கொமைனியின் ஆலோசகர் பிரௌஸாபாதி மறுப்புத் தெரிவித்துள்ளார். பிராந்தியத்தில் இஸ்ரேலை விட ஆபத்தான நாடு சவூதி அறேபியா என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

சவூதி அறேபியா, ஈரானுக்கு எதிராக ஏதேனும் போரில் இறங்கினால் அதற்குப் பதிலளிக்கும் சக்தி ஈரானுக்குள்ளது என்று அவர் சூளுரைத்துள்ளார். மோதலை ஆரம்பித்தால் அவர்கள் அமெரிக்கப் போர் விமானங்களுடனும் சூடானின் விமான ஓட்டிகளுடனும்தான் எம்மை எதிர்கொள்வர். ஆனால், நாம் அவர்களை எதிர்கொள்வதற்கான சுய ஆற்றலைப் பெற்றுள்ளோம் என அவர் தெரிவித்தார்.

இதற்கிடையில் ஈரான் மீது ஆயுதத் தடை விதிக்குமாறு சவூதி அறேபியா ஐ.நா. சபைக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது. கடந்த சில ஆண்டுகளாக ஈரான்-சவூதி ஆகிய இரு நாடுகளும் இத்தகைய கடும் சொற் போரில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## முன்னணி இஸ்லாமியத் தலைவர் எகிப்தில் சுட்டுக் கொலை



எகிப்திய சகோதரத்துவ அமைப்பின் முன்னணித் தலைவர்களுள் ஒருவரான முஹம்மத் கமால், கடந்த சில தினங்களுக்கு முன்பாக எகிப்திய பொலிஸாரினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். ஸீஸி அரசாங்கத்தின் ஆட்சியில் அப்பட்டமாக மீறப்படும் மனித உரிமைகள் விவகாரம் மிக மோசமான கட்டத்தை அடைந்துள்ளதையே இச்சம்பவம் காட்டுவதாக பாரிய விமர்சனங்கள் எழுந்துள்ளன. மனித உரிமை நிறுவனங்கள் இக்கொலையைக் கண்டித்துள்ளதோடு, எகிப்தில் ஜனநாயகம் திரும்ப வேண்டும் எனவும் கோரியுள்ளது.

கமாலைக் கைதுசெய்வதற்கான பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையிலேயே அவர் கொல்லப்பட்டுள்ளார். சகோதரத்துவ அமைப்பின் இராணுவப் பிரிவுக்கு கமால் தலைமை தாங்கியவர் என பொலிஸார் கூறுகின்றமை அப்பட்டமான பொய்யாகும். எகிப்திய சகோதரத்துவ அமைப்புக்கு எந்தவித இராணுவப் பிரிவும் கிடையாது என்பது தெட்டத் தெளிவான உண்மையாகும்.

துருக்கிய ஜனாதிபதி அர்தூகான் எகிப்துடன் மீண்டும் சுமுகமான உறவைத் தொடர்வதானால் ஜனாதிபதி முர்ஸியையும் அவரது சகாக்களையும் ஸீஸி அரசாங்கம் விடுதலை செய்ய வேண்டும் என்பதை மீண்டும் நிபந்தனையாக விதித்துள்ளார். இராணுவப் புரட்சி மூலம் அதிகாரத்திற்கு வந்துள்ள ஸீஸியின் அரசாங்கத்தை எந்தவகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது என அர்தூகான் வலியுறுத்தியுள்ளார்.

## இஸ்ரேலுடன் ஜோர்தான் எரிவாயு ஒப்பந்தம்

இஸ்ரேலுடன் ஜோர்தான் அரசாங்கம் மேற்கொண்டுள்ள எரிவாயு தொடர்பான ஒப்பந்தத்திற்கு அந்நாட்டில் பாரிய எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. அம்மானில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டைக் கண்டித்து மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். யூத நாட்டை அங்கீகரித்து அரசியல், பொருளாதார உறவுகளை வைத்துக் கொள்வது ஜோர்தானின் பாதுகாப்புக்கும் முன்னேற்றத்திற்கும் அச்சுறுத்தலாக அமையும் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் கோசமெழுப்பினர்.

ஜோர்தான் அரச தரப்புப் பேச்சாளர், தகவல் துறை அமைச்சர் முமானி, ஜோர்தான் தேசிய தொலைக்காட்சியில் இவ்வொப்பந்தத்தை நியாயப்படுத்தி பேசியுள்ளார். இஸ்ரேலிடமிருந்து வருடாந்தம் 600 மில்லியன் டொலர் பெறுமதியான இயற்கை எரிவாயுவை கொள்வனவு செய்வதற்கு ஜோர்தான் அரசாங்கம் உடன்பட்டுள்ளது. செப்டம்பர் 26 இல் இவ்வொப்பந்தம் கைச்சாத்திடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பாசிலோனியாவிலிருந்து காஸாவை நோக்கி வரும் நிவாரணப் படகு

ஸ்பெய்ன் நகரான பாசிலோனியாவிலிருந்து மத்திய தரைக் கடல் வழியாக நிவாரணப் படகொன்று காஸாவை நோக்கி பயணித்து வருகின்றது. ஸைதூனா எனப் பெயரிடப்பட்டுள்ள இப்படகில் 13 பெண்கள் பயணிக்கின்றனர். பெரும்பாலானவர்கள் முஸ்லிம் அல்லாத பெண்கள். கடந்த பத்தாண்டுகளாக இஸ்ரேல் காஸா மீது விதித்துள்ள பொருளாதாரத் தடையை உடைப்பதே நிவாரணப் படகின் நோக்கம் என அவர்கள் தெரிவிக்கின்றனர்.



இஸ்ரேலிய கடற்படையினர் இப்படகை எதிர்கொள்வதற்கு தம்மை தயார்படுத்தி வருவதாக இஸ்ரேலிய இராணுவ வட்டாரங்கள் கூறுகின்றன. காஸா விவகாரம் இன, மத, மொழி எல்லைகளை தாண்டிய சர்வதேச மனிதாபிமானப் பிரச்சினை என்பதை இந்நிவாரணப்படகு உலகத்திற்கு உணர்த்தியுள்ளது.

## ஐரோப்பாவுக்கான மத்திய கிழக்கு அகதிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

நாளாந்தம் ஐரோப்பிய நாடுகளுக்கு இடம்பெயரும் மத்திய கிழக்கு நாடுகளின் அகதிகள் எண்ணிக்கை பெருகி வருவதாகவும் அவர்களைப் பராமரிப்பது பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளதாகவும் கவலை வெளியிடப்படுகின்றது. கடந்த வாரம் 40 படகுகளில் சென்ற 5650 அகதிகள் கடல் அனர்த்தத்திலிருந்து மீட்கப்பட்டுள்ளனர் என்று இத்தாலியின் கரையோரப் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் உறுதி செய்துள்ளார். எனினும், அவர்களில் 9 பேர் மரணித்துள்ளதோடு, கர்ப்பிணிப் பெண் ஒருவர் ஹெலிகொப்டர் மூலம் இத்தாலியத் தீவுகளில் ஒன்றான லம்பெடுஸாவுக்குக் கொண்டு செல்லப்பட்டார் எனவும் அவ்வதிகாரி தெரிவித்தார்.

சிசிலி மற்றும் லிபியாவுக்கு இடைப்பட்ட பிராந்தியத்தில் இத்தீவு அமைந்துள்ளது. லிபியாவிலிருந்தும் இடம்பெயர்வோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## ஆப்கானிஸ்தானில் குந்தூஸ் நகர் மீது தாலிபான்கள் முற்றுகை

அரச படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள குந்தூஸ் நகர் மீது தாலிபான்கள் நடத்திய தாக்குதலில் நூற்றுக்கணக்கான பொலிஸார் கொல்லப்பட்டுள்ளனர். நகரின் நாற்புறங்களிமிருந்து தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பிரெச[illegible] நன்கொடை வழங்கும் நாடுகளின் மாநாடு நடைபெற இருந்த நிலையிலேயே இத்தாக்குதல் இடம்பெற்றுள்ளது. இதனால் ஆப்கானின் அகதிகளுக்கான நிவாரணப் பணிகளுக்கு இடையூறு ஏற்பட்டுள்ளதோடு, சிவிலியன்களின் பாதுகாப்பும் கேள்விக்குள்ளாகியிருக்கிறது.

ஹெல்மென்த் மாகாணத்திலுள்ள நவா மாவட்டத்திலும் தாலிபான்களின் தாக்குதல் கூர்மையடைந்துள்ளது. 2014 இல் நேட்டோ படையினர் பெருமளவில் ஆப்கானை விட்டு வெளியேறிய பின்னர் நடாத்தப்பட்ட மிகப் பெரிய தாக்குதல் இது என அறிவிக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதி முஹ்ஸின் முஹம்மது ஸாலிஹ், பலஸ்தீன் வரலாறு மற்றும் அரசியல் துறையில் நிபுணத்துவம் பெற்றவர். பலஸ்தீனின் பண்டைய வரலாறு முதல் சமகால அரசியல் போக்கு வரை நீண்டு செல்லும் அவரது ஆய்வுகள் நான்கு பாகங்களைக் கொண்ட நூல்களாக வெளிவந்துள்ளன. 2002 இல் மலேசியாவின் கோலாலம்பூரில் மீள்பதிப்பைக் கண்ட அவரது நூலின் முதற் பாகம் இங்கு தமிழில் பெயர்க்கப்படுகின்றது.



# பலஸ்தீன் நிலமும் சமூகமும்

அறபு மூலம் : கலாநிதி முஹ்ஸின் முஹம்மது ஸாலிஹ்
தமிழில்: யூ.கே.றமீஸ் (விரிவுரையாளர், பாதிஹ்.)

## பலஸ்தீனர்கள் தமது நிலங்களை யூதர்களுக்கு விற்றார்களா?

பலஸ்தீன் விவகாரத்தில் மிகவும் புலமை வாய்ந்த கலாநிதி முஹ்ஸின் ஸாலிஹ் அவர்கள் தனக்கு ஏற்பட்ட ஒரு நிகழ்வை குறிப்பிடும்போது ''ஒரு முறை அரபு நாட்டை சேர்ந்த பல்கலைக்கழக பேராசிரியர் ஒருவர் என்னிடம் ஒரு கேள்வியை கேட்டார். பலஸ்தீனர்கள் தமது நிலங்களை விற்றுவிட்டு யூதர்களுக்கு அதனை வழங்கிவிட்டு சென்றுவிட்டார்களா? என்பதே அக்கேள்வியாகும். இக்கேள்வி எனக்கு சங்கடத்தை ஏற்படுத்தாதபோதிலும் கூட குறித்த நபர் நவீன வரலாற்றில் கலாநிதிப்பட்டம் முடித்த பேராசிரியர் என்பதும், அவரது நாட்டில் வரலாற்று பாடத்திற்கான கல்வித்திட்டத்தை வகுப்பதில் முன்னணியில் நின்று பாடுபட்டவர் என்பதும் எனக்கு பெரிய சங்கடத்தை ஏற்படுத்தியது. உண்மையில் இது அதிகமானவர்களுடைய உள்ளத்தில் தோன்றும் ஒரு கேள்விதான். இதனை பலர் வெளிப்படையாக கேட்பதற்கு சங்கடப்படுகின்றார்கள். இதற்கான பதிலை நாம் தெளிவாக புரிந்துகொள்ள வேண்டும்'' என்கிறார்.

யூத, சியோனிச பரப்புரைகளை முன்னெடுப்பவர்கள் ''பலஸ்தீனர்கள் தமது நிலங்களை யூதர்களுக்கு விற்றுவிட்டதாகவும், அனுமதிக்கப்பட்ட வழிமுறைகளின் ஊடாகவே அச்சொத்துக்களை யூதர்கள் விலை கொடுத்து வாங்கியதாகவும், மீளப்பெறும் உரிமை பலஸ்தீனர்களுக்கு இல்லையெனவும்'' என்ற கருத்துகளை திட்டமிட்டு பரப்புகின்றார்கள். இது சரிதானா? ஏற்புடையதா? இது தொடர்பாக சுருக்கமாக நோக்குவோம். 19ஆம் நூற்றாண்டுகளில் யூத, சியோனிச பரப்புரையாளர்கள் ''நிலமில்லாத மக்களுக்கு மக்களில்லாத நிலம்'' என்ற கருத்துருவாக்கத்தை மேற்கொண்டிருந்தார்கள். அதாவது பலஸ்தீனில் மக்கள் இருக்கவில்லை. எனவே இது எமது நிலம் என்பதுதான் அவர்களது வாதம்.

இது உண்மைதானா? யூத ஆக்கிரமிப்பாளர்கள் தமது ஆரம்ப கட்டத்திலே பலஸ்தீனர்களின் உயிரோட்டத்தை கண்ணுற்றார்கள். தமது நிலத்துடன் இறுக்கமான பிணைப்பை பேணுவர்களாக உணர்ந்து கொண்டார்கள். 19ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் இடம்பெற்ற ஒரு நிகழ்வு இதற்கான சிறந்த எடுத்துக்காட்டாகும். தியோடர் ஹேர்ஸலுக்கு மிக நெருக்கமான மார்க்ஸ் நூர்தோ என்பவர் இரு யூத மத தலைவர்களை பலஸ்தீனுக்கு அனுப்பி அங்கு யூதர்களை குடியேற்றுவது சாத்தியமா என்று ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு வேண்டியிருந்தார். இவ்வறிக்கை யூத மாநாட்டில் சமர்ப்பிக்கப்படுவதற்காக மேற்கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். அதில் அவர்கள் ''பலஸ்தீன் என்பவர் ஒரு அழகான மணப்பெண் ஆவாள். அனைத்து நிபந்தனைகளும் அவளிடம் பூரணமாக காணப்படுகின்றன. ஆனால் அவள் உண்மையில் திருமணம் முடித்து விட்டவள்'' என்று காணப்பட்டது. அதாவது அது மக்களற்ற நிலமாக இல்லை. அங்கு மக்கள் காணப்படுகின்றார்கள் என்பதுதான் இதன் விளக்கமாகும்.

பலஸ்தீனில் யூதர்கள் குடியேற்றப்பட்ட ஆரம்ப கட்டத்திலே பலஸ்தீனர்கள் அதனை எதிர்பார்த்தார்கள். உஸ்மானிய சாம்ராஜ்யம் இருந்து அக்கால கட்டத்தில் 1886 களில் யூத குடியேற்றங்கள் ஆரம்பிக்கப்பட்டபோது பலஸ்தீனர்களுக்கும் யூதகுடியேற்ற வாசிகளுக்கிடையில் மோதல்கள் ஏற்பட்டது.

ரஷாத் பாஷா என்பவர் உஸ்மானிய சாம்ராஜ்யத்தின் குத்ஸ் பிரதேச நிர்வாக அதிகாரியாக (முதஸர்ரிப்) நியமிக்கப்பட்டபோது அவர் சியோனிச சக்திகளுடன் நேசமாக நடந்துகொண்டார் என்பதனை பலஸ்தீனர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. குத்ஸ் பிரதேச தலைவர்கள் 1890 மே மாதம் இதனை ஆட்சேபித்து அவருக்கு எதிராக மனுக்களை முன்வைத்தார்கள்.

1891 யூன் 24ஆம் திகதி குத்ஸ் பிரதேச தலைவர்கள் உஸ்மானிய சாம்ராஜ்ய பிரதம மந்திரியிடம் (ஸத்ருல் அஃலம்) சென்று ரஷ்ய யூதர்கள் பலஸ்தீனை நோக்கி இடம்பெயர்வதை தடுத்து நிறுத்துமாறும், நிலக்கொள்வனவை தடைசெய்யுமாறும் கோரிக்கை விடுத்தார்கள். (தாரீகு பலஸ்தீன் அல்-ஹதீஸ் -அப்துல் வஹ்ஹாப் அல் ரியாலி) பலஸ்தீனின் அறிஞர்களும், உஸ்மானிய சாம்ராஜிய பிரதிநிதிகளும், பலஸ்தீன பிரசுரங்களும் கூட யூத குடியேற்றங்களின் அபாயத்தை கோடிகாட்டின. அவர்களை எதிர்கொள்வதற்காக கடுமையான நடவடிக்கையெடுக்குமாறு வேண்டிக்கொண்டன.

1897களில் குத்ஸின் முப்தியாக இருந்த அஷ்ஷெய்க் முஹம்மத் தாஹிர் அல் ஹுஸைனி அவர்கள் அரசை சார்ந்திருந்த ஒரு நிறுவனத்துக்கு தலைமை வகித்தார். இதன் மூலமாக குத்ஸ் மாகாணத்தின் உரிமைகளை நகர்த்தும் விடயத்தில் வரையறைகளை ஏற்படுத்தி யூதர்களுக்கு நில உரிமை சென்றுவிடாது தடுப்பதற்கு காரணமாக அமைந்தார்.

ஷெய்க் சுலைமான் தாஜி பாரூக்கி என்பவர் 1911இல் உஸ்மானிய தேசிய கட்சியை உருவாக்கி சியோனிச அபாயத்தையிட்டு சமூகத்தை எச்சரித்துள்ளார்.இதேபோன்று யூசுப் அல் காலிதி, ரூஹி காலிதி, ஸஈதுல் ஹுஸைனி, நஜீப் நஸ்ஸார் போன்றோரும் பெரும் முயற்சிகள் முன்னெடுத்துள்ளார்கள். (தாரீகு பலஸ்தீன் அல் ஹதீஸ்)

சுல்தான் அப்துல் ஹமீத் அவர்களும் அவரது ஆட்சியும் பலஸ்தீனை நோக்கிய யூத இடப் பெயர்வையும் குடியேற்றங்களையும் தடுப்பதற்கான முயற்சியில் பாரியளவில் ஈடுபட்டபோதும் உஸ்மானிய கிலாபத்தின் நிர்வாக பலவீனங்களும், மோசடிகளும் இதற்காக தடையாக அமைந்தது. யூதர்களும் இலஞ்சம் கொடுத்து தமது கனவுகளை அடைந்து கொண்டார்கள். அதிகமான நிலங்களை விலைக்கு வாங்கிவிட்டார்கள்.

அத்தோடு ஹிஸ்புல் இத்திஹாத் வத்தரக்கி (committee of union and progress) என்று அழைக்கப்பட்ட யூத, சியோனிச செல்வாக்குக்கு உற்பட்ட அமைப்பு உஸ்மானிய கிலாபத்தின்மீது ஏற்படுத்திய செல்வாக்கும் சுல்தான் அப்துல் ஹமீதை 1909இல் பதவியிலிருந்து நீக்குவதற்கான அவர்களது முயற்சியும் காணிக்கொள்ளையை முன்னெடுக்கவும் பலஸ்தீனை நோக்கிய யூத இடம்பெயர்வுக்கும் காரணமாய் அமைந்தது.

1918களில் உஸ்மானிய சாம்ராஜ்யத்தின் இறுதிக்காலங்கள் யூதர்கள் 420000 சதுர கி.மீ நிலத்தை லெபனானிய நிலச்சுவாந்தர்களிடமிருந்து கொள்வனவு செய்திருந்தார்கள். ஸர்ஸக், தியான், துவைனி, முதூர் போன்ற குடும்பங்கள் தமது நிலங்களை விற்றுவிட்டார்கள்.

வரிகளை கட்ட முடியாத விவசாயிகளின் நிலத்தை விற்பனை செய்வதாக உஸ்மானிய நிர்வாகிகள் பகிரங்கமாக அறிவித்தமையும் நிலம் பறிபோக ஒரு காரணமாகும். சில பலஸ்தீன நில உரிமையாளர்களும் தமது நிலங்களை விற்பனை செய்தார்கள். ஆனால், அவர்களில் அதிகமானவர்கள் கிறிஸ்தவ பலஸ்தீனர்களாவர். ரொக், கிஸார், கூரி, ஹனா போன்ற குடும்பங்களே இவ்வாறு விற்பனை செய்தார்கள்.

எது எப்படியாயினும் இது 7% மான நிலம்தான். 93% மான கொள்ளையிட்ட நிலத்தை இதன் மூலம் மூடிய மறைக்க முனைகிறார்கள்.

(தொடரும்)

---

# பாலைவனச் சிங்கம்

(சுலைமான் ஹாதிர்)



வரலாற்று நவீனம் அங்கம் - 17

ஹமதானி

## அநியாயத் தீர்ப்பை மாற்றிய மக்கள் போராட்டம்



சுலைமான் ஹாதிரிற்கு இராணுவ நீதிமன்றம் மரணதண்டனை விதித்துள்ள செய்தி நாடெங்கும் காட்டுத்தீயாய்ப் பரவியது. பல ஆண்டுகளா எகிப்திய மக்களுக்கு இடையறாத இன்னல்களைக் கொடுத்துவரும் நாடு ''ஆக்கிரமிப்புத் தேசம் இஸ்ரவேல் ஆகும்! அந் நாட்டின் ஏழு உள வாளிகளைச் சுலைமான் ஹாதிர் கொன்றதன் பின் அவன் மிஸ்ரு மக்களின் நெஞ்சில் நிழலாடும் சிம்ம சொப்பனமாக மாறினான். பொது மக்களின் பலர் தம்மை யூத ஸியோனிஸ்டுகளின் கொடுங்கோல்களிலிருந்து மீட்க வந்த ஒரு புருசோத்தமன் போன்று அவனை மதித்தனர். எனவேதான் சுலைமானுக்கு மரண தண்டனை வழங்கப்படும் என்ற தீர்ப்பு அவர்களின் உள்ளங்களை வேலாய்த் தைத்தது.

இராணுவ நீதிமன்றத்தின் இத்தீர்ப்புக்கு மக்களிடையே கொஞ்சம் கொஞ்சமாக எதிர்ப்பு கிளம்பலாயிற்று, சுலைமான் ஹாதிரின் சொந்த ஊரான ''அக்கியாத்'' தில்தான் முதன் முதலாக எதிர்ப்புப் புகை கிளம்பியது. சில இஸ்லாமிய உணர்வுள்ள இளைஞர்கள் எதிர்ப்புச் சுவரொட்டிகளை ஊரின் பல இடங்களிலும் ஒட்டினர். இன்னும் சிலர் பள்ளிவாசல்களிலும் சில முக்கிய இடங்களிலும் எழுந்து நின்று இத்தீர்ப்பின் அநீதத் தன்மையைக் கண்டித்து மக்களுக்கு உண்மையை விளக்கினர்.

உணர்ச்சி மேலிட்ட இளைஞர்களில் சிலர் நகரின் முக்கிய இடங்களில் கோஷங்கள் எழுப்பலாயினர். சிறுதுளி பெருவெள்ளம் போல பொழுது சாயச் சாய மக்கள் மத்தியில் எதிர்ப்புப் படலம் அதிகரிக்கத் தொடங்கியது. மஃரிப் தொழுகையின் பின் ''அக்கியாத்'' கிராமத்து இளைஞர்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து வீதியில் அமைதியாக ஓர் எதிர்ப்பு ஊர்வலத்தை நடத்தினர். பொது மக்களும் அவர்களுடன் இணைந்து கொண்டனர். எல்லோருமாக ஒரு பொலிஸ் நிலையத்துக்கு ஒரு மகஜரை சமர்ப்பிக்க அமைதியாகச் சென்றனர். அந்த ஊர்வலத்தின் இடையே இஃவான் இயக்கத்தின் பயிற்சி பெற்ற பல இளைஞர்கள் இருந்ததால்தான் பீறிட்டுப் பாயும் மக்களின் உணர்ச்சி வெள்ளத்தைக் கட்டுப்படுத்தி அவர்களை அமைதியாகக் கொண்டு செல்ல முடிந்தது. இது போன்ற சந்தர்ப்பங்களில் பொதுமக்களின் உணர்ச்சி வெள்ளத்தில் அடிபட்டுச் செல்லும் சறுகுகளாகவும் வண்டல்களாகவும் மாறாமல் அதன் ஓட்டத்தை மாற்றி உரிய திசையில் பாயச் செய்யும் திராணியும் வலிமையும் மிக்கவர்களாக சமூக சீர்திருத்தவாதிகளும் உலமாக்களும் விளங்க வேண்டும். இயல்பிலே சில இளைஞர்கள் உணர்ச்சி மிக்கவர்களாக இருப்பர். அவர்களது பேச்சிலும் உணர்ச்சி செயலிலும் உணர்ச்சி! எதிலும் உணர்ச்சி! ஆனால் நெறிப்படுத்தப்பட்ட அறிவின் வழியாக வந்த உணர்ச்சியல்ல அது! எங்கெல்லாம் உணர்ச்சியும் பாசமும் முந்திக் கொள்கின்றதோ அங்கெல்லாம் அறிவும் கட்டுப்பாடும் பின்வாங்கும். இவ்வூர்வலத்திலும் சில இயக்கங்களைச் சேர்ந்த உணர்ச்சி மிக்க இளைஞர்கள் கட்டுப்பாட்டை மீறி பொலிஸ் நிலையத்தின் அருகாமையிலே உச்சஸ்தாயிலில் கோஷங்களை எழுப்பினர். இதனால் நிலைமையை சீர்படுத்த முனைந்த சில பொலிஸார் குண்டாந்தடி, கண்ணீர்ப்புகை.. போன்றவற்றைப் பிரயோகம் செய்தனர். சற்று நேரத்துக்கெல்லாம் அங்கே ஒரு கலவரமே வெடித்தது. ஜனப் பிரளயமாய் வந்த ஜன சமுத்திரத்தின் முன்னால் பொலிஸாரால் ஈடுகொடுக்க முடியுமா? பொலிஸ் அதிகாரிகளும் ஒவ்வொருவராக தலைமறைவாகத் தொடங்கினர். இதனை உணர்ந்த சிலர் ''அக்கியாத்'' பொலிஸ் நிலையத்திற்கே தீயிட்டனர்.

அடுத்த நாள் மீண்டும் எதிர்ப்பு வெள்ளம் உணர்ச்சி வெள்ளமாய் மாறி நாட்டின் பல இடங்களில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் ஊர்வலங்களும் நடந்தேறின. சுலைமான் சட்டக் கல்வி பயின்ற ''அஸ்-ஸர்க்''சட்டக்கல்லூரி மாணவர்களும் நெருப்பாய்க் கிளம்பி இந்த அநியாயமான தீர்ப்பை மாற்ற வேண்டும். நேர்மையாக மீண்டும் விசாரணை வைக்க வேண்டுமெனக் கோஷம் எழுப்பி வகுப்புகளைப் பகிஷ்கரித்தனர். இன்னும் சில இடங்களில் மனித குல எதிரியான ஸியோனிஸத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டங்களில் மக்கள் புற்றீசல்களாய்க் கிளம்பி கோஷங்களை எழுப்பிச் சென்றனர். மொத்தத்தில் குடிமக்களின் பெரும்பகுதியினர் பல இடங்களில் நடந்த கூட்டங்களிலும் ஆர்ப்பாட்டங்களிலும் கலந்து தமது எதிர்ப்பை வெளிக்காட்டினர்.

எகிப்து அரசு இவற்றை அடக்க இராணுவத்தைப் பயன்படுத்தியது. ஆனால் அவர்களின் அடக்குதலோ பீறிட்டு வரும் மக்கள் பிரளயத்தை பிண்ணியவன் கைகளால் மறைத்தவன் கதையாகவே அமைந்தது. மனிதர்களுக்கு மத்தியிலே என்று முதல் ஆட்சி, அரசியலமைப்பு தோற்றம் பெற்றதோ அன்று முதல் அரசுகள் எதிர்நோக்கி வந்த பெரிய எதிர்ப்பு சக்தி உள்நாட்டு மக்களின் எதிர்பார்ப்பாகும். எனவே, எந்த ஆட்சியில் மக்களின் எதிர்ப்பு சக்தி பீறிட்டுப் பாயுமோ அது அந்த அரசின் அழிவிற்கான மரண ஓலமே! ஏனிந்த நூற்றாண்டிலும் கூட எந்த சக்தியையும் விட எந்தவொரு அரசும் பொதுமக்கள் சக்திக்கே அஞ்சும். நடைமுறையிலும் கொடுங்கோல் அரசுகளின் அஸ்திமானத்துக்குக் காரமாக அது அமைந்துள்ளது. ஈரானிலும் பிலிப்பைன்ஸிலும் அமெரிக்காவின் கைப்பொம்மைகளான ஷாவினதும், மார்க்கோஸ் இனதும் ஆட்சிக் கொடுமைகளை அழித்தொழித்ததும் இந்த மக்கள் எதிர்ப்பு சக்திகளே!

இதனால் இன்றைய அரசுகள் பாடம்படித்து விட்டன எனவேதான் ஆட்சியாளர்கள் வெளிப்படையாக பொதுமக்களின் குரல்களுக்கு செவிமடுத்துவிட்டு உள்ரங்கத்தில் கபட நாடகம் ஆடத்தொடங்கிவிட்டன. இந்த வகையில்தான் எகிப்திய அரசும் சுலைமான் ஹாதிரிற்கு அளிக்கப்பட்ட மரண தண்டனையை வாபஸ் பெற்று ஆயுள் தண்டனை விதிக்கலாயிற்று!

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீள்பார்வை



# சிரியா: இனி நடக்கப் போவது என்ன?

• றவூப் ஸெய்ன்

செப்டம்பர் தொடக்கத்தில் ஐ.நா. மத்தியஸ்தம் வகித்த அமைதிப் பேச்சுவார்த்தைகள் முழுமையாகத் தோல்வியடைந்த நிலையில் சிரியாவின் அரசியல் எதிர்காலம் குறித்த பாரிய அச்ச அலைகள் எழுந்துள்ளன. அலெப்போவைச் சூழ்ந்துள்ள போர் மேகங்கள் கலைவது கடினமான காரியம் என்பதை போருடன் சம்பந்தப்பட்ட சக்திகள் நேர்முகமாகவே வெளிப்படுத்தி விட்டன. ரஷ்யா அதில் முக்கிய பங்காளன்.

பிராந்தியத்தில் தமது நலன்களுக்கு ஏற்ப ஆட்டம் போடும் இவ்வல்லரசுகள், அவ்வப்போது தமது வசதிகளுக்கு ஏற்ப அரசியல் விளையாட்டுக்களில் ஈடுபட்டு வருகின்றன. 2011 இல் கிளர்ச்சியாளர்கள் என்ற சொல்லே சிரிய அரசாங்கத்தை எதிர்ப்பவர்களுக்குப் பயன்படுத்தப்பட்டது. இப்போது அவர்கள் அனைவரும் பயங்கரவாதிகளாக சித்தரிக்கப் படுகின்றனர்.

யினால் அலறித் துடிக்கும் குழந்தைகளும், அப்பாவிப் பெண்களும், நகர முடியாமல் திணறும் வயோதிபர்களும்தான் வல்லரசுகளின் வார்த்தைகளில் பயங்கரவாதிகள் என்றால், உலகம் இன்று எங்கே போய்க்கொண்டிருக்கின்றது என்று நாம் சிந்திக்க வேண்டியுள்ளது.

ரஷ்யா அமைதி நடவடிக்கைகளில் தனது தரப்புக் கடமையை நிறைவேற்றவில்லை என்பதைக் காரணமாக வைத்து ரஷ்யாவுடனான அனைத்துப் பேச்சுவார்த்தைகளையும் நிறுத்தியுள்ளதாக அமெரிக்கா கூறுகின்றது. ஏற்கனவே வொஷிங்டனும் மொஸ்கோவும் அமைதி ஒப்பந்தமொன்றை மேற்கொண்டிருந்தன. தற்போது பேச்சுவார்த்தை முறிவடைந்த நிலையில் அலெப்போவைக் கைப்பற்றும் கடும் முயற்சியில் ரஷ்ய, சிரிய போர் விமானங்கள் ஈடுபட்டுள்ளன. இவர்களுக்கு உதவியாக ஈரானிய, ஈராக்கிய படைகளும் களத்தில் செயல்படுகின்றன.





190 சதுர கி.மீ. பரப்பையும் 24 இலட்சம் மக்களையும் கொண்ட அலெப்போ மீது இன்று ரஷ்யா, ஈராக், ஈரான், லெபனின் ஹிஸ்புல்லாஹ், சிரியாவின் அரச படை என ஐந்து நாடுகளின் தேசிய இராணுவம் சரமாரியாக குண்டு மழை பொழிகின்றன. வான் வழியாகவும், தரை வழியாகவும் ஒரு நகரம் இலக்கு வைக்கப்படுகின்றது.

இவ்வைந்து நாடுகளாலும் இந்நகரம் அழிக்கப்படுவதற்கு முன்வைக்கப்படும் ஒரே காரணம், அங்கு பயங்கரவாதிகள் நிலைகொண்டுள்ளனர் என்பது தான். ஸஹ்ரிய்யா எனப்படும் வைத்தியசாலையில் குளோரின் வாயுத் தாக்குதலால் காயப்பட்டவர்களுக்கு சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது. அந்நகரிலுள்ள வைத்தியசாலை மீது திட்டமிட்டு நடாத்தப்பட்ட விமானத் தாக்குதலில் குறைந்தது பத்துப் பேர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். நூற்றுக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர். கொல்லப்பட்டவர்கள் அனைவரும் பொது மக்கள் என்பதும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே, சர்வதேச அளவில் போர்ச் சூழலில் தடுக்கப்பட்ட குளோரின் எரிவாயு உள்ளிட்டு, வெள்ளை பொசுபரஸ் மற்றும் இரசாயன, உயிரியல் ஆயுதங்களை தாறுமாறாகப் பயன்படுத்தி வரும் சிரிய அரசாங்கப் படையினரும் ரஷ்ய ஆக்கிரமிப்புப் படையினரும் பயங்கரவாதிகளல் லர். அலெப்போவில் பசி

அமெரிக்க ராஜாங்க செயலாளர் ஜோன் கெரி, இதுவரை தனது அரசாங்கத்தின் உண்மையான நிலைப்பாட்டை வெளிப்படுத்தவில்லை. பெயரளவிலான அமைதிப் பேச்சு என்று ஜோன் கெரி அறிக்கை விடுவதும் மாநாடுகளைக் கூட்டுவதுமாய் காலத்தைக் கடத்துகின்றார் என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

சிரியாவின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுகின்ற அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலுள்ள அடிப்படை வேறுபாடு என்ன என்பது மங்கலாகவே உள்ளது. சிரியாவின் தொடர்பாடல் துறையில் முதலீடு செய்துள்ள ரஷ்யா ஈரானின் நெருங்கிய நண்பன். முன்னாள் சிரியாவின் ஆட்சியாளர் ஹாபிஸ் அல் அஸதின் சோசலிஸ நண்பன். இம்மூன்று விடயங்களுமே ரஷ்யாவை இயக்குவதாக நாம் குறுக்கி விடக் கூடாது.

புரட்சிக்குப் பிந்திய சிரியாவில் இஸ்லாமியவாதிகள் அதிகாரத்தைக் கையேற்பது ரஷ்யாவுக்கு உவந்த விடயமல்ல. இதே நியாயம் அமெரிக்காவுக்கும் உள்ளது. இஸ்ரேலைப் பாதுகாப்பதில் சிரியாவை அழிப்பதும் ஒரு பகுதியாகும். இந்தக் கோணத்திலேயே அமெரிக்கா செயல்படுகின்றது. வெளிப்படையில் சிரியாவில் போரை நிறுத்த வேண்டும் என்ற அமெரிக்க கோசத்திற்குப் பின்னால் எந்த உண்மையான செயலார்வமும் இல்லை.

போரை நிறுத்துவதால் அமெரிக்காவுக்கு எந்தப் பயனும் கிட்டிவிடப் போவதில்லை. வெறுமனே தனது மனிதாபிமான முகத்தைக் காத்துக் கொள்வதற்கு சிரியாவில் அமைதிப் பேச்சுவார்த்தை குறித்து அது அறிக்கை விடுகின்றது. போர் நீடிப்பதற்கு ரஷ்யாவே மூல காரணம் என்று குற்றம் சுமத்துகின்றது. ரஷ்யாவுடனான பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் இல்லை என்று சிரியாவில் கூர்மையடையும் மனிதாபிமான நெருக்கடியை கைவிடுகின்றது. பாதுகாப்புச் சபையில் தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்த பின்நிற்கின்றது.

இவற்றையெல்லாம் கூர்ந்து நோக்கும்போது சிரியாவின் விவகாரத்தில் தலையிடுவதால் அமெரிக்காவுக்கு எந்த இலாபமும் இல்லை என்பதை தெளிவாகக் கணக்குப் பார்த்தே செயல்படுகின்றது என்பது புலனாகும்.

சமீபத்தில் சிரிய மக்களிடையே மேற்கொள்ளப்பட்ட கருத்துக் கணிப்பீடொன்று சிரிய மக்களுக்கு விடுதலை பெற்றுத் தருவதில் சர்வதேச சமூகத்தில் சிரியர்கள் நம்பிக்கை இழந்துவிட்டனர் என்பதைக் காட்டுகின்றனர். கணிப்பீட்டில் பங்குகொண்டவர்களில் 80 வீதமானோர் சர்வதேச சமூகத்தில் -குறிப்பாக, அமெரிக்கத் தலையீட்டில் சிரியர்களுக்கு எந்த நம்பிக்கையும் இல்லை என்று தெரிவித்துள்ளனர். உண்மையும் இதுவாகவே இருக்கின்றது.

ரஷ்யாவின் ஆதரவுடன் எதிர்வரும் சில மாதங்களுக்குள் போரை முழுமையாக முடிவுக்குக் கொண்டு வந்து, கிளர்ச்சியாளர்களை வெற்றி கொண்டு விடலாம் என்பது அஸதின் எதிர்பார்ப்பாகும். இது குறித்த உயர் மட்டப் பேச்சுவார்த்தைகள் ஈரான், ஹிஸ்புல்லாஹ், அஸத் வட்டாரங்களில் நடைபெற்று வருகின்றது.

விளைவாக, சிவிலியன்கள் எவ்விலை கொடுத்தாயினும் கிளர்ச்சியாளர்களை முற்றாக அழிக்கும் மூர்க்கத்தனமான அழிப்புப் போராட்டமொன்றில் சிரிய இராணுவம் இறங்கியுள்ளது. ஸஹ்ரா வைத்தியசாலை ஒரு வாரத்தினுள் மூன்று முறை தாக்கப்பட்டுள்ளது. இதுவே அலெப்போவிலுள்ள மிகப் பெரிய வைத்தியசாலையாகும்.

கிழக்கு அலெப்போவிலுள்ள இவ்வைத்தியசாலையில் பணியாற்றும் சிரிய-அமெரிக்க மருத்துவ கழகம் ரஷ்ய போர் விமானங்கள் ஸஹ்ராவை திட்டமிட்டே இலக்கு வைக்கின்றன என்பதை உறுதிசெய்துள்ளது. அங்கு அவசர சிகிச்சைப் பிரிவில் பணியாற்றும் வெளிநாட்டு [illegible] காயமடைந்துள்ளனர்.

ஐ.நா. தனது பங்கிற்கு சம்பவத்தைக் கண்டித்ததோடு மௌனமாகிவிட்டது. கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டிலுள்ள அலெப்போ நகரை கைப்பற்றி விட்டால் போரை நிறுத்தி விடலாம் என்பது அஸதின் கனவாக உள்ளது. ஆனால், போர் ஓய்வதற்கான எந்த சமிக்ஞையும் தெரியவில்லை. ஹமா மாகாணத்திலுள்ள முக்கிய இடங்களை இலக்கு வைத்து தற்கொலைத் தாக்குதலை கிளர்ச்சியாளர்கள் நடத்தி வருகின்றனர். டமஸ்கஸ் மற்றும் இத்லிப் மாகாணங்களை வேறுபடுத்துவது ஹமா மாகாணமாகும். 1982 இல் முன்னாள் ஆட்சியாளர் ஹாபிஸ் அல் அஸத் 1000 இற்கும் மேற்பட்ட சகோதரத்துவ இயக்கத்தினரை இங்கு தான் படுகொலை செய்தார். அரச கட்டப்பாட்டிலுள்ள ஹமா நகரை மீட்பதற்கு கிளர்ச்சியாளர்கள் மீளவும் தாக்குதல் ஆரம்பித்துள்ளனர். இது அஸதுக்கு இன்னொரு நெருக்கடியை கொடுத்து வருகின்றது.

இன்று சிரியாவில் இடம் பெற்று வரும் மயிர்க் கூச்செறியும் கூட்டுப் படுகொலைகளுக்கு ரஷ்யா மட்டுமன்றி, அயல் பிராந்தியத்திலுள்ள அறபு நாடுகளும் பொறுப்புக் கூற வேண்டும். சிரியாவில் அமைதி நடவடிக்கைகள் வெற்றியளிப்பதற்கு முன்பாகவே பெருந்தொகை மக்கள் அழிக்கப்பட்டு விடுவார்களோ என்ற அச்சம் மேலெழுந்துள்ளது. குறிப்பாக குழந்தைகளின் நிலமை கவலைக்கிடமாக உள்ளது.

யெமன் மீது தாக்குதல் நடத்தி வரும் சவூதி தலைமையிலான வளைகுடா கூட்டமைப்பு நாடுகள் தமது இராணுவ நடவடிக்கைகளை சிரியா மீது திருப்புவது குறித்து சிந்திக்க வேண்டியுள்ளது. சிரிய மக்களை பாதுகாக்க வேண்டுமாயின் இதைத் தவிர வேறு மார்க்கம் இல்லை என ஒரு அறபுப் பத்திரிகையாளர் எழுதுகிறார்.

ஆனால், இந்நடவடிக்கையின் எதிர்வினை குறித்து ஒரு முன் மதிப்பீடு இன்றியமையாதது. போர் எல்லா நேரங்களிலும் தீர்வாக இருப்பதில்லை என்ற உண்மையையும் மத்திய கிழக்கின் அறபு நாடுகள் உணர்ந்து செயல்பட வேண்டும். ஆனால், எவ்விலை கொடுத்தாயினும் சிரிய மக்களின் உயிர்கள் காப்பாற்றப்பட வேண்டும். இது உலகில் மனிதர்களாக இருக்கும் எல்லோரினதும் தார்மீகக் கடமையாகும்.

## பொஸ்பொரஸ் கரையினிலே...

### துருக்கியின் வீழ்ச்சியும் எழுச்சியும் - 05

600 ஆண்டு காலம் உஸ்மானியப் பேரரசை பொறாமையோடு நோக்கி வந்த ஐரோப்பா, அதனை மிகப் பெரும் சவாலாகவே கருதி வந்தது. அதனை சின்னாபின்னப்படுத்த சந்தர்ப்பம் எதிர்பார்த்திருந்தது. அந்தவேளையில்தான் முஸ்லிம்களிடையே தலைமைத்துவக் கட்டுப்பாடு தளர்ந்து, ஐக்கியம் சிதைந்து, சிற்றரசுகள் தோன்றத் தொடங்கின. எதிரிகள் இந்தப் பிளவுகளையும் பிரிவுகளையும் தமக்கு வசதியாகப் பயன்படுத்திக் கொண்டனர்.

குறிப்பாக சியோனிஸ்டுகள் அறபுத் தேசியவாதத்தையும் பாரசீக இனவாதத்தையும் பிரதேசவாதங்களையும் தூண்டிவிட்டனர். எல்லாப் பக்கங்களிலும் சவால்களும் சிக்கல்களும் தோன்றின. அவற்றை சமாளிப்பதற்கு சுல்தான் 2ஆம் அப்துல் ஹமீத் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டார். ஆனாலும் அவை எதுவும் வெற்றியளிக்கவில்லை.

இத்தகைய சூழலிலேயே இளம் துருக்கியர் அமைப்பு தலைதூக்கியது. அவர்கள் சியோனிஸ இரகசிய இயக்கங்களின் வழித்தோன்றல்கள் என்பது பின்னர்தான் தெரியவந்தது. அன்றைய இஸ்லாமியத் தலைவர்களான ஜமாலுத்தீன் ஆப்கானி, முஹம்மத் அப்துஹு, ஷகீப் அர்ஸலான் போன்றவர்கள் உஸ்மானிய கிலாபத்தின் வீழ்ச்சியை தடுத்து நிறுத்த எடுத்த பிரயத்தனங்களும் வெற்றியளிக்கவில்லை.

இந்திய முஸ்லிம்கள் கிலாபத் இயக்கத்தைத் தோற்றுவித்தனர். உலகளாவிய கிலாபத்திற்கு ஆதரவளிப்பதே அதன் நோக்கம். எவ்வாறாயினும், துருக்கிய உஸ்மானியர்களின் பிடியிலிருந்து அதன் கீழிருந்த ஒவ்வொரு பிராந்தியமும் மெல்ல மெல்ல பிரியத் தொடங்கியது. அதன் ஒட்டுமொத்த சரிவு நெருங்கி வந்தது. உஸ்மானியர்களின் சரிவை துரிதப் படுத்தியதில் கிறிஸ்தவ ஐரோப்பாவும் சியோனிஸ யூதர்களும் வரிந்து கட்டிக்கொண்டு களமிறங்கினர்.

கிறிஸ்தவ வரலாற்று ஆசிரியர்களுள் ஒருவரான டிஜோபெரி என்பவர், ''சிலுவை யுத்தம் கி.பி. 1291 இல் முடிவுற்ற போது அதில் தோல்வி கண்ட கிறிஸ்தவர்கள் அப்போதிருந்த உஸ்மானிய கிலாபத்தை வீழ்த்துவதில் பாரிய முயற்சிகளை முன்னெடுத்தனர். அவர்கள் வரைந்த திட்டங்களின் நோக்கத்தை 1918 இல் அடைந்து கொண்டனர். அதன் மூலம் ஐரோப்பிய கிறிஸ்தவர்களுக்கும் இஸ்லாமியர்களுக்கும் இடையிலே இருந்து வந்த வரலாற்றுப் பகை நீடிக்கவே செய்தது. மேற்கத்தேய கிறிஸ்தவ கூட்டுச் சக்திகள் Treaty Lauzanne ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.



Treaty of Lausanne 1912

முதல் உலகப் போரை அடுத்து முஸ்லிம் உலகின் மீது இவ்வொப்பந்தம் திணிக்கப்பட்டது. முதல் உலகப் போரில் துருக்கி ஜேர்மன் பக்கம் சாய்ந்ததை காரணமாக வைத்து துருக்கிய பேரரசைக் கவிழ்ப்பதில் வல்லரசுகள் மும்முரமாய் ஈடுபட்டன.

சிதைந்து சின்னாபின்னப்பட்ட உஸ்மானிய சாம்ராஜ்யத்தின் இறுதி ஆட்சிப் பொறுப்பாளர்களாக ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டவர்கள் மாறினர். இளம் துருக்கியர்கள்தான் இறுதிக் கட்டத்தில் துருக்கிய கலீபாவை வழிநடத்தினர். அவ்வியக்கத்தைச் சேர்ந்த தலாது பாஷா உள்நாட்டு அமைச்சராகவும் அன்வர் பாஷா பாதுகாப்பு அமைச்சராகவும் இருந்தனர். அன்வர் பாஷா 1914 இல் ஜேர்மனியுடன் பேச்சுவார்த்தை நடத்தி ரகசிய ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டார். அதன் மூலம் யுத்தத்தில் ஜேர்மனியுடன் துருக்கி இணைந்தது. அதனால் ஆத்திரமடைந்த வல்லரசுகள் துருக்கி மீது போர்ப் பிரகடனம் செய்தன. பிரிட்டன் இராணுவ ரீதியாக மட்டுமன்றி, ராஜதந்திர ரீதியாகவும் துருக்கிக்கு எதிராக செயற்பட்டது.

எகிப்து, சிரியா, ஜோர்தான், லெபனான் பிரதேசங்களில் நூற்றாண்டு காலமாக தூண்டப்பட்டு வந்த அறபு தேசியவாத சிந்தனையின் கசப்பான அறுவடைகள் அப்போது வெளிப்பட்டன. மத்திய கிழக்கில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள் துருக்கிக்கு எதிராகத் தூண்டப்பட்டனர். தொடர்ந்து துருக்கியை ஐரோப்பியர்கள் கைப்பற்றினர்.

இரண்டு பிரதான நிபந்தனையின் கீழ் வெற்றி கொண்ட இராணுவத்தை துருக்கியிலிருந்து அகற்றுவதற்கு அவர்கள் உடன்பட்டனர். ஒன்று: இஸ்லாமிய கிலாபத்தை முற்றாக ஒழிப்பது. இரண்டாவது, ஷரீஆ சட்டத்திற்குப் பகரமாக ஐரோப்பிய சட்டங்களை அமுல்படுத்துவது. இவ்வாறு உடைந்து போன உஸ்மானிய சாம்ராஜ்யத்தின் நிலங்களை விழுங்கி ஏப்பமிட்ட ஏகாதிபத்திய சக்திகள் தமது ஆதிக்கத்தை இப்படி நியாயப் படுத்தினர்.

''இந்த அரசுகளைக் கைப்பற்றுவதன் பிரதான நோக்கம் சுதந்திரத்திற்காக அவர்களைத் தயார்செய்து, அவர்களின் கல்வி மற்றும் அறிவியல் தரங்களை உயர்த்துவதே.''

இன்னொரு புறம் யூதர்கள் இஸ்லாமிய ஆட்சியின் வீழ்ச்சியை துரிதப்படுத்த களத்தில் குதித்தனர். உஸ்மானியர்களை வீழ்த்த வேண்டும் என்ற வெறியோடு அவர்கள் களமிறங்குவதற்கு காரணம் இருந்தது. கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் சிதறிக் கிடந்த யூதர்கள் தமக்கொரு தேசத்தை இஸ்லாமிய உம்மத்தின் இதயமான பலஸ்தீனில் நிறுவுவதற்குத் துடித்துக் கொண்டிருந்தனர். அப்போது பலஸ்தீன் உஸ்மானியரின் ஆட்சியின் கீழ் சுல்தான் 2ஆம் அப்துல் ஹமீதின் மேற்பார்வையில் இருந்தது. யூதர்கள் சுல்தானை அணுகினர். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஹம்மத் பகீஹுத்தீன்



# ஷரீஆவின் யதார்த்ததை மறைக்கும் முகத்திரை

ஷரீஆ சட்டத்தின் பார தூரத்தை புரிந்துகொள்ள முடியாத அளவிற்கு உள்ளங்களுக்கு திரையாக முகத்திரை உருவெடுத்துள்ளது.

அல்லாஹுத்தஆலா சட்ட வசனங்கள் மூலம் ஆகுமாக்கிய ஒன்றை மனித மூளையின் கருத்துக்களால் அல்லது அனாவசியமான அச்சங்களால் நாம் தடைசெய்ய முடியாது. அல்லாஹ் அனுமதிக்காத ஒன்றை சட்டமாக இயற்றவும் முடியாது.

மார்க்கத்தை பிழையாகவும் தீவிரமாகவும் ஆதாரமில்லாமலும் பின்பற்ற முனையும் சிலர், பெண்களின் செயல் வட்டத்தை குறுக்கவும் அவர்களை முடக்கவும் இறுதியாகக் கையிலெடுக்கும் ஆயுதமே காலத்தின் தீமை என்பதாகும்.

நிகாப் என்று இன்று ஆரம்பிக்கும். நாளை பாடசாலை போகக் கூடாது என்று தொடரும். மறுநாள் வீட்டில் அடைக்கப்படுவர். பின்னர் அடக்கத்துக்காக கபுரடிக்கு வெளியே வர வேண்டும் என்று தீர்ப்பு வரும். போகிற போக்கை பார்த்தால் வீட்டிலேயே அடக்குமாறு தீர்ப்பு வந்தாலும் வரலாம். இதற்கெல்லாம் ஆதாரம் என்ன? காலத்தின் தீமை. ஹராம்! ஹராம்!! ஹராம்!!! பத்வா பறக்கும்.

காலம் பொல்லாதது. எங்கு பார்த்தாலும் பித்னா! உங்கட புள்ளைய மூடினாத்தான் பாதுகாப்பு. இப்படி படைத்தவனுக்கே சவாலாகப் பாடம் சொல்லும் காலமிது. எல்லாக் காலத்தையும் அறிந்த அல்லாஹ், மனித நலன் நாடியே மனிதனது ஆடைக்கான வரையறைகளைக் கற்றுத் தந்துள்ளான்.

எல்லா இடங்களிலும் பித்னா மலிந்துள்ளது. பசித்த ஓநாய்கள் அவளைக் கீறிக் கிழிக்காமல் இருப்பதற்கு முகத்திரைதான் ஒரே மருந்து. முகத்திரை என் விருப்பம் என முடிவெடுப்பதில் தவறில்லை. ஆனால், அதற்கு ஷரீஆவில் ஆதாரம் காட்ட முடியாது. அது தீன் என தீன்தாரிகள் பரப்ப முடியாது. சட்டம் என் கையில் என்பது ஜாஹிலிய்யா பண்பு. ஷரீஆவிற்கு நான் அடிமை என்பது இஸ்லாமிய மாண்பு.

மனிதப் பலவீனங்கள் எல்லாக் காலங்களிலும் ஒன்றாகவே இருந்து வந்துள்ளன. அன்றும் விபச்சாரம் செய்தவர்கள் இருந்தனர். அவர்கள் மீது கசையடிகள் விதிக்கப்பட்டன. பாவங்கள் செய்தவர்கள் இருந்தனர். பெண்களுக்கு தீங்கு செய்தவர்கள் இருந்தனர். முன்னுதாரணம் மிக்க முதல் பரம்பரையின் காலம் இப்படித்தான் இருந்தது என்பதற்கு வரலாறு சாட்சி. காரணம் அவர்களும் மனிதர்கள்.

ஷரீஆவின் ஆதாரங்கள் அதன் நம்பகத்தன்மையும் தெளிவும் உறுதியாகிவிட்டால் அது பொதுவானதாகவும் நிலையானதாகவும் மாறிவிடும். பிறகு காலத்தின் தீமை என்று புதுச் சட்டம் உருவாக்க முடியாது. காலத்தின் தீமை என்று மனித அறிவால் காரணம் காட்டி ஷரீஆ சட்டத்தில் மாற்றம் கொண்டுவர முடியாது. அவ்வாறு செய்வது இறுதி வேதம் இஸ்லாம் நிலையானதும் முடிவானதும் எனும் கருத்துக்கே மாறுபட்டது.

கடும்போக்குவாதிகள் பேணுதல் என்ற பெயரால் ஷரீஆ அனுமதிக்கின்ற இலகுவான சட்டங்களை மாற்ற முயல்கின்றனர். காலத்தின் சீர்கேடு அதற்கு காரணம் என்று கண்ணீர் விடுகின்றனர். அவர்களின் அறியாமைக்காக நாம் ரத்தக் கண்ணீர் சிந்துகின்றோம்.

ஷரீஆ நிலையானது. அது ஆதிக்கத்துடன் ஆட்சி செலுத்தும் பண்புடையது. பின்பற்ற வேண்டியது ஷரீஆவைத்தான். ஷரீஆவின் சட்டங்களுக்கு நாம் கட்டுப்படுவதே கடமையாகும். இந்த சத்தியத்தை மறைக்கும் முகத்திரைக்கல்ல. பித்னாவிற்கு பயந்து மனித மூளை கண்டெடுத்த சட்டத்திற்கு ஷரீஆவைக் கட்டுப்பட வைக்க முடியாது. அது படைத்த ரப்பின் கோபத்தையும் சாபத்தையும் கொண்டு வரும்.

'சத்தியம் அவர்களின் மனோ இச்சையைப் பின்பற்றுமானால் வானங்களும் பூமியும் அவற்றில் உள்ளவர்களும் சீர்கெட்டு விடுவார்கள்.' (முஃமினூன்: 71)

பெண்கள் முகத்தையும் மணிக்கட்டையும் திறந்திருத்தல் எனும் விவகாரத்தை பொறுத்தவரை அது ஹராமானது என்பதைக் காட்டும் தெளிவான நேரடியான மயக்கமில்லாத அச்சொட்டான எந்தவொரு சட்ட வசனத்தையேனும் அல்குர்ஆனிலிருந்தோ அல்லது ஸுன்னாவிலிருந்தோ காண முடியாது. அல்லாஹ் அதனை தடை செய்ய வேண்டும் என நாடியிருந்தால் தெளிவான சட்ட வசனம் ஒன்றை இறக்கியிருக்கலாம்.

'அவர்கள் முந்தானைகளை தமது மார்பகங்கள் மீது போட்டுக் கொள்ளட்டும்' என்ற வசனத்தில் முகத்தையும் குறிப்பிட்டிருக்கலாம். அல்லாஹ் ஹராத்தை தெளிவுபடுத்திய பகுதியில் முகத்தை மறைக்குமாறு குறிப்பிடவில்லை.

''அல்லாஹ் உங்களுக்கு உங்கள் மீது ஹராமாக்கப்பட்டவற்றை தெளிவாக விளக்கியுள்ளான்.'' (அன்ஆம்: 119)

இஸ்லாமிய சட்டவாக்கத்தில் முறை தவறி யாரும் எதையும் சேர்க்கவோ குறைக்கவோ வேண்டிய எந்தத் தேவையும் கிடையாது. ஷரீஆ பரிபூரணமானது.

முகத்தை மறைக்கின்ற கணவான்களும் மற்றும் சகோதரிகளும் முகம் திறந்த நிலையில் ஹிஜாப் அணிகின்றவர்களை நோக்கி கடுஞ் சொற்பிரயோகங்களை அள்ளி வீசுகின்றனர். சிலபோது எல்லை மீறி குப்ருடைய வார்த்தைகளால் திட்டுகின்றனர்.

இதனை யார்தான் அங்கீகரிக்க முடியும். கருத்து முரண்பாடுடைய விவகாரம் ஒன்றில் தீமை என்று சாடுவதற்கு எதுவுமில்லை என்பது ஷரீஆ சட்டவியல் விதி. பின் ஏன் மாற்றுக் கருத்துடையோரை மறுக்க வேண்டும்.

முகம் திறப்பவர்கள் பெரும்பான்மையான ஸஹாபாக்களையும் அவர்கள் அடியொட்டி வாழ்ந்த பெரும்பான்மை இஸ்லாமிய அறிஞர்களின் கருத்தையும் ஆதாரமாக கொண்டிருக்கின்றனர். குர்ஆனுக்கும் ஹதீஸுக்கும் அக்கருத்தே ஆதாரமாக உள்ளது.

பித்னாவிற்காக முகத்தை மூட வேண்டும் என்று கூறும் எந்த ஷரீஆ ஆதாரமும் கிடையாது. ஷரீஆ அங்கீகரிக்கும் ஒழுங்குகள், சட்டங்கள் மாத்திரமே இந்த விடயத்தில் எமக்குப் போதுமானது. பித்னாக்களை தடுப்பதற்கு இஸ்லாம் சில வழிமுறைகளைக் கற்றுத் தருகின்றது.

ஷரீஆ வலியுறுத்தும் ஹிஜாபை (முகத்திரையல்ல) கட்டாயம் அணிவது, அலங்காரங்களைத் தவிர்ப்பது, ஆண்களோடு தனித்திருப்பதை தவிர்ப்பது, பேசுவதில், நடப்பதில், அசைவதில் கண்ணியத்தையும் கௌரவத்தையும் பேணுதல், கொடுக்கல் வாங்களின் போது நளினமாக நடப்பதை தவிர்ப்பது, பார்வையைத் தாழ்த்துதல் என்பன ஷரீஆவின் போதனைகள். ஆணையும் பெண்ணையும் படைத்த ரஹ்மான் பித்னாவில் இருந்து காத்துக் கொள்வதற்காக கூறிய பாதுகாப்பு வேலி.

இவற்றை நாம் கடைப்பிடிக்காமல் ஆகுமான வழிகளை அடைக்க வேண்டிய எந்தத் தேவையும் இல்லை. வாழ்க்கை ஒரு சோதனை. சோதனை சோதனையாகத்தான் இருக்கும். இல்லாவிட்டால் பெண்ணையே படைக்காமல் விட்டிருக்கலாமே.

நிகாப் என்பது விருப்பத் தேர்வுக்குரியது. அதை அணியலாம். அணியாமல் விடலாம். இந்நிலையில் 'நீங்கள் நிகாப் அணியாமல் இருப்பது பாவம்' எனக் கூறுவது எந்த வகையிலும் நியாயம் ஆகாது. அதை ஷரீஆவின் கடமையாக முன்னிறுத்தி போராடுவது, அதற்குத் தடை வந்தால் முஸ்லிம் அரசியல்வாதிகளையும் சந்திக்கு இழுத்து போராட வைப்பதுதான் உலமா சபையின் நிலைப்பாடு என்றால் யார்தான் சகித்துக் கொள்வார்கள்.

கருத்துத் திணிப்பின் வாடையைக் கூட இஸ்லாம் விரும்புவதில்லை. இப்படி இருக்க, ஒரு சாராரின் கருத்துக்காக போராடுமாறு அழைப்பு விடுப்பது உண்மையில் தாலிபான் பாணியில் அமைந்த பரப்புரையாகும். இது மடமை மட்டுமல்ல, சமூக அழிவின் அறிகுறியுமாகும்.

இன்னொரு அழுத்கமை வந்து மண்டையில் குட்டி முட்டுக்காலில் பணிய வைத்துத்தானா பாடம் சொல்லித்தர வேண்டும். இப்படிக் கேவலமான முறையில் தானா படிப்பினை பெற வேண்டும்.!? ஒரு சூடு போதுவே போதாதா?

உணர்ச்சிபூர்வமான விவகாரங்களில் இவ்வாறு ஒன்றுக்கொன்று முரண்பட்ட நிலையே சமூகத்தில் உள்ளது. இவ்வாறான கட்டங்களில் நாம் யார்பக்கமும் சாயக் கூடாது. சத்தியத்தின் பக்கமே சாய வேண்டும். குர்ஆனின் திட்டவட்டமான வசனங்களும் ஸஹீஹான வசனங்களுமே எங்களின் மூலாதாரம்.

முழுமையான தெளிவான அர்த்தங்களைக் கொடுக்காத சட்ட வசனங்களுக்கும் ஒட்டுமொத்த ஷரீஆவின் இலக்குகளுக்கும் இடையில் முறையான ஒப்பீட்டாய்வு மூலம் சமநிலையைப் பேண வேண்டும் என்ற அறிவை பத்வா கொடுப்பவர்கள் புரிந்திருக்க வேண்டும். ஷரீஆவின் மாறாத அடிப்படைகளுக்கும் காலத்தின் மாற்றங்களுக்கும் இடையில் மிகச் சரியான புரிதல் உருவாக வேண்டும். தீவிரமோ அசட்டுத் தனமோ இல்லாமல் மார்க்கத்தை மார்க்கமாகப் பார்க்க வேண்டும்.

பிடிவாதத்தையும் கருத்து வெறியையும் தூக்கி வீசி விட்டு சத்தியத்தை தேட வேண்டும். அப்போதுதான் உண்மை கண்களுக்கு தென்படும். இறையருள் கிட்டும். இல்லாவிட்டால் முகத்திரை ஷரீஆவை வாசிக்க முடியாத அகத்திரையாக மாறிவிடும்.


முஸ்லிம் அல்லாதோரால் தவறாகப் புரியப்பட்ட மார்க்கம் இஸ்லாம் என்பது வேதனைக்குரியதே. அதைவிடக் கவலைக்குரியது என்னவென்றால், அறபுலக முஸ்லிம்களே இஸ்லாத்தை சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்பதாகும். நிலைமை இப்படி இருக்கும்போது அஜமிகளின் பாடு கேட்கவே தேவையில்லை. அந்த வேதனைக்குள் சிக்குண்டு தவிக்கும் ஒரு விவகாரம் தான் அரைகுறையாகப் புரியப்பட்ட நிகாப் விவகாரம்.

எனவே இங்கு தேவைப்படுவது தெளிவான ஆதாரம் என்பதற்கு அப்பால் திரை நீக்கப்பட்ட தூய உள்ளம் ஒன்று மாத்திரமே. தூய உள்ளங்கள் தான் சத்தியத்தை கண்டு கொள்ளும்.

யாஅல்லாஹ் உனது அருளைக் கொண்டு கருத்து முரண்பட்ட இவ் விடயத்தில் தெளிவை எங்களுக்கு காண்பிப்பாயாக!

(சர்வதேச உலமா சபையின் தலைவர் அல்லாமா யூஸுப் அல் கர்ளாவியின் நூலைத் தழுவி எழுதப்பட்டவை.)

# அருமையான ஒரு சுய விமர்சனம்



ஊடகங்களில் சுய விமர்சனம் என்பதை காண்பதே அரிது. அதுவும் அறபுலக பொறுப்பு வாய்ந்த ஒரு தலைவர் மக்கள் மத்தியில் பகிரங்கமாக குறைநிறைகளை வெளிப்படையாகப் பேசியிருப்பது அபூர்வமான ஒரு வரலாற்று நிகழ்வு.

அது வேறு யாருமல்ல, ஹமாஸ் அரசியல் பிரிவின் தலைவர் காலித் மிஷ்அல் அவர்கள் தான். அவர் துணிச்சலுடன் சில கருத்துக்களை சுய விமர்சனமாக முன்வைத்துள்ளார்.

அல் ஜஸீராவின் ஆராய்ச்சி மற்றும் கற்கைகளுக்குமான மையம் ஏற்பாடு செய்த உரையாடல் அமர்வில் பல அறபுலக புத்திஜீவிகள் பங்கேற்றனர். அதில் காலித் மிஷ்அல், காஸாவில் இடம்பெறும் ஹமாஸின் போராட்ட அனுபவத்தை மாத்திரம் சுய விசாரணைக்கு எடுத்துக் கொள்ளவில்லை. மாறாக, அரபு வசந்தத்தின்போது இஸ்லாமிய அமைப்புக்களின் நிலைப்பாடுகள் குறித்தும் பகிரங்கமாக பல கருத்துக்களை வெளிப்படுத்தினார்.

உண்மையில் இது மிகுந்த பயனுள்ள ஒரு கருத்தாடல். காலத்திற்கு தேவையான ஒரு விமர்சனம். இஸ்லாமிய நிறுவனங்கள், அமைப்புக்கள், அரசியல் பிரிவுகள் மற்றும் முன்னேற்றம் நோக்கி பயணிக்கும் சகலரும் முன்னுதாரணமாக எடுக்க வேண்டிய நிகழ்வாக இதனைப் பார்க்கவேண்டும்.

காலித் மிஷ்அல் பலஸ்தீன் குறித்தும், ஹமாஸ் மற்றும் பத்தாஹ் ஆகிய இரு குழுக்களுக்கிடையிலான உறவுகள் பற்றியும் இஸ்லாமிய இயக்கங்கள் தொடர்பான மாற்றங்கள் பற்றியும் கூறிய கருத்துக்களின் சுருக்கத்தை இங்கு தருகின்றோம்.

அரபு வசந்தத்தின்போது இஸ்லாமிய இயக்கங்களைச் சார்ந்தவர்கள் இரண்டு தவறுக்கு உட்பட்டுவிட்டார்கள்.

ஒன்று: தங்களின் இயல்திறன்கள் பற்றிய மிகையான மதிப்பீடு. பாதிக்கப்பட்ட சக்திகளின் எதிர்வினைகள் உள்ளூரிலும் பிராந்தியத்திலும் எப்படி இருக்கும் என்பதில் தப்பு கணக்கு போட்டதாகவே அதன் பொருள்.

இஸ்லாமிய அமைப்புக்கள் நம்மால் முடியும் என்ற அதீத நம்பிக்கையில் இறங்கியதால் எதிரிகள் எப்படி எப்படியெல்லாம் தாக்குப் பிடிப்பார்கள் என்பதை மதிப்பிடத் தவறி விட்டார்கள்.

களத்தின் துல்லியமான புள்ளிவிபரம் அறியாததாலும் [illegible] தம் பலத்தில் மாத்திரம் நம்பிக்கை கொண்டதாலும் இஸ்லாமியவாதிகள் எதிரிகளிடத்தில் ஏமாற்றம் கண்டார்கள்.

இரண்டாவது தவறு: தேசத்தை கட்டியெழுப்பும் பணியில் ஈடுபாடுள்ள ஏனையவர்களுடனான உறவை கையாளும் முறையில் காணப்பட்ட பலவீனமாகும்.

இதனைப் புரிந்து கொள்ளும் விதத்தில் சொல்வதாயின் தேர்தலின்போது பெரும்பான்மை வாக்குகளை மட்டும் பெற்றால் போதாது. அதிகப்படியான வாக்குகள் உண்டுதானே என நினைத்துக் கொண்டு தேசத்தை கட்டியெழுப்பும் போது தனித்து நின்று தீர்மானம் எடுத்தது பிழையான அணுகுமுறையாகும். ஏனைய சிவில் நிறுவனங்கள், அமைப்புக்களையும் கூட்டிணைத்துக் கொண்டுதான் பயணத்தை ஆரம்பிக்க வேண்டும் என்பது இஸ்லாமிய வாதிகள் மனங்கொள்ள வேண்டிய முக்கிய புள்ளியாகும்.

ஹமாஸின் தலைமையகம் டமஸ்கஸில் இருந்த காலத்தில் முக்கியமான பதாஹ் உறுப்பினர் ஒருவர் ஹமாஸின் பணிமனைக்கு சந்திப்புக்காக வந்தார். அவரிடம் இனி எமது போராட்டத்தை தொடர பதாஹ் அமைப்பு தேவையில்லை, ஹமாஸ் மாற்றீடாக வந்துள்ளது. [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜம்மியதுல் உலமா அனைவருக்குமான தலைமையாக வருவதென்றால்...

• ஸலாஹுத்தீன்

இலங்கை முஸ்லிம் சமூகம் இப்பொழுது தனக்கான தலைமைத்துவம் பற்றி சிந்திக்கத் தொடங்கியிருக்கிறது. தான் நம்பி இறங்கக் கூடிய தலைமைத்துவம் ஒன்றைத் தேடி அது தனது பயணத்தை துவங்கியிருக்கிறது. தன்னை சிறந்த முறையில் இலக்கு நோக்கி வழி நடத்திச் செல்லும் தலைமைத்துவம் ஒன்றை நாடி அது தனது தேடலை ஆரம்பித்திருக்கிறது.

அரசியல் பயணத்தில் முஸ்லிம் அரசியல் தலைமைகள் தன்னை ஏமாற்றி விட்டதை சமூகம் தற்போது உணரத் தலைப்பட்டுள்ளது. நீண்ட நெடுங்காலமாக கட்சிகளுக்குப் பின்னால் நாரே தக்பீர் சொன்னவர்கள் எல்லாம், முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கிய கடுமையான முஸ்லிம் விரோதச் செயற்பாடுகளின் போது தம்மைக் கைவிட்டுச் சென்ற முஸ்லிம் அரசியல் கட்சிகளின் தலைமைகளை தமது தலைமைகளாக கருதுவதற்கு இனி எந்த வாய்ப்புமில்லை. சில அரசியல் அடைவுகளை அடைந்து கொள்ளத்தான் இவை போதுமானவை. அதற்கு மேல் இவற்றிடம் சமூகத்துக்கான தலைமையையோ வழிகாட்டலையோ எதிர்பார்ப்பது பொருத்தமானதல்ல.

இந்த இடத்தை உலமாக்களால் தான் நிரப்ப முடியும் என்ற கருத்திலும் இலங்கை முஸ்லிம் சமூகம் இருப்பதாகத் தெரியவில்லை. கண்ணியத்துக்குரிய உலமாக்கள் முதன்மை ஸ்தானத்தில் வைத்து நோக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால் உலமாக்கள் என்பதற்கு நாங்கள் கொடுக்கும் வியாக்கியானத்துக்கு உட்பட்டவர்கள் மட்டும்தான் தலைவர்களாக வருவதாக இருந்தால் அது சகல விவகாரங்களிலும் சமூகத்தை வழிநடத்திச் செல்வதற்குப் போதுமான தகுதியாக இருக்க முடியாது.

உலமாக்கள் என்ற வரையறைக்கு உட்பட்டோர் யார்? பாரம்பரிய மத்ரஸாக் கல்வியை முடித்தவர்கள்தான் உலமாக்களா அல்லது மத்ரஸாக் கல்வியை முடித்தவர்கள் எல்லோரும் உலமாக்கள் என்ற வட்டத்துக்குள் இயல்பாகவே வந்துவிடுகிறார்களா? உலமா என்றால் மௌலவி அல்லது அஷ்ஷெய்க் என்பது தான் பொருளா? உலமா என்பதனை இஸ்லாம் சொல்லுகின்ற அறிஞர் என்ற கருத்தில் நாங்கள் ஏன் மொழி பெயர்க்காமல் விட்டு விடுகிறோம்?



இப்படிப் பல கேள்விகள் எழுவதில் பல நியாயங்கள் இருக்கின்றன. இலங்கைப் பல்கலைக்கழகங்களிலே அறபு இஸ்லாமிய பீடமே தனியாக இருக்கிறது. இங்கு கல்வி கற்று வெளியேறுகின்ற பட்டதாரிகள், பேராசிரியர்கள் ஏன் உலமாவாக இருக்க முடியாது? இலங்கையிலே இஸ்லாமிய நிதித் துறையில் கற்கைநெறிகள் உள்ளன. இந்தத் துறையிலே பட்டம் பெற்ற ஒருவர் ஏன் இஸ்லாமிய நிதியியல் உலமாவாக முடியாது?

மலேசியா போன்ற நாடுகளில் உள்ள இஸ்லாமிய பல்கலைக்கழகங்களில் விஞ்ஞானம், பொறியியல், வணிகத் துறைகளில் பட்டம் பெற்று வெளியேறி வருகின்ற துறைசார் நிபுணர்கள் ஏன் அவ்வத் துறையிலான உலமாக்களாகக் கருதப்பட முடியாது? இது போன்று நாட்டிலே பல்வேறு துறைகளிலும் கற்றுத் தேறி வருகின்ற அறிஞர்கள், புத்திஜீவிகளையும் இந்த வட்டத்துக்குள்ளால் உள்ளடக்குவது பற்றி உலமா சபை யோசித்தால்தான் உலமாக்களுக்கான சபையாக ஜம்மியதுல் உலமா வர முடியும்.

எல்லாத் துறைகளிலும் துறைபோகக் கற்றவர்கள் எவருமில்லை. மத்ரஸாக்களுடைய பாடத்திட்டங்களில் கற்ற உலமாக்கள் எல்லோரும் ஒரே துறையைத் தான் பெரும்பாலும் படிக்கிறார்கள். இதனால் ஏனைய துறைகளிலும் கல்வி கற்றுத் தேர்ந்தவர்களையும் அகில இலங்கை ஜம்மியதுல் உலமா தம்முடன் இணைத்து தமது தலைமையைப் பலப்படுத்த வேண்டும். உலமா என்ற பதத்தினை விரிந்த வடிவில் ஜம்மிய்யா நோக்க வேண்டும்.

இலங்கையில் பல்வேறு வகையான மத்ரஸாக்களிலும் கல்வி பயின்று வெளியேறிய உலமாக்கள் இருக்கின்றார்கள். இவர்களில் தமது மத்ரஸாக் கல்விக்கு மேலதிகமாக தமது அறிவை வளர்த்துக் கொண்டவர்கள் ஒரு சிலர் தான் இருக்கின்றார்கள். ஆனால் தொழுகையின் ஸுன்னத்தான விடயம் ஒன்றில் கூட (உதாரணமாக குனூத் ஓதுதல்) சரியான வழிகாட்டலை சமூகத்துக்கு வழங்க முடியாமல், தான் படித்ததை விடாப்பிடியாக மக்களிடம் திணிக்கின்ற உலமாக்களே நம்மிடம் பெருவாரியாக இருக்கின்றார்கள். இவர்களிடம் சமூக மாற்றத்துக்கான வழிகாட்டலை சமூகம் எதிர்பார்க்க முடியாது.

சமூகத்தின் தலைமைத்துவத்தைக் கையிலெடுக்கின்ற உலமாக்கள், நவீன அறிவியல் யுகத்தில் எதிர்நோக்கப்படுகின்ற, சவால்களை எதிர்கொள்வதற்கு மக்களை வழிப்படுத்துபவர்களாக இருக்க வேண்டும். இந்தத் துறைகளில் கற்றுத் தேர்ந்த உலமாக்களை ஜம்மியத்துல் உலமா தம்முடன் இணைத்துக் கொள்வதோடு, மத்ரஸாக்களின் பாடத்திட்டங்களையும் சமூகத்தை எதிர்கொள்ளும் விதமாக மாற்றியமைத்து, உலமாக்களின் தரத்தை மேம்படுத்த வேண்டும்.

உலமாக்களை உருவாக்குகின்ற மத்ரஸாக்கள் அனைத்தும் ஒரே பாடத் திட்டத்தில் இயங்குவதில்லை. வெவ்வேறு வகையான பாடத்திட்டங்களில் பயின்றுவிட்டு வருகின்றவர்களில் எந்தப் பாடத்திட்டத்தை எவ்வளவு காலத்தில் கற்றுத் தேர்ந்தவர் உலமாவாக முடியும் என்ற தராதரம் ஒன்றை உலமா சபை தான் பேண வேண்டும்.

ஏனெனில் இங்கிருந்துதான் உலமா சபைக்கான அங்கத்தவர்கள் வந்து சேர்கிறார்கள். இவர்களில் சமூகத்தை வழி நடத்தும் சிந்தனையுடைவர்களை ஜம்மிய்யா அடையாளம் காண வேண்டும். இலங்கையில் இப்போது வழிகெட்ட கொள்கைகளையுடைய மத்ரஸாக்களும் இயங்கி வருகின்றன.

2000 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க அகில இலங்கை ஜம்மியதுல் உலமா (கூட்டிணைத்தல்) சட்டத்தில் 3 (ஆ) பிரிவில் உள்ளதன்படி, "பொதுவில் முஸ்லிம் சமூகத்திடையேயும் விஷேடமாக உலமாக்களிடையேயும் ஒற்றுமையை நிலைநாட்டி மேம்படுத்தலை" தனது குறிக்கோள்களில் ஒன்றாக ஜம்மிய்யா வரைந்திருக்கிறது. ஆனால் நாளுக்கு நாள் உலமாக்கள் வெவ்வேறு குழுக்களாக பிரிந்து செல்லும் நிலைதான் சமூகத்தில் காணப்படுகிறது.

உலமாக்களிடையே இருக்கும் பிரிவுகள்தான் சமூகத்தின் பிளவுகளாக விரிந்திருக்கின்றன. தரீக்காக்களுடைய உலமாக்கள் தமக்கென வேறாக ஷரீஆ கவுன்ஸிலை உருவாக்கிச் செயற்படுகின்றனர். ஸலப் உலமாக்கள் ராபிதது அஹ்லிஸ் ஸுன்னா என்ற பெயரில் தமது சிந்தனை சார்ந்த உலமாக்களை ஒன்றிணைத்து வருகின்றனர். இந்த நிலையில் அகில இலங்கை ஜம்மியதுல் உலமா குறித்த ஒரு சாராருக்கான உலமா சபையாக ஓரங்கட்டப்படும் நிலைமை உருவாகி வருகிறது.

தனது குறிக்கோளாக ஜம்மிய்யா வரைந்துள்ளதன்படி, உலமாக்களிடையேயான இந்த விரிசல்களை வளர விடாது பாதுகாப்பதுதான் அகில இலங்கை ஜம்மியதுல் உலமாவை இலங்கை முஸ்லிம் சமூகத்தின் தலைமையாக தக்க வைக்க முடியும். உலமாக்களிடையே ஒற்றுமையைப் பேணும் விடயத்தில் எதேச்சாதிகாரப் போக்குகளின்றி விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடன் ஜம்மிய்யா நடந்து கொள்ள வேண்டும்.

இலங்கை முஸ்லிம்களை ஷாபி மத்ஹபின்படி வழிநடத்திச் செல்லும் தலைமையாக அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா திகழ்கிறது. அப்படியானால் அல்குர்ஆன் ஸுன்னா வழியில் செயற்படுகின்ற ஏனைய மத்ஹபினருக்கு அல்லது மத்ஹபுகள் சாராதவர்களுக்கு தனியான தலைமையொன்றுக்கான தேவை உருவாகுகிறது.

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா, இலங்கை முஸ்லிம்களின் தலைமையாக இருக்க வேண்டும் என்றால் அஹ்லுஸ் ஸுன்னாக்கள் அனைவருக்குமான பொதுக் கொள்கையுடன் ஜம்இய்யா செயற்பட வேண்டி வருகிறது.

# ஜம்இய்யதுல் உலமாவுக்கு ஒரு மடல்!

• எம்.ஏ. இனாயத்துல்லாஹ்

இஸ்லாத்தின் அடிப்படையான எல்லாம் வல்ல அல்லாஹ் ஒருவனை மட்டுமே வணங்குவதையும் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் இறுதித்தூதர் மற்றும் அல்லாஹ்வின் உண்மை அடியான் என முழுமனதுடன் ஏற்றுக் கொண்டு. நபி(ஸல்) அவர்களைப் பின்பற்றுவதே இஸ்லாம் ஆகும். இவ்விடயத்தில் ஒவ்வொரு முஸ்லிமும் மிகவும் தெளிவாக இருக்க வேண்டும். இதனையே எம் பெருமானார் (ஸல்) அவர்கள் தமது இறுதிப் பேருரையிலும் குறிப்பிட்டார்கள்.

"மக்களே! உங்களிடையே அல்லாஹ்வின் வேதத்தையும் அவனது தூதரின் வழிமுறையையும் விட்டுச் செல்கிறேன். நீங்கள் அவற்றைப் பின்பற்றினால் ஒருபோதும் வழி கெட மாட்டீர்கள்! (முஸ்லிம் 2334, இப்னு மாஜா 3074)

முஹம்மது நபி (ஸல்) அவர்கள் மார்க்கம் என்ற அடிப்படையில் சொன்னவை, செய்தவை அனைத்தும் அல்லாஹ்வால் அறிவிக்கப்பட்டவைதான். அல்லாஹ் அறிவித்துக் கொடுக்காத எந்த ஒன்றையும் மார்க்கத்தின் பெயரால் அவர்கள் வழிகாட்ட மாட்டார்கள். நபி (ஸல்) அவர்கள் தன் மனோஇச்சைப்படி பேசமாட்டார். அவர் பேசுபவை அல்லாஹ்வால் அறிவிக்கப் பட்டவைதான் என்று திருக்குர்ஆனின் 53: 2,3,4 ஆகிய வசனங்கள் கூறுகின்றன.

நபி(ஸல்) அவர்கள் மார்க்கம் என்ற பெயரில் சுயமாக எதையாவது சொல்லி இருந்தால் அவரை வலக்கரத்தால் பிடித்து, அவரது நாடி நரம்பைத் துண்டித்து விடுவேன் என 69:44,45,47 வசனங்களில் அல்லாஹ் எச்சரிக்கிறான். நபி (ஸல்) அவர்களின் பணி அல்லாஹ் சொல்வதை எடுத்துச் சொல்வதே தவிர சொந்தக் கருத்தைச் சொல்வதல்ல என்று 5:92, 13:40, 64:12, 24:54 முதலிய வசனங்கள் கூறுகின்றன.

எனவே, நபியின் சொல்லைவிட மேலான சொல் எதுவும் இருக்க முடியாது.

முஹம்மது நபி (ஸல்) அல்லாஹ்வின் தூதர் என்பதால் அல்லாஹ்வுக்குக் கட்டுப்படுவது போல் அவர்களுக்கும் (தூதருக்கும்) கட்டுப்பட வேண்டும் என்றே அல்குர்ஆன் கூறுகின்றது. (3:32) நபிக்குக் கட்டுப் படாதவர்கள் முஸ்லிம்கள் அல்லர் என்ற அளவுக்கு கடுமையாக மேற்படி குர்ஆன் வசனங்கள் மூலம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

அல்லாஹ்வின் வார்த்தையான குர்ஆனும் நபிகளாரின் சொல், செயல், அங்கீகாரமான ஆதார பூர்வமான ஹதீஸ்களும் எதனைக் கூறுகின்றனவோ அதற்கே இஸ்லாமிய சமுதாயம் கட்டுப்பட வேண்டும். யாருக்கும் வக்காலத்து வாங்கக்கூடாது. திருமறை குர்ஆனின் பல இடங்களிலும் அல்லாஹ் தனக்கும் தன் தூதரான முஹம்மத் (ஸல்) அவர்களுக்கும் கட்டுப்பட வேண்டும் என்றும் நபி(ஸல்) அவர்களை பின்பற்றுமாறும் சிறப்பித்துக் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

"நீங்கள் அல்லாஹ்வை விரும்பினால் என்னைப் பின்பற்றுங்கள் 'அல்லாஹ்' உங்களை விரும்புவான். உங்கள் பாவங்களை மன்னிப்பான். அல்லாஹ் மன்னிப்பவன். நிகரற்ற அன்புடையோன்" என்று கூறுவீராக!. அல்லாஹ்வுக்கும் இத்தூதருக்கும் கட்டுப்படுங்கள். நீங்கள் புறக்கணித்தால் (தன்னை) மறுப்போரை அல்லாஹ் விரும்பமாட்டான்" எனக் கூறுவீராக! "அல் குர்ஆன் 3:31:32.

அப்தல்லா பின் மஸ்ஊத் (ரழி) அவர்கள் கூறினார்கள், "உரைகளில் சிறந்தது அல்லாஹ்வின் வேதம் (குர்ஆன்) ஆகும். நடத்தைகளில் சிறந்தது முஹம்மது (ஸல்) அவர்களின் நடத்தையாகும். செயல்களில் தீயவை (மார்க்கத்தின் பெயரால்) புதிதாக உண்டாக்கப்படுபவை ஆகும். உங்களுக்கு வாக்களிக்கப்பட்டுள்ள (மறுமை நாளானது) வந்தே தீரும். உங்களால் (இறைவனைத்) தோற்கடிக்க முடியாது." (புகாரி : 7277)

எவரைப் பார்த்து நாம் படிப்பினை பெற வேண்டும், நம்மைச் சீர்படுத்திக் கொள்ள வேண்டும் என்று இறைவன் குறிப்பிட்டானோ அப்படிப்பட்ட அல்லாஹ்வின் தூதரும் நமக்கு இது குறித்து உபதேசிக்காமல் இல்லை.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் "என் சமுதாயத்தார் அனைவரும் சுவர்க்கம் செல்வார்கள், ஏற்க மறுத்தவரைத் தவிர" என்று கூறினார்கள். மக்கள் அல்லாஹ்வின் தூதரே! ஏற்க மறுத்தவர் யார்?" என்று கேட்டார்கள். நபி (ஸல்) அவர்கள் எனக்குக் கீழ்படிந்தவர் சொர்க்கம் புகுவார். எனக்கு மாறு செய்தவர் (சத்தியத்தை) ஏற்க மறுத்தவர் ஆவார்" என்று பதிலளித்தார்கள். அறிவிப்பவர் அபூ ஹுரைரா (ரழி) அவர்கள், நூல் : புகாரி 7280

எனவே, அல்லாஹ்வும் அவனது தூதரும் ஒரு காரியத்தை முடிவு செய்யும்போது நம்பிக்கை கொண்ட ஆணுக்கும் பெண்ணுக்கும் தமது அக்காரியத்தில் சுயவிருப்பம் கொள்ளுதல் இல்லை. அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் மாறு செய்பவர் தெளிவாக வழிகெட்டுவிட்டார். (அல்குர்ஆன் 33:36) என்ற குர்ஆனின் கட்டளைப் பிரகாரம் நாம் செயற்பட்டால் இரண்டாம் கருத்திற்கு இடமே இருக்காது. பிரச்சினைகளும் தோன்றாது.

தவறு என்று தெரிந்த பின்னும் என் கொள்கையை விட்டுக் கொடுக்க மாட்டேன் என்று கூறினால் நமக்கும் யூதர்களுக்கும் வித்தியாசம் இல்லாமல் போய்விடும். தெளிவான நயவஞ்சகத்தனமாகி விடும். ஒரு கருத்தை மக்கள் முன் வைக்கும்போது அது அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் கருத்தைப் பிரதிபலிக்கிறதா? குர்ஆன் ஹதீஸுக்கு உட்பட்டுள்ளதா? அல்லது மாறுபட்டுள்ளதா என்பதை சிந்தித்துப் பார்ப்பதே இஸ்லாமிய பண்பாகும்.

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் சில நடவடிக்கைகள் தீர்மானங்கள் கருத்து வேறுபாடுகளையும் சர்ச்சைகளையும் உருவாக்கி உள்ளன என்பதை ஊடகங்கள் வாயிலாக அறிய முடிகின்றது. இந்நிலை நீடிப்பது சௌகரியமானதல்ல. எதிர்காலத்தில் பல தீய விளைவுகளை எங்கள் நாட்டில் முஸ்லிம்கள் மத்தியில் தோற்றுவிக்க லாம். குறிப்பாக ஒற்றுமையையும் ஐக்கியத்தை யும் குலைத்து பிரிவினைகளைத் தோற்றுவிக்க லாம். வேற்றுமையில் ஒற்றுமை காண வேண்டும். கொள்கைள் வேறுபடலாம் உள்ளங்கள் வேறுபடக்கூடாது என்பதெல்லாம் பயான்களுக்கு மாத்திரமா என மக்கள் கேட்கின்றனர். இவை செயலில் காட்டப்பட வேண்டும் என்பதையே மக்கள் விரும்புகின்றனர்.

தீன் என்பது அல்லாஹ்வின் கட்டளை நபிகளாரின் வாழ்க்கை முறை என்கிறோம். அப்படியாயின் தீர்மானங்களின்போது குர்ஆன் சுன்னாவுக்கல்லவா முன்னுரிமை கொடுக்க வேண்டும் எனக் கூறுபவர்கள் எங்கள் மத்தியில் உள்ளனர். ஜம்இய்யதுல் உலமா வழிதவறிச் செல்கின்றதா என இவர்கள் கேட்கின்றனர். இது சமூகம் தழுவிய அமைப்பாக இருக்க வேண்டும் என்பதையே அதிகம் பேர் விரும்புகின்றனர். அண்மையில் உருவாக்கப்பட்ட இத்திஹாதுல் உலமா உஸ்ஸலபிய்யீன் தனது கருத்துக்களுடன் முரண்படாத உலமாக்களை மாத்திரம் இணைத்துக் கொண்டு தனியாகப் பயணிக்கின்றது என மக்கள் சுட்டிக் காட்டுகின்றமை குறிப்பிடத்தக்கது.

மார்க்கம் சொல்வது ஒன்று மௌலவிகள் சொல்வதும் செய்வதும் வேறொன்று; அவர்கள் முன்வைப்பது உலமாக்களின் மனோ இச்சை தான். மௌலவிகளின் முழு நேரத் தொழில் மார்க்கத்தை மறைப்பதுதான் போன்ற குற்றச் சாட்டுகள் இன்று உலமாக்கள் மத்தியிலேயே முன்வைக்கப்படுகின்றன. இவ்வாறான உலமாக்களை நோக்கி அல்குர்ஆன் இவ்வாறு கேட்கின்றது.

"அல்லாஹ்விடமிருந்து தனக்குக் கிடைத்த சான்றை மறைப்பவனை விட அநீதி இழைத்தவன் யார்? நீங்கள் செய்வதை அல்லாஹ் கவனிக்காதவனாக இல்லை" (அல்குர்ஆன் 2:140)

நம்மிடம் பல்லாண்டுகளாக ஊறிப்போன கொள்கைகளும் சடங்குகளும் முஹம்மது நபி(ஸல்) அவர்களால் தடை செய்யப்பட்டவை என்று தெரிய வந்தால் அடுத்த வினாடியே அவற்றை விட்டு விலகி நபி(ஸல்) அவர்களை அல்லாஹ்வின் தூதராக மதித்து வாழ நாம் திட சங்கம் பூண்டு வாழ முயற்சிப்போமாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அஷ்ரபும்... (06ம் பக்கத் தொடர்)

அஷ்ரபின் நிலைப்பாட்டைப் பற்றிய ஆவண ரீதியான ஆதாரங்கள் இருப்பதாக, சுமந்திரன் முன்னர் கூறியதையும் அஷ்ரப், வடக்கு-கிழக்கு இணைப்புக்கு நிபந்தனையுடனான ஆதரவையே வழங்கினார் என்று பின்னர் அவர் கூறியதையும், நோக்கும் போது, அக்கருத்துக்கள் சற்று மயக்கத்தைத் தருகின்றன.

ஏனெனில், இணைப்புக்கான அஷ்ரபின் நிபந்தனையுடனான அதரவு என்பது, இரகசியமான விடயமல்ல. அதற்கு ஆவண ரீதியிலான ஆதாரங்கள் தேவையில்லை. முஸ்லிம் காங்கிரஸை ஆரம்பித்ததன் பின்னர், நிபந்தனை யற்ற வகையில், அவர் இணைப்புக்கு ஆதரவு அளித்தார் என்பதற்கு ஆவண ரீதியிலான ஆதரவு இருந்தால், நிச்சமாக அது அரசியலை கற்போருக்கு நல்ல செய்தியாகவே இருக்கும்.

அஷ்ரப், வடக்கு-கிழக்கு மாகாணங்களை இணைப்பதை மட்டுமல்லாது, தமிழீழம் என்ற தனித் தமிழ் நாட்டுக் கொள்கையையே ஒரு காலத்தில் ஏற்றுக் கொண்டு இருந்தார். அவர் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு ஆதரவு வழங்கிய காலத்தில், அதுதான் அவரது நிலைப்பாடாகவும் இருந்தது.

1977ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் போது, தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து களமிறங்கி, தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் கல்முனைத் தொகுதியில் போட்டியிட்ட ஏ.எம். சம்சுதீனுக்கு ஆதரவாக அஷ்ரப், பிரசாரம் செய்தார். அதில் ஒரு கூட்டத்தின்போது, ''அண்ணன் அமிர்தலிங்கத்தினால் தமிழீழத்தை பெற்றுத் தர முடியாது போனால், தம்பி அஷ்ரப் அதனை பெற்றுத் தருவான்'' என சர்ச்சைக்குரிய கருத்தொன்றை அஷ்ரப், வெளியிட்டு இருந்தார்.

முஸ்லிம்கள் மத்தியில், தமிழீழத்தை நியாயப்படுத்துவதற்காக, அஷ்ரபின் இக்கருத்தை இன்று ஆதாரமாகப் பாவிக்கலாமா? முடியாது. ஏனெனில், அவர் சிறிது காலத்துக்குப் பின்னர், தமிழீழக் கொள்கையை கைவிட்டுவிட்டார்.

அதேபோல் அஷ்ரப், தமிழீழத்தை ஆதரித்த காலத்தில் வடக்கு - கிழக்கு மாகாண இணைப்பையும் நிச்சயமாக ஆதரித்து இருப்பார் என்பதில் சந்தேகமே இல்லை. ஏனெனில், தமிழீழம் என்றால், அது வடக்கையும் கிழக்கையும் உள்ளடக்கியதான ஒரு நிலப்பரப்பில் உருவாக்கப்படும் அரசாங்கத்தையே குறிக்கிறது. அந்த அடிப்படையில், அஷ்ரப், வடக்கு-கிழக்கு இணைப்பை ஆதரித்ததினால் அதனை எடுத்துக் கூறி, முஸ்லிம்கள் மத்தியில் மாகாண இணைப்புக்கு ஆதரவு திரட்ட முற்படுவதும் பொருத்தமற்ற செயலாகும்.

ஏனெனில், பிற்காலத்தில் அஷ்ரப், அந்த நிலைப்பாட்டிலிருந்தும் மாறிவிட்டார். அதாவது, தமிழீழத்தை மட்டுமன்றி, வடக்கு-கிழக்கு மாகாணங்களை ஒட்டு மொத்தமாக இணைப்பதையும் அவர் நிராகரித்தார். இனப்பிரச்சினைக்கு தீர்வாக அவர், அதன் பின்னர் ஒன்றுக்கு மேற்பட்ட திட்டங்களை பல்வேறு சந்தர்ப்பங்களில் முன்வைத்த போதிலும், வடக்கு - கிழக்கு மாகாணங்களை ஒட்டு மொத்தமாக இணைப்பதை, அவர் ஒருபோதும் முன்வைக்கவோ ஏற்கவோ இல்லை.

இவ்வாறு, அரசியல் கட்சிகளும் அரசியல்வாதிகளும் தமது நிலைப்பாடுகளை மாற்றிக் கொள்வது ஏதும் புதிய விடயம் அல்ல. சில நபர்களும் கட்சிகளும், சொந்த நலனுக்காகவும் இருப்பைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவும், அரசியல் நிலைப்பாடுகளை மாற்றிக் கொள்கிறார்கள். சொந்த நலனுக்காக அரசியல் நிலைப்பாடுகளை மட்டுமல்லாது, தமது சமயத்தையே இலங்கையில் முதன்மை அரசியல் குடும்பங்கள் மாற்றிக் கொண்டுள்ளன.

வேறு சிலர், அரசியல் நிலைமைகள் மாறுவதன் காரணமாக அதற்கேற்றாற்போல் தமது நிலைப்பாடுகளை மாற்றிக் கொள்கின்றனர். சிலர், நிர்ப்பந்தத்தின் காரணமாகவும் அரசியல் நிலைப்பாடுகளை மாற்றிக் கொள்கின்றனர். வேறு சிலர், அரசியல் மாற்றங்களினால் ஏற்படும் புதிய அனுபவம் மற்றும் அறிவின் காரணமாகவும், தமது நிலைப்பாடுகளை மாற்றிக் கொள்கின்றனர்.

நிபந்தனையுடன் அதாவது முஸ்லிம்களுக்கும் அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் மட்டுமே மு.காவை ஆரம்பித்ததன் பின்னர், அஷ்ரப் வடக்கு - கிழக்கு மாகாண இணைப்பை ஆதரித்துள்ளார்.

நாடாளுமன்றம், அரசியலமைப்புச் சபையாக மாற்றப்பட்டு புதிய அரசியலமைப்பொன்று வர இருக்கும் நிலையில், தமிழ்க் கட்சிகள், மாகாண இணைப்புக்கு முஸ்லிம்களின் ஆதரவை நாடுவது புரிந்துக்கொள்ளக் கூடியதே. ஆனால், அதற்காக வரலாற்றிலிருந்து ஆதாரம் தேடிக் கொள்ள முடியாது.

தனித் தமிழ் நாட்டுக் கோரிக்கையின் அவசியத்தினாலேயே, 1970களில் வடக்கு - கிழக்கு இணைப்பு பற்றிய கோரிக்கை தோற்றம் பெற்றது. இனி, தமிழ் ஈழக் கோரிக்கை எந்தளவு யதார்த்தபூர்வமாகும் என்பதும் கேள்விக்குறியே.

அந்த மாகாண இணைப்பினால் தமது அரசியல் செறிவு குறைந்து தாம் பாதிக்கப்படுவோமோ என்ற முஸ்லிம்களின் அச்சத்தினாலேயே, நிலத் தொடர்புள்ள மற்றும் நிலத் தொடர்பற்ற முஸ்லிம் மாகாண சபைக் கோட்பாடுகள் தோன்றின.

இப்போது வரலாற்று நிலைமைகள் மாறியிருக்கின்றன. போரின் முடிவுக்குப் பின்னர் ஏற்பட்டுள்ள புதிய அரசியல் நிலைமைகளின் கீழ், இக்கோரிக்கைகளின் யதார்த்த பூர்வத்தன்மையைத் தமிழ், முஸ்லிம் தலைவர்கள் மீளாய்வு செய்ய வேண்டிய நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.

## நிகாப் வாஜிப்... (1ம் பக்கத் தொடர்)

முகம் மூடி அணியும் பெண்களின் ஆடையை ஜம்இய்யதுல் உலமா கட்டாயப்படுத்தி வழங்கிய தீர்ப்பின் ஊடாக முஸ்லிம் சமூகத்தில் குழப்ப நிலை தோன்றியிருக்கிறது. நாட்டுச் சூழலில் தம்மால் நடைமுறைப்படுத்த முடியாத ஒன்றை தம்மீது திணிப்பதன் காரணமாக தாம் பெரும் சங்கடத்துக்கு உள்ளாகியுள்ளதாக முஸ்லிம் பெண்கள் சுட்டிக் காட்டுகின்றனர். தம்மீது கடமையாக்கப்பட்ட ஒரு விடயத்தைச் செய்யாமல் சமூகத்திலே வாழ்வது தம்மீது குற்றமாகி விடுகிறதே என அவர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

பெண்களை ஒடுக்குகின்ற பிற்போக்குச் சக்திகளாக முஸ்லிம்களை இனம் காட்டுவதற்கு இனவாதிகள் முயற்சி எடுத்து வருகின்ற சூழலிலேயே இந்தத் தீர்ப்பும் வெளியாகியிருக்கிறது. முஸ்லிம்கள் அண்மைக் காலமாக எதிர் நோக்குகின்ற எந்தப் பிரச்சினைகள் பற்றியும் வாய் திறக்காத பிரதமர், முஸ்லிம்களுடைய நிகாபை தடை செய்வதற்கு இடமளிக்கப் போவதில்லை எனத் தெரிவித்திருக்கிறார்.

சிங்களப் பாடசாலைகளுக்கு முஸ்லிம் தாய்மார் நிகாபுடன் வருவதை சிங்களப் பெரும்பான்மை கடந்த காலங்களில் எதிர்த்து வந்த போதிலும், கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் அண்மையில் அனுப்பி வைத்த சுற்று நிருபமொன்றில் தாய்மார் எப்படியும் ஆடை அணிந்து வரலாம் எனத் தெரிவித்திருந்தார். இது சிங்கள மக்கள் மத்தியிலும் சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கிறது.

முஸ்லிம்களை ஓரங்கட்டுவதற்கென செயற்படுகின்ற சக்திகளுக்கு பலம் சேர்க்கும் விதமாகவே ஜம்இய்யதுல் உலமாவின் இந்தத் தீர்ப்பு அமைவதாக பலரும் சுட்டிக் காட்டுகின்றனர்.

## அருமையான... (12ம் பக்கத் தொடர்)



நாம் மாத்திரம் போரடாலாம் என்று கணக்குப் போட்டது தவறு என்பததை காலித் மிஷ்அல் இந்த இடத்தில் உதாரணமாக எடுத்துக் கூறினார்.

இப்படி பதாஹ் அமைப்பும் ஹமாஸை பார்த்த சந்தர்ப்பங்கள் உண்டு. அன்று எமது அமைப்பு மாற்றீடாக வந்து இடைவெளியை நிரப்ப முடியும் என்றும் அவ்வாறு ஆட்சி செய்வது இலகுவானதே என்றும் கருதியிருந்தோம். அது தவறு என்று இன்று புரிகின்றோம்.

மிகச் சரியான அணுகுமுறை அதுவல்ல. மாறாக இணைந்து செயற்படுவதும் இணங்கிப் பயணிப்பதும் தான் உண்மையில் சரியான வழிமுறையாகும். எனவே சுதந்திரமான தேர்தலுக்கு பின்னர் கூட்டிணைந்து தேசிய ரீதியில் இணங்கிப் போவது தவிர்க்க முடியாதது.

எனவே பலஸ்தீன விவகாரத்தில் இந்த நடைமுறைக்கு வாருங்கள் என இரு தரப்பிடமும் மிஷ்அல் அழைப்பு விடுத்துள்ளார். எனவே ஹமாஸின் போராட்ட தீர்மானமும் பதாஹ் அமைப்பின் சமரச தீர்மானங்களும் சங்கமித்து, கூட்டாக உழைக்க வேண்டிய தருணம் மலர்ந்துள்ளது.

காலித் மிஷ்அல் அவர்களின் திறந்த உரையாடல் பாராட்டுக்குரியது. அவரது சுயவிமர்சனப் பார்வை வரவேற்கத்தக்கது. கட்டியெழுப்பும் வகையில் சிந்திப்பவர்கள் இந்தப் பாதையைதான் பின்பற்ற வேண்டும். உடைக்க விரும்புவர்கள் வந்த பாதையை திரும்பிப் பார்க்காமல் முன்னேறுவார்கள். அவர்களுக்கு முன்னால் அழிவுதான் முடிவாக வந்து நிற்கும்.

எனவே இஸ்லாமியவாதிகள் காலித் கூறிய கருத்துக்களை கண்டிப்பாக கருத்தில் எடுத்து பயணத்தை தொடர்வதே மிகவும் புத்திசாலித்தனம் என அறுதியிட்டுக் கூறலாம்.

## கிழக்கு... (1ம் பக்கத் தொடர்)



இந்த ஆசிரியர் வெற்றிடங்கள் அண்மைக்காலத்தில் நிரப்பப்படுவதற்கான எதிர்பார்ப்புக்களை இல்லாமல் செய்திருக்கின்றன. இறக்காமம் கோட்டப் பாடசாலைகளில் 9 பாடநெறிகளுக்கு 35 ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுவதாக தேசிய கல்வியியல் கல்லூரிகளின் ஆணையாளருக்கு கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் கடிதம் மூலம் தெரியப்படுத்திய போதும் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் ஒரேயொரு வெற்றிடம் மாத்திரமே காணப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் இப்பிரதேசத்தின் கல்வியில் இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளது.

அதேபோல கிழக்கு மாகாணத்தில் 110 வைத்தியர்களுக்கான வெற்றிடம் நிலவுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த முறை மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து வைத்தியத்துறைக்கு தெரிவு செய்யப்பட்டு சென்ற 75 வைத்தியர்களில் 3 வைத்தியர்கள் மாத்திரமே எமது மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளுக்கு கடமை செய்வதற்காக விண்ணப்பித்துள்ளனர். எஞ்சிய 72 வைத்தியர்களும் கொழும்பு மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளில் கடமை செய்வதற்காக விண்ணப்பித்துள்ளனர் என்று கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல். முஹம்மட் நஸீர் தெரிவித்துள்ளார்.

இதே போல கிழக்கு மாகாணத்தின் காணிப் பிரிப்பிலும் முஸ்லிம்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. கிழக்கு மாகாணத்தில் வாழும் 39 வீதமான முஸ்லிம்களுக்கு வெறும் 8 வீத நிலம் மட்டுமே உள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஏ.எல். தவம் தெரிவித்துள்ளார்.

## வட்டாரப் பிரிப்பினால்... (1ம் பக்கத் தொடர்)



இதன் ஒரு அங்கமாக இந்த விடயத்திற்கு பொறுப்பான மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சர் பைஸர் முஸ்தபா அவர்களுக்கும் கிண்ணியா ஷூறா சபை, மாவட்ட பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்று அமைச்சில் நடைபெற்றுள்ளது.

இதன் போது மாவட்டத்தின் மொத்த பிரதேசத்திலும் முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட இன விகிதாசாரம் பேணப்படாமை, சமமின்மை, முறையற்ற இணைப்புக்கள், பிரிப்புக்கள், பொருத்தமற்ற பெயர் சூட்டல்கள் போன்ற பல்வேறு விடயங்கள் அமைச்சருக்கு தெளிவு படுத்தப்பட்டன.

இதன் பின்னர் குறித்த விடயத்தினை இதற்கென நியமிக்கப்பட்டுள்ள அமைச்சரவை உபகுழு முன்னிலையில் சமர்ப்பித்து சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள தான் நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் வாக்குறுதியளித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அமைச்சரிடம் சந்திப்பிற்கான நேரத்தை பெற்றுத் தந்த M.S. தௌபீக் பா.உ. அவர்களுக்கு தமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதாக கிண்ணியா மஜ்லிஸ் ஷூறா தெரிவித்துள்ளது.

புதிய தேர்தல் முறை சட்டமூலத்தின்படி உள்ளூராட்சி வட்டார எல்லைகள் மீள்நிர்ணயம் செய்யப்பட்டதற்கிணங்க திருமலை மாவட்ட உள்ளூராட்சி அங்கத்தவர்களின் எண்ணிக்கை 118 இலிருந்து 171 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த நன்மையை முஸ்லிம்கள் பெற்றுக் கொள்ள முடியாத முறையில் வட்டார எல்லைகள் பிரிக்கப்பட்டுள்ளன. திருகோணமலை மாவட்டத்தில் வாழும் 43 வீத முஸ்லிம்களுக்கு 54 பிரதிநிதிகளும் 31 வீதமாக வாழும் தமிழர்களுக்கு 51 பிரதிநிதிகளும், 26 வீதமாக வாழும் சிங்களவர்களுக்கு 74 பிரதிநிதிகளும் தெரிவாகக் கூடிய விதத்திலேயே புதிய எல்லைகள் பிரிக்கப்பட்டுள்ளன.

அதிகரிக்கப்பட்ட உறுப்பினர் எண்ணிக்கை விகிதாசாரத்துக்கேற்ப 74 முஸ்லிம் உறுப்பினர்களை தெரிவு செய்யும் வாய்ப்புக் கிடைக்க வேண்டிய நிலையில் புதிய வட்டாரப் பிரிப்பினால் 20 முஸ்லிம் பிரதிநிதிகளை இழக்கும் நிலையே திருகோணமலை மாவட்டத்தில் தோன்றியுள்ளது.

## சவூதியிலுள்ள...

(1ம் பக்கத் தொடர்)

சவூதியிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள எந்த நிறுவனமும் இந்த இணையத்தளத்தினூடாக தமது முறைப்பாடுகளையும் உசாவுதல்களையும் மேற்கொள்ள முடியும் எனவும் சவூதியில் வசிக்கும் எந்த இலங்கையரும் தமது பிரச்சினைகளை இந்த இணையத்தளத்தினூடாக தூதுரகத்துக்குத் தெரிவிக்க முடியும் எனவும் சவூதி அரேபியாவுக்கான இலங்கைத் தூதுவர் பைஸல் மக்கீன் தெரிவித்தார்.

ஹஜ் உம்ரா முகவர்களும் இந்த இணையத்தில் உள்ளடக்கப்படவுள்ளனர். அடுத்த வருட ஹஜ், உம்ராக்களின் போது முகவர்கள் தமது யாத்திரிகர்களின் பெயர் விபரங்களை இந்த இணையத்தில் பதிவிடுமாறு கேட்கப்படுவர். இதன் மூலம் சவூதிக்கு வரும் இலங்கையர்களின் நடமாட்டங்களை அவதானிக்க முடியுமாகவிருக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## வறட்சியினால்...

(1ம் பக்கத் தொடர்)

கிரம ஓய, கட்டக்கடுவ தாங்கி ஆகியன வற்றிப் போயுள்ளன. களுகங்கையின் நீர் கடல் நீருடன் கலந்து உவர் நீராக மாறியுள்ளது என நீர் வழங்கல் சபையின் தலைவர் கே.ஏ.அன்ஸார் தெரிவித்தார்.

நாட்டிலுள்ள தொண்டு நிறுவனங்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு பௌஸர்கள் மூலம் நீர் வழங்கி வருகின்றன.

## மன்னார்...

(1ம் பக்கத் தொடர்)

5 மாவட்டங்களிலும் எல்லை மீள் நிர்ணயப்" பணிகள் இன்னும் முடியவில்லை. இவ்வாரம் முதல் அவற்றின் பணியும் ஆரம்பிக்கப்பட்டு இம்மாதத்துக்குள் அறிக்கைகள் முழுமைப்படுத்தப்பட்டு கையளிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

நாடு முழுவதும் உள்ள 14022 கிராம சேவையாளர் பிரிவுகளையும் தழுவியதாக எல்லை மீள்நிர்ணயப் பணி நடைபெற்றுள்ளது. 335 உள்ளூராட்சிச் சபைகளுக்கும் புதிய உள்ளூராட்சித் தேர்தல் முறைமையின் கீழ் தேர்தல்கள் நடைபெறும். கடந்த முறையில் தெரிவாகிய 4486 உறுப்பினர்களுடன் ஒப்பிடும் போது இம்முறை புதிதாகத் தெரிவாகின்ற 585 பேருடன் சேர்ந்து 5071 பேர் உள்ளூராட்சி சபைகளுக்குத் தெரிவாகவிருக்கின்றனர்.

எல்லை மீள்நிர்ணயப் பணிகள் முடிவடைந்ததும் சர்வகட்சி மாநாடொன்று ஏற்பாடு செய்யப்படுமெனவும், கமிட்டியினரால் முன்வைக்கப்பட்ட திருத்தங்கள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்படும் எனவும், எந்த இனத்துக்கும் அநியாயம் நடப்பதற்கு இடமளிக்கப் போவதில்லை எனவும் அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்தார்.

## சகல இன...

(4ம் பக்கத் தொடர்)

- பெரும்பாலான மலையக இளைஞர்கள் கொழும்பிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் டயர் கடைகளிலும் வேலைசெய்கிறார்கள். நீங்கள் அவர்களது வாக்குகளைப் பெற்று சுகமாக உள்ளீர்கள். இவ்வாறான இளைஞர்கள் தொடர்பில் ஏன் கவனஞ் செலுத்துவதில்லை?

அண்மைக் காலம் தொட்டே அவர்கள் கொழும்பு வர ஆரம்பித்திருக்கிறார்கள். அதாவது யுத்தம் முடிந்ததன் பிறகு. முன்னர் அவர்கள் தோட்டங்களிலேயே தங்கியிருந்தார்கள். கூடுதலானவர்கள் இவ்வரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் கொழும்பு சென்றார்கள்.

ஏனெனில், மலையகத்தில் தொழில் வாய்ப்புகளில்லை. இவ்விளைஞர் யுவதிகளுடைய கல்வி மட்டங்களும் சிறப்பானதாக இல்லை. உயர்ந்த பட்சம் சாதாரண தரம் வரையிலோ அல்லது எட்டாம் வகுப்பு வரையிலோ தான் கற்றிருப்பார்கள். அதன் பிறகு கொழும்பு சென்று சிறு சிறு தொழில்களை செய்கிறார்கள். பெரியதொரு தொழில் கிடைக்கும் வரையில் அதுபோன்ற தொழில்களை செய்வதில் தவறில்லை.


மீள்பார்வை **உள்நாட்டு - வெளிநாட்டு புதிய சந்தா விபரம்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மீள்பார்வை தனிப் பிரதி | - ரூபா 40.00 | இந்தியா | | மத்திய கிழக்கு நாடுகள் | - 4000.00 | ஐக்கிய இராச்சியம் | - 5500.00 |
| 13 இதழ்கள் | - ரூபா 650.00 | தனிப் பிரதி | - ரூபா 100.00 | மலேசியா | - 4000.00 | அமெரிக்கா | - 6500.00 |
| 26 இதழ்கள் | - ரூபா 1300.00 | ஒரு வருடம் | - ரூபா 3500.00 | ஐக்கிய அறபு இராச்சியம் | - 4000.00 | அவுஸ்திரேலியா | - 4700.00 |
| | | | | | | சீனா | - 4600.00 |

வங்கியில் பணம் செலுத்திவிட்டு, அதன் பிரதியையும் உங்களது பெயர், முகவரியையும் எமக்கு அனுப்பி வையுங்கள்:

MMC 49, Sri Mahinda Darma Mw, Dematagoda, Colombo 09. Hotline: 0112 691258 People's Bank A/c 056100150028101 (Branch: Sri Sangaraja Mawatha)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கூலா ஹஸன்



பாகிஸ்தானை பூர்வீகமாகக் கொண்ட கூலா ஹஸன் சவூதியில் பிறந்து, கென்யாவில் வளர்ந்தவர். தற்போது லண்டனில் வசித்து வருகிறார். பிரிட்டனில் பல்வேறு சமய, சமூகப் பணிகளில் தன்னை இணைத்துக் கொண்ட கூலா, சட்டத் துறையில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். எழுத்தாளராகவும் சட்ட ஆலோசகராகவும் நிகழ்ச்சி ஒளிபரப்பாளராகவும் என பல்வேறு தளங்களில் தீவிரமாக இயங்கி வருபவர்.

கிழக்கு லண்டனிலுள்ள Three Faiths Forum இன் நிறைவேற்று உறுப்பினர்களுள் ஒருவர். இந்நிறுவனம் யூத, கிறிஸ்தவ, இஸ்லாமிய மதங்களுக்கிடையிலான கலந்துரையாடல்களை நடாத்தி வருகின்றது. இதேவேளை, சமாதானத்திற்கும் பகை மறுப்புக்குமான புனித Etcebrugd நிறுவனத்தின் ஆய்வாளராகவும் பணியாற்றுகின்றார். லண்டனைத் தளமாகக் கொண்டியங்கும் ஷரீஆ கவுன்சிலின் உறுப்பினராகவும் இயங்குகின்றார்.

தற்போது Albatross Consultancy Ltd நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளராக செயலாற்றுகின்றார். SOAS பல்கலைக்கழகத்தில் சட்டத்துறையில் பட்டம் பெற்று வெளியேறிய கூலா, சர்வதேச மற்றும் ஒப்பீட்டு சட்டவியல் ஆய்வுத் துறையில் முதுமானிப் பட்டத்தை (MA) பெற்றுள்ளார். சமகால பிரிட்டனில் ஓர் இஸ்லாமிய அறிவுஜீவியாகவும், ஷரீஆ துறைசார்ந்த ஆலோசகராகவும் மதிக்கப்படும் இவர், இஸ்லாமிய அடையாளங்களைப் பேணுவதில் பற்றுறுதியோடு செயல்படுகின்றார்.

ஐரோப்பாவில் முஸ்லிம்கள் எந்த வகையிலும் இரண்டாம் தர பிரஜைகளாகக் கருதப்படக் கூடாது. குறிப்பாக முஸ்லிம் பெண்கள் தமது அடையாளமான ஹிஜாபை எந்த வகையிலும் கைவிட்டு விடக் கூடாது என்று பரந்துபட்ட பிரச்சாரப் பணியில் ஈடுபட்டு வருகிறார்.

மேற்கில் ஹிஜாபை அடிப்படைவாதத்தின் குறிகாட்டியாக அடையாளப் படுத்தும் ஊடகங்களை கடுமையாகச் சாடி வரும் அவர், பிரிட்டனில் இஸ்லாமிய பீதியை (Islamophobia) வளர்ப்பதில் ஊடகங்களே முன்னிலையில் உள்ளதென்று குற்றம் சாட்டுகிறார்.

தனது ஆரம்ப நாட்களை நினைவு கூரும் கூலா ஹஸன், ''குர்ஆனை சிறு வயதிலேயே கற்பதற்கான வாய்ப்பு எனது வீட்டில் கிட்டியது. இஸ்லாமியக் கல்வியையும் குர்ஆனையும் எனது பெற்றோர் எனக்குக் கற்பித்துத் தந்தனர். எனது தந்தை கஹைப் ஹஸன் இஸ்லாமிய முறையில் என்னை வளர்த்தெடுப்பதில் மிகக் கவனமாக இருந்தார்.

தொலைக்காட்சி, வானொலி என்பவற்றில் இஸ்லாமிய நிகழ்ச்சிகளையும் நான் நடத்தி வருகின்றேன். BBC Asian Network இல் பியோன் பிலீப் (Beyond Belief) (நம்பிக்கைக்கு அப்பால்) எனும் பெயரில் ஒளிபரப்பாகும் நிகழ்ச்சி எனது தயாரிப்பாகும். இஸ்லாத்தில் பெண்கள் என்ற கருப்பொருளில் இர்ஷாத் மென்ஜியுடன் பகிரங்க விவாதமொன்றில் கலந்துகொண்டேன். இறுதியில் எனக்கே வெற்றி கிடைத்தது. கட்டாரின் டோஹாவில் நடைபெற்ற பெண்களுக்கான சமத்துவம் குறித்த விவாதத்திலும் நான் கலந்துகொண்டேன். ஆனால், அதில் வெற்றி பெற முடியவில்லை.

லண்டனிலுள்ள அல்குர்அன் கழகத்தில் ஓர் ஆசிரியராகப் பணியாற்றிய அனுபவமும் எனக்குண்டு. நாம் ஏன் தொழ வேண்டும்? இணை வைப்பின் நிழல்கள், இஸ்லாத்தில் குழந்தை வளர்ப்பு, இஸ்லாத்தின் பெண்கள் உரிமைகளும் கடமைகளும் போன்ற தலைப்புக்களில் கடந்த 20 ஆண்டு காலமாக எல்லா வயதில் உள்ள பெண்களுக்கும் வகுப்புக்களை நடத்தி வருகின்றேன். குர்ஆன் விளக்கவுரையே (தப்ஸீர்) எனக்கு மிகவும் ஆர்வத்திற்குரிய துறையாகும். தவிரவும் ஹதீஸ், இஸ்லாமிய வரலாறு ஆகியவற்றிலும் மிகுந்த ஈடுபாடு உள்ளது'' என்கிறார்.

தற்போது அவர் பணியாற்றும் கம்பனி, ஷரீஆ, பெண்கள் உரிமைகள் தொடர்பாக சட்ட ஆலோசனை வழங்கும் நிறுவனமாகும். 17 வயதில் இவரது முதல் நூல் The Crumbling Minarat of Spain வெளியானது. பிரிட்டனில் வெளியிடப்பட்ட இந்நூல், பின்னர் அறபு, உர்து போன்ற மொழிகளுக்கும் பெயர்க்கப்பட்டது.

imamsonline.com இணையத்தில் இஸ்லாம் குறித்து கூலா தொடராக எழுதி வருகின்றார். சமீபகாலமாக லண்டனில் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப் படும் வெறுப்புப் பிரச்சாரம் மற்றும் இன ரீதியான குற்றங்களை ஆவணப் படுத்தி வரும் இவர், பாதிக்கப்பட்டவர் களுக்கு சட்ட ஆலோசனைகளையும் வழங்கி வருகிறார். இவரது ஏனைய வெளியீடுகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. Social and Medical effects of consageuineous marriege (2009)
2. My British Hijab (2010)
3. Hijab a symbol of modesty or seclusion (2015)
4. A Course book in Islam (2016)
5. The Islamic Shareea Councils response to baroness arbitration and midiation bill (2014)

# முஸ்லிம் வைத்தியர்களின் சமூகப் பொறுப்பு



முஸ்லிம் வைத்தியர்களின் சமூகப் பொறுப்புக்களில் ஒன்று, அவர்கள் மருத்துவ ஒழுக்கவியலை முறையாகப் பின்பற்றுவதாகும். இஸ்லாம் ஒவ்வொரு செயற்பாட்டிற்குமுரிய ஒழுக்கத்தை வரையறை செய்திருப்பது போன்று, மருத்துவ தொழிலுக்கான ஒழுக்கங்களையும் தெளிவாக வரையறுத்துள்ளது.

அதன்படி நோயாளர்களை உணர்வுள்ள மனிதர்களாகப் பார்ப்பதும், இரக்கமாக நடந்துகொள்வதும் முக்கியமானது. நோயாளியை ஒரு பண்டமாகப் பார்ப்பதை இஸ்லாம் அங்கீகரிக்கவில்லை. அவர்கள் ஆன்மா அடங்கிய மனிதர்கள். அச்சங்கள், விருப்பங்கள், வெறுப்புக்கள், உணர்வுகள் உள்ள உயிரிகள். நவீன மருத்துவ ஒழுக்கவியல் மருத்துவத் துறையின் மையப் பிரச்சினையாக பண்டமாகப் பார்க்கும் நோக்கை அடையாளப்படுத்துகின்றது.

எரிக் ஃபோரம் என்பவர், நவீன மனிதனின் மருத்துவ மற்றும் ஒழுக்கவியல் பிரச்சினைகள் எனும் கட்டுரையில் மனிதன் ஒரு பண்டம் அல்ல. அவனை நீ பண்டமாக மாற்ற முனைந்தால் அவனுக்கு நீ தீங்கு செய்கிறாய் எனக் குறிப்பிடுகின்றார்.

நோயாளியை அதிகாரத் தோரனையில் விசாரிப்பது, கடுகடுப்பான வார்த்தைகளோடு முகத்தில் பாய்வது, மருத்துவர்களே அனைத்தையும் தீர்மானிப்பவர்கள் என்ற எண்ணத்தில் செயல்படுவது, இவையெல்லாம் மனித நேயத்திற்கு முரணானவையாகும். நோயாளியை குணப்படுத்த எந்த அணுகுமுறையையும் கையாளலாம் என நினைப்பதும் மருத்துவ ஒழுக்கவியலுக்கு எதிரானதாகும். நோயாளி ஒரு பரிசோதனைப் பொருளோ பண்டமோ அல்ல. அடிப்படையில் அவனை மனிதனாகப் பார்க்கும் ஒழுக்கப் பார்வை மருத்துவர்களுக்கு அவசியம்.

| | |
|---|---|
| அரச மருத்துவ அதிகாரிகள் | 11023 |
| பல் மருத்துவர்கள் | 1314 |
| உதவி மருத்துவ அதிகாரிகள் | 1194 |
| தாதிகள் | 31466 |
| பொது சுகாதார தாதிகள் | 290 |
| பொது சுகாதார பரிசோதகர்கள் | 1740 |
| பொதுச் சுகாதார மகப்பேற்று தாதிகள் | 6167 |
| மருத்துவ மகப்பேற்று தாதிகள் | 2828 |

எரிக் ஃபொரெம் குறிப்பிடுவது போல், அன்பு, கருணை, பிறர் வேதனையை தன் வேதனை போல் உணர்தல் போன்ற பண்புகள் ஒரு வைத்தியருக்கு இருக்க வேண்டும். தனிப்பட்ட குரோதம், பக்கச்சார்பு, இன வேறுபாடு தவிர்க்கப்பட வேண்டும். முடியுமானவரை மரணத்தைத் தள்ளிப் போடுவதும் நோயாளியை உள ரீதியில் ஆறுதல் படுத்துவதுமே ஒரு வைத்தியரின் கவனமாக இருக்க வேண்டும்.

டொக்டர் பிபிலே குறிப்பிடுவது போன்று, பணத்தைக் கறந்துகொள்வதில் வைத்தியர்கள் காட்டும் ஆர்வம் நோயாளியைப் பரிவோடு பராமரிப்பதில் காட்டப்படுவதில்லை. பணம் பண்ணுவது மாத்திரமே வைத்தியர்களின் ஒரே குறியாக இருக்கக் கூடாது. மனிதாபிமானத்தோடு நோயாளிகள் அணுகப்பட வேண்டும்.

''யார் பூமியில் உள்ளவர்களுக்கு அன்பு காட்டுகின்றார்களோ அவர்களுக்கு வானத்திலுள்ளவர்கள் அன்பு காட்டுவர்'' என்பது நபிகளாரின் போதனையாகும்.

**2007 இல் இலங்கையில் வைத்தியர்கள்**

| | |
|---|---|
| தேசிய வைத்தியசாலை | 01 |
| போதனா வைத்தியசாலை | 20 |
| மாகாண பொது வைத்தியசாலை | 03 |
| மாவட்ட பொது வைத்தியசாலை | 18 |
| ஆதார வைத்தியசாலை Type A | 22 |
| ஆதார வைத்தியசாலை Type B | 46 |
| பிரதேச வைத்தியசாலை Type A | 42 |
| பிரதேச வைத்தியசாலை Type B | 129 |
| பிரதேச வைத்தியசாலை Type C | 322 |
| ஆரம்ப மருத்துவ சிகிச்சை அலகு | 474 |
| மருத்துவ சபை பராபரிப்பு நிலையம் | 01 |
| விஷேட வைத்தியசாலைகள் | 05 |
| மொத்தம் | 1082 |

# நிகழ்கால நினைவாற்றல்

3 வயது முதல் 5 வயது வரையான குழந்தைகள் பற்றிய ஆய்வொன்று தற்கால நினைவாற்றல் திறன் குறைந்த பிள்ளைகள் எதிர்நோக்கும் சில பிரச்சினைகளை பின்வருமாறு அடையாளப்படுத்துகின்றது.

1. ஆசிரியர் சொல்லும் தொடர்ச்சியான குறிப்புக்களைக் கேட்டு, அது போன்று செயற்பட முடியவில்லை. அந்தக் குறிப்புக்களை அவர்கள் மறக்கின்றனர்.

2. கரும்பலகையில் எழுதப்பட்டிருப்பதைப் பார்த்து எழுதும்போது விட்ட இடத்திலிருந்து தொடர்ந்தும் எழுத முடியாமல் சில வார்த்தைகளை விட்டு விடுகின்றனர்.

3. கதை சொல்லும் வேளையில் சில பகுதிகளைப் புரிந்துகொள்ள முயற்சிக்கும்போது வேறு சில பகுதிகளைத் தவற விடுகின்றனர். எனவே கதையைச் சரிவர புரிந்துகொள்வதில்லை. அதனால் கதை பற்றிய நீண்டகால நினைவாற்றலும் பலவீனமாகவே இருக்கும்.

இப்போது இவர்கள் சிறிய குழந்தைகளாக இருக்கலாம். ஆனால், காலம் செல்லச் செல்ல கற்றல் செயற்பாடுகளில் அவர்கள் பின்தங்கிப் போவார்கள். இத்தகைய குழந்தைகளுக்கு கெதர் கோலின் பின்வரும் ஆலோசனைகளை முன்வைக்கின்றார்.

1. நிகழ்கால நினைவாற்றலுக்கு அதிக வேலைப்பழு கொடுக்கும்போது ஏற்படும் அறிகுறிகளைக் கவனியுங்கள்.

2. நீங்கள் அவர்களுக்குக் கொடுக்கும் வேலை நிகழ்கால நினைவாற்றலுக்கு எத்தகைய பாரத்தைக் கொடுக்கிறது என்பதை மதிப்பிடுங்கள்.

3. வேலைப்பழு அதிகமாக இருந்தால் அதைச் சிறு சிறு பகுதிகளாப் பிரியுங்கள். அது பற்றிய குறிப்புகளை எழுதுங்கள். குழந்தைகளுக்கு அறிமுகமான பொருட்களைப் பயன்படுத்துங்கள். பல முறை செய்து பார்க்கவும் எழுதிப் பார்க்கவும் வாய்ப்பளியுங்கள்.

தொடர் பயிற்சியினால் குறிப்பிட்ட நேரத்தில் நிகழ்கால நினைவாற்றைப் பயன்படுத்தி பெரிய கருத்துத் தொகுப்பை அப்படியே மொத்தமாகப் புரிந்துகொள்ளும் திறமையை தானியங்கு தன்மை என்பர்.

தகவல்களைப் பார்க்காமல் படிப்பதுதான் கற்றல் என்று சுருக்கி விடக் கூடாது. அத்தகல்களைப் பயன்படுத்தவும், அதன் மூலம் எளிமையாக, சிரமமில்லாமல் உயர் நிலை சிந்தனை ஆற்றலைப் பெறவும் வேண்டும். விருப்பமான, சவாலான கற்றல்தான் பாடத்திட்டத்தின் நோக்கமாக இருக்க வேண்டும். பயிற்சி என்பது அதற்கு உதவும் கருவியாக இருக்க வேண்டும்.

## கண்ணாடியை துடைத்து... (16ம் பக்கத் தொடர்)

நோன்பின் கால கட்டத்தில் உண்பதற்கும் குடிப்பதற்கும் துய்ப்பதற்கும் பார்ப்பதற்கும் பேசுவதற்கும் உணர்வதற்கும் பெரும் வேகத்தடைகள் ஏற்படுத்தப் படுகின்றன.

பல ஓடைகளின் வழியாக தன் மீது வந்து நிரம்பிக் கொண்டே இருக்கும் நுகர்வுகளின் பாய்ச்சல் மட்டுப்படுத்தப் படும்போது மனித ஆன்மாவானது நிதானத்தையும் அமைதியையும் பெறுகின்றது.

அப்போது மனம் என்னும் கண்ணாடி தன் இயல்பான உள்ளொளியை மீட்டுக் கொள்கின்றது. அந்த நேரத்தில் தன்னையும் அனைத்து உலகங்களையும் படைத்து காக்கும் எஜமானனின் வல்லமையையும் பேரன்பும் நிறைந்த காட்சியையும் கண்டு உணர்ந்து கொள்கின்றது.

மேலும் அதன் வழியாக அது பாதுகாப்பையும் புத்துணர்வையும் பெற்றுக் கொள்வதோடு தனது கடமைகளை விருப்பத்துடன் அறிந்து நிறை வேற்றுகின்றது.

நிலவின் ஆட்சியும் மின் விளக்குகளின் ஆக்கிரமிப்பும் இல்லாத ஒரு ஒரு இரவுப்பொழுதை அத்து வானக் காட்டிலோ மலைப்பகுதியிலோ நாம் கழிக்க நேர்ந்தால் அந்த நேரத்தில் இரவு தன்னை திறந்து காட்டும். கும்மிருட்டு விலகி வானத்திலிருந்து மெல்லிய வெளிச்சம் மெல்ல கசிந்து பரவும்.

அது போலவே எதிர்மறையான வெளிப்புற உட்புற தாக்கங்களிலிருந்து விடுதலை பெறும் மனது இறைவனு டனான தனது ஆதி நிலை உறவை மீட்டுக்கொண்டு உயர்ந்த நிலையை அடையும்.

இந்த மீட்பு முயற்சியில் நமக்கு உதவி புரிவதற்காகவே புனித ரமழான் காலத் தையும் அதனை ஒட்டிய வணக்க வழிபாடுகளையும் வேண்டுதல் களையும் அல்லாஹ்வும் அவனது திருத்தூதரும் நமக்கு கொடையாக வழங்கி உள்ளனர்.

யா அல்லாஹ்! நீ மட்டுமே தூய்மையானவன். உனது அருளும் ஆற் றலும் இல்லாமல் நன்மைகள் புரியவோ தீமைகளிலிருந்து விலகவோ எங்களால் முடியாது. உன்னிடமே நாங்கள் தூய்மையை வேண்டுகின்றோம். ஆமீன்.

நன்றி - kayalpatnam.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தயக்கமேது?

'தொப்பி சைஸ் ஹரி, அபி தாகன்னம்....' என்று சனியனை பெனியனுக்குள் போட்டுக் கொண்டது உலமா சபை. விளைவு?? இனவாதிகளுக்கு பதிலளிக்க கிழமைக்கு ஒருக்கா ஹோட்டல் புக் பண்ணி பதில் கொடுத்து காலத்தையும் காசையும் அநியாயமாக கரைத்தது. கண்ட பிரயோசனம் ஒன்றும் இல்லை.

நிகாப் விவகாரமும் இவ்வாறுதான். அது தனிமனித சுதந்திரம்... விரும்பியவர்கள் அணியலாம். பெண்களுக்கு முகமும், மணிக்கட்டுக் கைகள் தவிர்ந்த அனைத்தும் அவ்ரத் என்று தெளிவாக இஸ்லாம் சொன்ன தன் பின்னர் அந்த ஸஹாபியா மூஞ்சி மூடினா, இந்த ஸஹாபியா மூடினா என்று மொக்குத்தனமாக சமூகத்தை வழிநடத்த முற்பட வேண்டாம்.

டியர் ரிஸ்வி முப்தி - கோ.... தயவு செய்து தலைமையை ராஜினாமா செய்துவிடுங்கள். அட்லீஸ்ட் யூசுப் முப்திக்காவது கொடுங்கள். அவர் உங்களைப் போன்று சிறுபிள்ளைத் தனமாக முடிவுகள் எடுக்க மாட்டார் என்று கொஞ்சமாவது நம்பிக்கை உள்ளது.

இல்லாவிட்டால் இனிவரும் காலங்களில் எந்த அரசியல் விவகாரத்திலும் மூக்கை நுழைக்காதபடி கிறிஸ்தவர்களின் 'ஆன்மீக தலைமையாக' மட்டும் வத்திக்கான் திருச்சபையை மாற்றியது போல ACJU ஐயும் மாற்றவேண்டி வரும்.... மாற்றுவோம்... கவனம்....


- ரீனும் மக்ரா

# “நிகாப் வாஜிப் : இதுவே இன்றும் உலமா சபையின் நிலைப்பாடு”



## தடை வந்தால் முஸ்லிம் எம்பிக்கள் போராட வேண்டும்

அ.இ.ஜ உலமா சபையின் தலைவர் ரிஸ்வி முப்தி


இலங்கையில் ஹலால் தடை : பொறுமையாக இருங்கள்.

மஸ்ஜித்கள் மீது தாக்குதல் : பொறுமையாக இருங்கள்.

அளுத்கம வெறியாட்டம், மாடறுப்பு தடை முஸ்தீபு, அல்லாஹ் நாமத்தை பன்றியில் எழுதி கேவலப்படுத்தியது.. எக்ஸெட்ரா எக்ஸெட்ரா..
: பொறுமையாக இருங்கள்

நிகாப் தடை : முஸ்லிம் எம்.பிக்கள் இறங்கி போராட வேண்டும்.

ஜம்மியத்துல் உலமா

20:49

### நிகாப் பத்வா

நிகாப் வாஜிப் என்று பத்வா கொடுத்த ஜம்இயதுல் உலமா உட்பட அந்த 35 பேர் கொண்ட குழுவிடம் சில கேள்விகள்

1.உங்களுக்கு தெரியுமா எமது சமூகத்தில் பல பெண்கள் இப்பொழுது வேலைக்கு செல்கிறார்கள். வாழ்க்கை செலவு வானளாவ உயர்ந்திருக்கிறது. பல பெண்கள் வேலைக்கு செல்வது தனது கணவன் பாரிசவாதத்தால் பாதிக்கப்பட்டுள்ளான். அவர்களின் கணவர் கடின உழைப்பால் குறைந்த வயதிலேயே நோய்வாய்ப்பட்டு கட்டிலோடு கட்டிலாகத்தான் இருக்கிறார்கள். நிகாப் வாஜிப் என்றுபத்வாகொடுத்துள்ளீர்களே?

2. இப்படியான பெண்களுக்கு உங்கள் தீர்வு என்ன? உங்கள் பத்வா குழுவில் உள்ள 35 பேரில் யாருடையாவது மனைவி வறுமை காரணமாக தொழிலுக்கு செல்கிறார்களா? அல்லது உங்கள் 35 பேரில் உழைப்பின் கடுமை காரணமாக முடமாகிய யாராவது இருக்கிறீர்களா?

KDH Highroof Full Air Condition வாகனத்தில் Luxury Curtain ஆல் மறைத்து சொகுசு பயணம் செல்லும் உங்களுக்கு எங்கே புரியப் போகிறது இந்த அடிமட்ட மக்களின் வறுமையும் பிரச்சினையும்.ஹாஜியார்மாரின் கோடிக் கணக்கான ஸகாத் பணத்தை மார்க்கப் பணி என்ற பெயரில் சுருட்டிக் கொள்ளும் இந்த அரபிக் கல்லூரிகளுக்கு எங்கே புரியப் போகிறது இவர்களின் கஷ்டம் துயரம்.

ஏழைகளின் ஸகாத் பணத்தை தான் கொள்ளையடிக்கிறீர்கள். நிகாப் அணிவது வாஜிப் வாஜிபை செய்யாதவர்கள் பாவி என்று இந்த ஏழைப் பெண்களை மார்க்கத்தின் பெயரால் அச்சுறுதத்தாமல் நிம்மதியாகவாவது வாழ விடுங்கள்.

- முஹம்மது இனாஸ்

ஜம்மிய்யத்துல் உலமாவின் அஜல் நெருங்குகிறது போல் தெரிகிறது. ஒரு குறிப்பிட்ட குழு அதனை தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்க முனைவதும் அந்தக் குழு பிரதிநிதித்துவப் படுத்தும் கருத்துக்களை பலவந்தமாக புகுத்த முற்படுவதும் இந்த நாட்டின் இரண்டு மில்லியன் முஸ்லிம்களைப் பாதிக்கும்.

பிடிவாதமாக மக்களை வழி நடத்த முனைவது ஜம்இய்யத்துல் உலமாவின் வெடிப்புக்கும் அழிவுக்குமே வழிவகுக்கும். அதுமட்டுமின்றி பல ஜம்இய்யதுல் உலமாக்கள் எதிர் காலத்தில் தோன்றும் அபாயம் ஏற்படவும் சந்தர்ப்பங்கள் இருக்கின்றன.

- அஸீம் ஸலாம்

### பெண்கள் முகம் மூடுவது (முஸ்தஹப்)

**விரும்பத்தக்கது சில வரையறைகளுடன்...**

கை முகம் திறப்பது (முபாஹ், ஜாயிஸ்) இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்டது.

கை முகம் தவிர்ந்து ஏனைய பகுதிகளை திறப்பது நிர்ப்பந்த சூழ்நிலைகள் தவிர்த்து (ஹராம்) விலக்கப்பட்டது.

ஷாபிஈ மத்ஹபில் ஹஜ்ஜுடைய விடயங்கள் தவிர்ந்து ஏனைய எல்லா பகுதிகளிலும் வாஜிபும் பர்ழும் ஒரே தரத்திலே உள்ளன, அந்த வகையில் வாஜிபை விடுவது பாவம் அதை மறுப்பது இறை நிராகரிப்புக்கு இட்டுச் செல்லக்கூடியது என்ற பொருளையே தரும். எனவே........

அல்லாஹு அஃலம்

- முபாரிஸ் ரஷாதி

### எப்படி உத்தரவு...?

முதலாவது கேள்வி: உலமா சபையை இலங்கையின் அனைத்து முஸ்லிம்களும் தங்களது ஏக பிரதிநிதிகள் சபையாக அங்கீகரித்து எப்பொழுது சம்மதம் கொடுத்தார்கள்? உலமா சபையின் தலைவர் முஸ்லிம்களால் நேரடியாக தெரிவு செய்யப்பட்டவர் அல்ல, யாரோ சில லெப்பைகள், பூசாரிகள், புரோகிதர்கள் கூடி தெரிவு செய்ததாக ஒரு நாடகம் அரங்கேற்றப்பட்டது, ஆகவே அப்படி தெரிவு செய்யப்பட்ட ஒருவர், மொத்த முஸ்லிம் சமூகத்தின் மீது எப்படி உத்தரவு பிறப்பிக்க முடியும்?

இரண்டாவது கேள்வி: உலமா சபை என்பது பல இயக்கங்களையும் கொண்ட ஒரு அமைப்பு. ரிஸ்வி முப்தி தனது முடிவை உலமா சபை சார்பில் வெளியிடுவதற்கு முன்னர் அனைத்து இயக்கங்களினதும் சம்ம தத்தை பெற்றுக்கொண்டாரா?- JG **இணையம்**

### தோழர்களே !

என்னிடம் சுமார் 800 க்கும் அதிகமான புத்தகங்கள் உள்ளன.
இரவலாக மட்டுமே கொடுக்க முடியும்.
**நிபந்தனைகள்:-** ஆகக் குறைந்தது இரண்டு வாரங்கள், ஆகக் கூடியது ஒரு மாதம்.
ஒற்றைகளை மடிக்கவோ, கசக்கவோ, அழுக்காக்கவோ, கிழிக்கவோ கூடாது.



அப்படி ஏதும் நடந்தால் புத்தகத்தின் பெறுமதியில் இரண்டரை மடங்கு செலுத்தப் படல் வேண்டும்.
முன்பதிவு அவசியம்.

தொடர்பு கொள்க.
0777138144

# கண்ணாடியை துடைத்து வையுங்கள்!



சாளை பஷீர் ஆரிஃப்

அது ஸுல்தானின் ஆட்சிக்காலம். அவர் கலைகளை போற்றுபவர்.வழமை போல அன்று அவரின் அவை கூடும் நாள். அந்த அவையில் அன்று கலைஞர்கள் கூட்டம். ஓவியம் தீட்டுவதில் தங்களுக்குள்ள திறமையை நிரூபித்துக் காட்டுமாறு கிரேக்கர்களை பார்த்து சீனர்கள் அறை கூவல் விட்டனர். அவை சலசலத்தது. எல்லோரும் ஸுல்தானின் முகம் நோக்கினர். ஒரு முடிவிற்கு வந்த வராய் ஸுல்தான் பின்வருமாறு அறிவித்தார்.

நுண்கலைகளுக்காக அரசு உருவாக்கியுள்ள கட்டிடத்தில் வந்து தங்களின் ஓவியத்திறமைகளை கிரேக்கர்களும் சீனர்களும் நிரூபிக்க வேண்டும் என அவர் உத்தரவிட்டார். ஓவியம் தீட்டுவதற்கான பெரும் வரை பலகை பகுதிகள் இரண்டு நாட்டவர்களுக்கும் ஒதுக்கப்பட்டன. அவை ஒன்றுக்கு ஒன்று நேர் எதிராக அமைந்திருந்தன.

**போட்டி தொடங்கியது.**

சீனர்கள் விதம் விதமான வண்ணங்களை கொண்டு வந்து கலக்கியும் சேர்த்தும் புது வித நிறச்சேர்க்கைகளை உண்டாக்கினர். பெரும் ஓவிய கலைஞர்களின் தூரிகைகள் விளையாடத் தொடங்கின.

**கிரேக்கர்கள் என்ன செய்தனர்?**

அவர்கள் எதையும் வரைய தொடங்கவில்லை. அத்துடன் ஏற்கனவே அந்த வரை பலகையில் தீட்டப்பட்டிருந்த வண்ணங்களை அழிக்கவும் செய்தனர். பின்னர் அந்த வரை பலகையை முழுவதுமாக மூடும் விதமாக ஒரு திரையை தொங்க விட்டனர். திரைக்குள் வருவதும் போவதுமாக இருந்தனர்.

வேலைகள் மும்முரமாக நடந்தன. ஆனால் இரண்டு பக்கத்திலும் எந்த ஓசையுமற்ற ஆழ்ந்த மௌனம் நிலவியது.

போட்டியின் இறுதி நாள். தீர்ப்பு அறிவிக்கும் முற்பகல் நேரம் நெருங்கியது. மக்களிடையே பெரும் எதிர்பார்ப்பும் ஆவலும் அலை மோதியது..

தங்களின் பணி நிறைவடைந்ததை சீனர்கள் மேள தாளத்துடன் அறிவித்தனர்.

அவர்களின் வரை பலகையில் அழகும் நுட்பமும் பொருளும் செறிவான ஓவியங்கள் உயிர் பெற்றிருந்தன.

நடுவர்களும் பொதுமக்களும் மலைத்து நின்றனர். பின்னர் மன்னரும் நடுவர்களும் கிரேக்கர்களின் வரை பலகை பக்கம் திரும்பினர். தங்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த வரை பலகையின் மீதிருந்த திரையை அவர்கள் பணிவுடன் மெல்ல அகற்றினர்.

**என்ன அதிசயம் !**

சீனர்களின் வரைபலகையில் இருந்த அத்தனை ஓவியங்களும் இவர்களின் வரைபலகையிலும் இருந்தது. இன்னும் சொல்லப்போனால் முற்பகல் கதிரவனின் ஒளி பாய்ச்சலில் அந்த ஓவியங்கள் இன்னும் தெளிவாகவும் பொலிவுடனும் காட்சியளித்தன. கிரேக்கர்கள் இத்தனை நாட்களும் செய்தது எல்லாம் அந்த வரைபலகை அளவிற்கு கண்ணாடி ஒன்றை ஆயத்தம் பண்ணி மாட்டியதுதான்.

(மௌலானா ஜலாலுத்தீன் ரூமி (ரஹ்) நீதிக்கதையிலிருந்து...)

1. ஒரு இறை நம்பிக்கையாளன் இன்னொரு இறை நம்பிக்கையாளனுக்கு கண்ணாடி. (நபி மொழி)

2. உலகில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் இயற்கை நெறியை ஏற்றுக் கொள்ளும் தன்மையிலேயே பிறக்கிறார்கள், எனினும், அந்தக் குழந்தைகளை அவர்களின் பெற்றோர்களே நெறி பிறழச் செய்கின்றனர். என்ற பொருள் படும் நபி மொழி .

இந்த இரண்டு நபி மொழிகளையும் இணைத்து பார்க்கும்போது நிறைய உண்மைகள் நமக்கு புலப்படுகின்றன.

உலகிற்கு வரும் மனித ஆன்மா ஒவ்வொன்றும் மாசு மருவின்றி தெளிவாகவும் எதையும் உள்ளது உள்ளபடியே எதிரொலிக்கக்கூடிய ஒரு கண்ணாடித் தன்மையுடன்தான் பிறக்கின்றன.

முதலில் பெற்றோரின் வாயிலாகவும் பின்னர் கண் , காது , மூக்கு , செவி , வாய் போன்ற அய்ந்து புலன்களின் வழியாகவும் அவனது ஆன்மாவிற்குள் வந்து சேரும் கருத்துகள் , காட்சிகள், செய்திகள், அறிதல்கள் மூலமாகவும் அவனது ஆன்மா என்ற கண்ணாடி ஒன்று மென்மேலும் மெருகடைகின்றது அல்லது மாசு பட்டு மங்குகின்றது .

ஆன்ம கண்ணாடி ஒளிருவதும் மங்குவதும் வந்து சேரும் விஷயங்களின் தன்மையை பொறுத்திருக்கின்றது.

மனித ஆன்மாவை தன் ஆன்மாவிலிருந்துதான் இறைவன் படைக்கின்றான். அனைத்து ஆன்மாக்களின் பிறப்பிடமாகிய அந்த மூல ஆதாரத்தை அப்படியே நமது ஆன்மா என்ற கண்ணாடியில் எதிரொலிப்பதுதான் நமது பணி.

நம் ஆன்மா பளீரென்ற தூய்மையுடன் விளங்கும் வரைதான் அதில் நமது மூல ஆதாரத்தை அப்படியே காண முடியும். அப்போது பல வகையான ஞானங்களும் நேர்வழியும் நல்லறிவும் மூலாதாரமாகிய இறைவனிடமிருந்து நமக்கு கையளிக்கப்படும்.

இதைத்தான் அஷ்ஷெய்ஹ் இமாம் கஸ்ஸாலி ( ரஹ் ) அவர்கள் பின் வருமாறு விளங்கச் செய்கின்றார்கள்.

அய்ந்து புலன்களும் ஓய்வு பெறும் தூக்க வேளையில் மனித மனமானது எந்த வித சலனமுமின்றி இருக்கின்றது. அமைதியான அந்த ஓய்ந்த தருணத்தில் வானத்தை நோக்கிய அதன் கதவுகள் திறக்கின்றன. அப்போது விதிகள் தீர்மானிக்கப்படும் அந்த மேல் உலகில் உள்ள சில பல எதிர்கால விஷயங்களை நேரடித் தன்மையிலோ அல்லது குறியீடாகவோ அறிந்து கொள்கின்றது மனித மனம் . அதுதான் தூக்கத்தின் போது நாம் காணும் கனவு. அந்தக்கனவிலும் கூட இந்த எதிர்கால முன் கூறல்களை அந்த ஆன்மாவால் சில சமயம் சரி வர அறிந்து கொள்ள இயலாமல் போகின்றது. காரணம் அந்த ஆன்மா விழித்திருக்கும் சமயம் அதன் மீது பதியும் பாவக்கறைகளினால் அதன் அறியும் திறனிலும் இறைவனுடனான தொடர்பாடலிலும் குறைபாடு ஏற்படுகின்றது.

ஆனால் தன் மனதை எப்போதும் மாசு மருவின்றி தூய்மையாக்கி வைத்துக் கொண்டிருக்கும் நல்ல ஆன்மாக்கள் கனவிலும் மட்டுமல்ல நேரடி வாழ்க்கையிலும் கூட நேர்மையான உள்ளுணர்வாலும் மறைவான ஞானத்தாலும் வழி நடத்தப்படுவார்கள் என்கின்றார்கள் இமாம் கஸ்ஸாலி (ரஹ்).

ஆனால் நாமோ நம்முடைய தவறுகளினாலும் பாவங்களினாலும் நமது ஆன்ம கண்ணாடியை கறை படியச்செய்து மங்கச்செய்கின்றோம். அப்போது இறைவன் என்ற மூல மெய்மையை நம்மால் உணரவும் அறியவும் இயலாமல் போய் விடுகின்றது.

இறைவனுடனான தனது தொடர்பில் பலவீனமாகும்போது அம்மனிதனை பல வித துன்பங்களும் துயரங்களும் நெருக்கடிகளும் சூழ்ந்து கொள்கின்றன.

சராசரி மனிதனின் இந்த இயலாமையை சிரமத்தை இறைவனிடம் முறையிடும் வழியை கீழ்வரும் வேண்டுதலில் பதிவு செய்கின்றார்கள் பேரான்மாவாகிய இறுதித்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள்.

அவர்கள் செய்த நீண்ட வேண்டுதலின் ஒரு பகுதியை பாருங்கள் :

இறைவா என் புகழை உயர்த்துமாறும் என் பாவச்சுமையைக் கீழே இறக்குமாறும் என் பணிகளை சீராக்குமாறும் என் மனத்தை தூய்மையாக்குமாறும் என் கற்பைக் காக்குமாறும் என் உள்ளத்தை ஒளிறச் செய்யுமாறும் என் பாவங்களை மன்னிக்குமாறும் உன்னிடம் நான் வேண்டுகின்றேன்... ஆமீன்

(நூல் : ஹாகிம் , தப்ரானி , மேற்கோள் நூல் : இறைவனிடம் கையேந்துங்கள், தாருஸ்ஸலாஹ்வெளியீடு).

**தூய்மையாக்கப்பட்ட ஒளிரும் ஒரு மனதிற்கு கிடைப்பது என்னென்ன ?**

அந்த ஆன்மாவை அழுத்திக் கொண்டிருந்த அதன் தலையிலுள்ள பாவச்சுமை இறக்கப்பட்டு பின்னர் மன்னிப்பின் மூலம் அந்த சுமை அழிக்கப்படுகின்றது. பின்னர் அந்த ஆன்மாவிற்கு கற்பொழுக்கமும் உயரக் கூடிய புகழும் மேலதிக பரிசுகளாக கிடைக்கின்றன.

எனவேதான் ஆன்ம தூய்மைக்கு இஸ்லாம் பல வழிமுறைகளையும் வழிபாடுகளையும் பேணச் சொல்கின்றது. அவற்றில் முக்கியமான இடத்தை பெறுவது நோன்பாகும்.

பராமரிப்பு பணிகளின்போது சாலைகளில் போக்குவரத்து தடை செய்யப் படுவதைப்போல அய்ந்து புலன்களின் வழியாக ஆன்மாவிற்குள் நடக்கும் போக்குவரத்தை நோன்பு காலத்தில் இறைவன் வலுவாக மட்டுப் படுத்துகின்றான். (பக்-15)

Published ... Mawatha, Colombo 09.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org